# 1

# பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

*அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் எப்போதுமில்லாதவாறான கொள்கைத் தலையீடுகளின் மூலம் 2020 இல் இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கிய சிக்கலான சவால்கள் செயற்றிறனாகத் தீர்க்கப்பட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் கசிவு விளைவுகளின் சமூகப்பொருளாதாரத் தாக்கம் மற்றும் இதன் விளைவான குடியிருப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சிகள் மீதான நீடித்த வடு போன்றவற்றை மட்டுப்படுத்துவதற்கு இந்தத் தலையீடுகள் அவசியமாகவிருந்தன. பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையை பேணுவதற்கும் இதன் மூலம் பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான கடுமையான அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கும் இவ்வகையான தலையீடுகள் தேவைப்பட்டன.*

*உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியுடன், 2020இல் உண்மை நியதிகளில் இலங்கைப் பொருளாதாரம் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்து சுதந்திரத்திற்குப் பின்னரான அதிகூடிய மந்தத்தினைப் பதிவுசெய்தது. கொவிட்-19இன் பரவலினைத் தடுக்கும் நோக்குடன் உள்நாட்டிலும் பன்னாட்டு ரீதியிலும் விதிக்கப்பட்ட நகர்வு மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய கட்டுப்பாட்டு வழிமுறைகள் சகல துறைகளிலும் உண்மைப் பொருளாதார நடவடிக்கைக்கு தடங்கலாகயிருந்தன. ஆண்டுப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட பாரிய சுருக்கமானது கட்டவாக்கம் மற்றும் தயாரிப்புத் துறைகளில் காணப்பட்ட கணிசமான மெதுவடைதலினால் உந்தப்பட்டது. போக்குவரத்து, ஏனைய தனியாள் பணிகள், தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணிகளில் உலகளாவிய நோய்த்தொற்றினால் உந்துதலளிக்கப்பட்ட மெதுவைடதலினால் பணிகள் நடவடிக்கைகளும் ஓர் குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமானது நேரகாலத்துடனான கொள்கை ஆதரவு மற்றும் சாதகமான வானிலை நிலைமைகளின் நேர்கணியமான தாக்கத்தினை விஞ்சிக் காணப்பட்டதனால் வேளாண்மைத் துறையும் ஆண்டுக்காலப்பகுதியில் ஓர் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. நுகர்வுச் செலவினம் ஒரு சிறிய வளர்ச்சியைக் காண்பித்த அதேவேளையில் முதலீட்டாளர்களின் மந்தமான மனப்பாங்கினைப் பிரதிபலித்து 2020இல் முதலீட்டுச் செலவினம் சுருக்கமடைந்தது. தேசிய சேமிப்புக்களின் வீழ்ச்சி முதலீட்டுச் செலவினத்தின் சுருக்கத்தினை விஞ்சியதனால், இது 2020இல் சேமிப்பு-முதலீட்டு இடைவெளியில் வீழ்ச்சியினை விளைவித்தது. இதேவேளையில், உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பிலான நிச்சயமற்றத்தன்மைகளுக்கு மத்தியில் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தின் வீழ்ச்சியுடன் 2009இற்குப் பின்னர் முதல் முறையாக தொழிலின்மை 5 சதவீதத்திற்கு மேல் அதிகரித்தது. நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுருக்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானம் என்பவற்றின் இணைந்த தாக்கத்தினால் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டில் ஐ.அ.டொ. 3,852 இலிருந்து 2020இல் ஐ.அ.டொ. 3,682 ற்கு வீழ்ச்சியடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றானது பொருளாதாரத்தின் மொத்த அளவிலும் ஓர் வீழ்ச்சியை விளைவித்து, 2019இல் ஐ.அ.டொ. 84.0 பில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொ. 80.7 பில்லியனாகக் காணப்பட்டது. ஒட்டுமொத்தச் சுருக்கத்திற்கு மத்தியிலும், வளர்ச்சிக்குச் சாதகமான இறை மற்றும் நாணயக் கொள்கைகளின் முன்னெடுப்புக்களுக்குப் பதிலிறுத்தும் வகையில் 2020இன் இரண்டாமரையாண்டுப் பகுதியில் பொருளாதாரம் மீட்சியின் வலுவான சமிக்ஞைகளைக் காண்பிக்க தொடங்கியது.*

1

*அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியினால் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளினால் ஆதரவுபெற்று, 2020 இல் வெளிநாட்டுத் துறை வலுவான சவால்களுக்கு எதிராகப் போராடியது. நகர்வு மீதான கட்டுப்பாடுகள் மற்றும் முடக்கல் வழிமுறைகளினால் ஏற்பட்ட பண்ட ஏற்றுமதிகளின் பாரிய வீழ்ச்சி விரைவாக வெற்றிகொள்ளப்பட்டு இலங்கையின் ஏற்றுமதியாளர்களின் தாக்குப்பிடிக்குந்தன்மையை எடுத்துக்காட்டியது. இதற்கேற்ப, ஒப்பீட்டளவில் ஓர் குறுகிய காலத்திற்குள் ஏற்றுமதி வருவாய்கள் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னரான மட்டங்களுக்கு மீண்டெழுந்தன. அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளுடன் கணிசமானளவு தாழ்ந்த உலகளாவிய பெற்றோலிய விலைகள் என்பன 2020 இல் இறக்குமதிச் செலவினத்தைக் குறைத்து வர்த்தகப் பற்றாக்குறையில் ஓர் குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினை விளைவித்தன. உலகளாவிய பயணக் கட்டுப்பாட்டுகளினால் சுற்றுலாத்துறை மிகவும் பாதிக்கப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் புதிய வேலை ஒழுங்குகளின் அதிகரிப்பினால் ஆதரவுபெற்று தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரப் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் பணிகளிலான வர்த்தகத்தின் நியதியில், வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ஓர் கணிசமான முன்னேற்றத்தைப் பதிவுசெய்தன. உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்தில் வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் 2020 காலத்தில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஓர் குறிப்பிடத்தக்க மீட்சியைப் பதிவுசெய்தன. இந்த அபிவிருத்திகள் மற்றும் கொள்கைகளினால் தூண்டப்பட்ட திருத்தங்களுடன், வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.2 சதவீதத்திலிருந்து 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.3 சதவீதத்திற்கு மேம்பட்டது. இதேவேளையில், உச்சமடைந்த உலகளாவிய நிச்சயமற்றத்தன்மைகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் பட்டியலிடப்பட்ட முதலீடு தொடர்பில் முதலீட்டாளர்களின் எச்சரிக்கையான அணுகல் என்பவற்றிற்கு மத்தியில் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மிதமடைந்தன. 2020 மாச்சு - ஏப்பிறல் மற்றும் 2020இன் பின்பகுதியிலும் அழுத்தங்கள் காணப்பட்டாலும், உரிய நேரத்திலான வழிமுறைகளினால் செலாவணி வீதத்தில் கணிசமான தளம்பல்கள் தவிர்க்கப்பட்டதுடன் 2020இல் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்மானம் 2.6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. திரண்ட அடிப்படையில், 2020இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியை மத்திய வங்கி உள்ளீர்த்ததுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 இறுதியில் ஐ.அ.டொ. 5.7 பில்லியனைப் பதிவுசெய்து 4.2 மாதங்களுக்கான இறக்குமதி உள்ளடக்கத்தை வழங்கின.*

*ஆண்டின் தொடக்கத்தில் நலிவானதொரு பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதனை நோக்கி இறைக்கொள்கை திசைதிருப்பப்பட்டது. இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் 2020இல் இறைத் தொழிற்பாடுகள் பாரிய சவால்களைச் சந்தித்ததுடன் இது எதிர்பார்த்ததைவிடக் குறைவான அரசிறைத் திரட்டல் மற்றும் உயர்ந்த மீண்டெழும் செலவினத்தினை விளைவித்தன. வரையறுக்கப்பட்ட இறை இடைவெளி அத்துடன் பொருளாதார நடவடிக்கைகள் மீது உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் போன்றவற்றினால் மூலதனச் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டது. இறைத் தொழிற்பாடுகள் மீதான அதிகரித்த அழுத்தத்தைப் பிரதிபலித்து விரிவடைந்த நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் ஆரம்ப நிலுவையுனும் 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.1 சதவீதமாக பதிவுசெய்யப்பட்ட திரண்ட பற்றாக்குறை நிலுவையுடனும் திரண்ட இறை விளைவு முன்னர் எதிர்பார்த்ததைவிட நலிவாகவிருந்தது. பாதகமான உலகளாவிய நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் நாட்டிற்கான தரமிடல் முகவர்களினால் இலங்கையின் தரமிடலின் கீழ்நோக்கிய மாற்றம் என்பவற்றிற்கு மத்தியில் 2020இல் வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகு வழியானது இறைத்துறை அழுத்தங்களினை மோசமாக்கியது. நடுத்தர காலத்தில் வெளிநாட்டில் தங்கியிருப்பதனைக் குறைப்பதனை இலக்காகக்கொண்ட அரசின் தெளிவான நிதியிடல் உபாயம் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகு வழியைப் பிரதிபலித்து 2020இல் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையின் நிதியிடல் உள்நாட்டு மூலங்களிலிருந்து பூர்த்திசெய்யப்பட்டது. விரிவடைந்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் அதன் விளைவான பெருமளவிலான நிதியிடல் தேவைப்பாடுகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுருக்கத்தினைப் பிரதிபலித்து மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் 2019 இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 86.8 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 101.0 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இருந்தபோதிலும், மத்திய அரசின் மொத்தப் படுகடனில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் ஒப்பீட்டளவான பங்கு 2019 இறுதியில் 47.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 40.0 சதவீதத்திற்கு*

குறிப்பிடத்தக்களவினால் வீழ்ச்சியடைந்தது. பாதகமான ஊகத்துக்கு மத்தியில், அரசாங்கம் தனது அப்பழுக்கற்ற படுகடன் தீர்ப்பனவுப் பதிவினைத் தொடர்ந்து பேணியது. வரையறுக்கப்பட்ட இறை இடைவெளிக்கு மத்தியிலும், மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் துறையின் நிதியியல் ஆதரவுடன் உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையான இன்னல்களை சந்திக்கும் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அரசாங்கம் தொடர்ந்து நிவாரணம் வழங்கியது.

இதே வேளையில், மிதமான பணவீக்க அழுத்தங்கள் மற்றும் நன்கு உறுதி நிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பன மத்திய வங்கி 2020இல் தனது நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைக் கணிசமாகத் தளர்த்துவதற்கு தேவையான இடைவெளியை வழங்கின. உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியில் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கான நிதிகளின் செலவினைக் குறைத்தல் பணச்சந்தையில் போதியளவு திரவத்தன்மையினை உறுதிப்படுத்தல் மற்றும் நிதியியல் முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டுக்கு ஆதரவளித்தல் போன்றவற்றில் இந்த வழிமுறைகள் கவனம் செலுத்தின. வரலாற்றிலேயே குறைவான மட்டங்களுக்கு முக்கிய கொள்கை வட்டி வீதங்களை மொத்தமாக 250 அடிப்படைப் புள்ளிகளினால் கீழ்நோக்கித் திருத்தியமை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்பு பொறுப்புக்களுக்கு ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதத்தினை மொத்தமாக 300 அடிப்படை புள்ளிகளினால் குறைத்தமை மற்றும் வங்கி வீதத்தினை 650 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தமை போன்றவற்றினால் மத்திய வங்கி 2020இல் தீவிரமாகத் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. மேலும், நோய்ப்பரம்பலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு தொழிற்படு மூலதனத்தினை வழங்குவதனை இலக்காகக்கொண்ட பல சலுகை அடிப்படையிலான கடன் செயற்றிட்டங்களை மத்திய வங்கி அறிமுகஞ்செய்தது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் தொடர்பான கொடுகடன் வீதங்களின் வீழ்ச்சியை விரைவுபடுத்துவதற்கு மத்திய வங்கி நேரடியான வழிமுறைகளையும் தார்மீக வழிமுறைகளையும் பயன்படுத்தியது. இதற்கேற்ப, தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2020இன் இரண்டாமரைப்பகுதியில் மீண்டெழத் தொடங்கியது. இதேவேளையில், உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் அரசாங்கம் தனது இறைத் தொழிற்பாடுகளை தடையற்ற முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான நிதியிடலை மத்திய வங்கியும் வங்கித்தொழில்துறையும் வழங்கின. இதன் விளைவாக, வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் 2020இல் கணிசமாக அதிகரித்து, ஏனைய துறைகளுக்கான கொடுகடனின் விரிவாக்கத்துடன் இது விரிந்த பண நிரம்பலில் ஓர் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கத்தினை விளைவித்தது. இதேவேளையில், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வைப்பாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கும் நோக்குடனான பல வழிமுறைகளை அறிமுகஞ்செய்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை மத்திய வங்கி பேணிய வேளையில் உலகளாவிய நோய்த்தொற்றினால் பொருளாதாரத்திற்குத் தேவைப்பட்ட அசாதாரணமான ஆதரவினை நிதியியல் துறை வழங்குவதனை இயலச்செய்தது.

உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து எழும் குறுங்கால பாதிப்படையக்கூடியதன்மையைத் தீர்ப்பது ஓர் உடனடித் தேவைப்பாடாக இருக்கும் வேளையில் எதிர்வரும் காலப்பகுதியில் நாட்டின் நீண்ட கால வளர்ச்சி உள்ளாற்றலை மட்டுப்படுத்துகின்ற விடாப்பிடியான அமைப்பியல் ரீதியான தடைகளைத் தீர்த்துவைப்பதும் அவசியமாகும். குறிப்பாக, வேளாண்மை துறை மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி கைத்தொழில்களினூடாக மூலம் அரசாங்கத்தின் நவீன பொருளாதார கொள்கை கட்டமைப்பானது வளர்ச்சிக்கான தடைகளைத் தீர்த்து உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் எனவும் இதே வேளையில் படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரத்தின் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் நீண்ட கால உறுதிப்பாட்டினை எய்துவதற்கு ஓர் புதிய அணுகுமுறைக்கான தேவைப்பாட்டினை உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட சவால்கள் மீள்வலியுறுத்தின. இந்த கட்டமைப்பிற்கு ஆதரவாக, அரசாங்கம் தனது வளர்ச்சிக்கு சாதகமான இறைக் கொள்கை நிலைப்பாட்டினை தொடரும் எனவும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் சீர்திருத்தங்களை முனைப்பாக நடைமுறைப்படுத்தும் அதே வேளையில் நடுத்தர காலத்தில் இறைத் திரட்சியை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ந்தும் கடப்பாட்டுடன் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளையில், பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் கடப்பாடுடன் இருப்பதுடன் இதன்மூலம் நடுத்தரகாலத்தில் பொருளாதாரத்தின் உயர் வளர்ச்சி உள்ளாற்றலை நோக்கிய பயணத்திற்கு வசதியளிக்கும்.

அட்டவணை 1.1
பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2016-2020)

| குறிகாட்டி | அலகு | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 4.5 | 3.6 | 3.3 (அ) | 2.3 (ஆ) | -3.6 |
| நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 11,996 | 13,328 | 14,291 (அ) | 15,013 (ஆ) | 14,973 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,886 | 4,077 | 4,057 (அ) | 3,852 (ஆ) | 3,682 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.8 | -11.0 | -11.8 (அ) | -9.5 | -7.4 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -2.1 | -2.6 | -3.2 | -2.2 | -1.3 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | -500 | 2,068 | -1,103 | 377 | -2,328 |
| வெளிநாட்டு அலுவர்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 6,019 | 7,959 | 6,919 | 7,642 | 5,664 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.6 | -0.7 | -1.2 | -3.6 (ஊ) | -7.9 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.2 | 0.02 | 0.6 | -3.6 (ஊ) | -4.6 |
| திரண்ட இறை நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.3 | -5.5 | -5.3 | -9.6 (ஊ) | -11.1 |
| மத்திய அரச படுகடன் (எ) | மொ.உ.உ. இன் % | 79.0 | 77.9 | 84.2 | 86.8 | 101.0 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 18.4 | 16.7 | 13.0 | 7.0 | 23.4 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 21.6 | 14.7 | 15.9 | 4.2 | 6.5 |
| ஆண்டுச் சாராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.0 | 6.6 | 4.3 | 4.3 | 4.6 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ மதிப்பீடுகளை (அடித்தள ஆண்டு 2010) அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2021 மார்ச்சு 16 கிடைக்கப்பெற்ற 2018 மற்றும் 2019ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடப்பட்டிருந்தன.
(எ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைனசிற்கு முதலீடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01 முதிர்ச்சியானது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01 அன்று முதிர்ச்சியானதுடன் தற்போதைய வெளிநின்ற தொகை ரூ. 56,662 மில்லியனதாகும்) என்பவை உள்ளடங்கலாக.
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

## 1.2 2020இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்[1]

### உண்மைத்துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2020இல் இலங்கையின் பொருளாதாரம் சுருக்கமடைந்தது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக தேசிய கணக்கீட்டு மதிப்பீடுகளின்படி, இலங்கையின் பொருளாதாரம் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. கொவிட்-19 நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த அமுல்படுத்தப்பட்ட நாடளாவிய முடக்கல் நடவடிக்கைகள் காரணமாக ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஏற்பட்ட ஆண்டுக்காண்டு அடிப்படையிலான 16.4 சதவீதச் சுருக்கத்தினால் 2020இன் ஒட்டுமொத்த சுருக்கம் உந்தப்பட்டது. இருப்பினும், ஒத்தோபர்-நவெம்பர் காலப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலை மூலம் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்கு மத்தியிலும், ஆண்டின் இரண்டாமரைக் காலப்பகுதியில் பொருளாதாரம் மீட்சியடைந்து ஆண்டுக்காண்டு அடிப்படையில் 1.3 சதவீத உண்மை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2020இல் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளும் (வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி 2.4 சதவீதம், கைத்தொழில் 6.9 சதவீதம் மற்றும் பணிகள் 1.5 சதவீதம்) சுருக்கமடைந்தன. வேளாண்மைத் துறையில், கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியியல் வளம் மற்றும் காடாக்கல்

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2021 நடுப்பகுதியில் மீள்தளமிடப்பட்ட தேசிய கணக்கீட்டு மதிப்பீடுகளை வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய தள ஆண்டாக 2015 இருப்பதால், இம்மீள்தளமிடலானது 2015 முதல் தேசிய கணக்குகளில் திருத்தங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய விகிதங்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் மீள்விளக்கத்திற்கான தேவையையும் ஏற்படுத்தும்.

வரைபடம் 1.1
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு




*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 1.2

**நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)**

| பொருளாதார நடவடிக்கை | ரூ.மில்லியன் | | மொ.உ.உ இன் பங்கு (%) | | வளர்ச்சி (%) | | வளர்ச்சிக்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **686,412** | **669,802** | **6.9** | **7.0** | **1.0** | **-2.4** | **0.1** | **-0.2** |
| வேளாண்மை மற்றும் காடாக்கல் | 573,026 | 575,280 | 5.8 | 6.0 | 2.1 | 0.4 | 0.1 | 0.0 |
| மீன்பிடி | 113,386 | 94,522 | 1.1 | 1.0 | -4.3 | -16.6 | -0.1 | -0.2 |
| **கைத்தொழில்** | **2,608,211** | **2,427,844** | **26.4** | **25.5** | **2.6** | **-6.9** | **0.7** | **-1.8** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 231,893 | 202,873 | 2.3 | 2.1 | 2.8 | -12.5 | 0.1 | -0.3 |
| தயாரிப்பு | 1,540,969 | 1,481,305 | 15.6 | 15.5 | 1.8 | -3.9 | 0.3 | -0.6 |
| மின்வலு, எரிவாயு, நீர் மற்றும் கழிவு கையாளல் | 151,978 | 150,702 | 1.5 | 1.6 | 4.9 | -0.8 | 0.1 | -0.0 |
| கட்டடவாக்கம் | 683,371 | 592,963 | 6.9 | 6.2 | 4.0 | -13.2 | 0.3 | -0.9 |
| **பணிகள்** | **5,678,485** | **5,595,469** | **57.5** | **58.7** | **2.2** | **-1.5** | **1.3** | **-0.8** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கைகள் | 2,273,094 | 2,159,819 | 23.0 | 22.7 | 1.7 | -5.0 | 0.4 | -1.1 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 73,378 | 83,444 | 0.7 | 0.9 | 15.7 | 13.7 | 0.1 | 0.1 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட உரிமை உள்ளடங்கலான உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 1,398,938 | 1,469,191 | 14.2 | 15.4 | 2.4 | 5.0 | 0.3 | 0.7 |
| தொழிற்தகைமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள் | 1,128,115 | 1,061,637 | 11.4 | 11.1 | 2.2 | -5.9 | 0.2 | -0.7 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 804,959 | 821,377 | 8.1 | 8.6 | 2.3 | 2.0 | 0.2 | 0.2 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்** | **8,973,108** | **8,693,114** | **90.8** | **91.2** | **2.2** | **-3.1** | **2.0** | **-2.8** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | 910,242 | 837,491 | 9.2 | 8.8 | 2.4 | -8.0 | 0.2 | -0.7 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **9,883,350** | **9,530,606** | **100.0** | **100.0** | **2.3** | **-3.6** | **2.3** | **-3.6** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | -281,083 | -405,185 | | | -6.3 | -44.2 | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **9,602,267** | **9,125,421** | | | **2.1** | **-5.0** | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டு) கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மற்றும் மரம் தறித்தல் நடவடிக்கைகள் உலகளாவிய நோய்த்தொற்றால் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக குறிப்பிட்டளவில் சுருக்கமடைந்த அதேவேளையில், 2019இல் நிலவிய வறண்ட காலநிலை நிலைமைகளின் காலங்கடந்த விளைவுகளால் எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கையும் சுருக்கமடைந்தது. மறுபுறம், உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கை முயற்சிகளால் ஆதரவளிக்கப்பட்டு மரங்கறிகள், அரிசி, பழங்கள் மற்றும் அரிசி தவிர்ந்த ஏனைய தானியப் பயிர்ச்செய்கைத் துணைத் துறைகள் 2020இல் ஆரோக்கியமான செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன. கைத்தொழில் துறைக்குள் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்புக்கள் 2020இல் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருப்பினும், கட்டடவாக்கம், புடவைகள் தயாரிப்பு, ஆடைகள், தோல் மற்றும் தோலுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறைகளின் மட்டுப்படுத்தப்பட்ட செயலாற்றமானது 2020இல் கைத்தொழில் நடவடிக்கைகளின் சுருக்கத்திற்கு முக்கியமாகப் பங்காற்றியிருந்தன. பணிகள் துறையில், நிதியியல் பணிகள் மற்றும் துணை நிதியியல் பணிகள், தொலைத்தொடர்பு மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2020இல் வளர்ச்சியடைந்தன. இதன்மூலம் 2020 காலப்பகுதியில் நகர்விலான கட்டுப்பாடுகள், சமூக இடைவெளி நடவடிக்கைகள் மற்றும் எல்லை மூடப்பட்டமை என்பவற்றின் மூலம் பாதிப்படைந்த களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலான பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து, ஏனைய தனியாள் பணிகள் மற்றும் தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைத் துணைத் துறைகளின் சுருக்கத்தின் விளைவுகள் நலிவடைந்தன. 2020இன் குறைந்த வரி வருமானம் மற்றும் அதிகரித்த உற்பத்தி மானியங்களின் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மானியங்களைக் கழித்த வரிகள் கூறானது 2020இல் 8.0 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.

**பெயரளவு நியதிகளில், இலங்கையின் பொருளாதாரம் முன்னைய ஆண்டின் 5.1 சதவீத விரிவாக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2020இல் 0.3 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.** இது, ரூபாவின் தேய்மானத்துடன் சேர்ந்து பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவை முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 84.0 பில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 80.7 பில்லியனாகக் குறைவடையக் காரணமாகியதுடன் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2019இன் ஐ.அ.டொலர் 3,852 இலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 3,682 ஆக வீழ்ச்சியை ஏற்படுத்தியது. செலவினப் பக்கத்தில், இறுதி நுகர்வுச் செலவினமானது 2019இன் 7.4 சதவீத வளர்ச்சியொன்றுடன் ஒப்பிடுகையில் 2020இல் 2.1

1

அட்டவணை 1.3

நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

| விடயம் | ரூ.பில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ இன் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2019(இ) | 2020 | 2019(இ) | 2020 | 2019(இ) | 2020 |
| **1. உள்நாட்டு கேள்வி** | **15,932.4** | **15,924.7** | **3.8** | **0.0** | **106.1** | **106.4** |
| 1.1 நுகர்வு | 11,902.2 | 12,146.2 | 7.4 | 2.1 | 79.3 | 81.1 |
| தனியார் | 10,485.2 | 10,589.7 | 7.3 | 1.0 | 69.8 | 70.7 |
| பொது | 1,417.0 | 1,556.5 | 8.1 | 9.8 | 9.4 | 10.4 |
| 1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 4,030.2 | 3,778.5 | -5.5 | -6.2 | 26.8 | 25.2 |
| **2. தேறிய வெளிநாட்டு கேள்வி** | **-919.4** | **-951.7** | **13.4** | **-3.5** | **-6.1** | **-6.4** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 3,472.3 | 2,483.1 | 5.5 | -28.5 | 23.1 | 16.6 |
| பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி | 4,391.7 | 3,434.8 | 0.9 | -21.8 | 29.3 | 22.9 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2)** | **15,013.0** | **14,973.0** | **5.1** | **-0.3** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1)** | **3,110.8** | **2,826.8** | **-2.9** | **-9.1** | **20.7** | **18.9** |
| தனியார் | 3,644.5 | 4,007.2 | -8.0 | 10.0 | 24.3 | 26.8 |
| பொது | -533.7 | -1,180.4 | -214.4 | -121.2 | -3.6 | -7.9 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (ஈ)** | **-432.2** | **-405.2** | **-10.9** | **6.3** | **-2.9** | **-2.7** |
| **6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)** | **1,030.7** | **1,154.4** | **3.1** | **12.0** | **6.9** | **7.7** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6)** | **3,709.2** | **3,576.0** | **-2.7** | **-3.6** | **24.7** | **23.9** |
| **8. சேமிப்பு - முதலீடு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டு சேமிப்பு - முதலீடு (4-1.2) | -919.4 | -951.7 | | | -6.1 | -6.4 |
| தேசிய சேமிப்பு - முதலீடு (7-1.2) | -321.0 | -202.5 | | | -2.1 | -1.4 |
| **9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ)** | **-321.0** | **-202.5** | | | **-2.1** | **-1.4** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டு) மொ.உ.உ மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதீப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

சதவீத மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. குறிப்பாக, வீட்டுத்துறை நுகர்வுச் செலவினங்களின் வளர்ச்சியானது முன்னைய ஆண்டின் 7.3 சதவீத வளர்ச்சியிலிருந்து 2020இல் 1.0 சதவீதத்திற்கு மிதமடைந்திருந்தது. மறுபக்கத்தில் பெயரளவு நியதிகளில் அரச நுகர்வுச் செலவினம் 2019இல் 8.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020 காலப்பகுதியில் 9.8 சதவீதம் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக, நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நுகர்வுச் செலவினத்தின் பங்கானது 2019இன் 79.3 சதவீதத்திலிருந்து 2020இல் 81.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, நடைமுறைச் சந்தை விலைகளில் 2019இல் 5.5 சதவீதச் சுருக்கத்தைப் பதிவுசெய்த மொத்த மூலதனவாக்கமானது 2020இல் 6.2 சதவீதத்தினால் மேலும் சுருக்கமடைந்தது. பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த மூலதனவாகத்தின் பங்கானது 2019இன் 26.8 சதவீதத்திலிருந்து 2020இல் 25.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. உலகளாவிய கேள்வியின் மெதுவடைவு, சுற்றுலாவைக் கடுமையாக பாதித்த எல்லை மூடல்கள் மற்றும் வெளிநாட்டுத் துறையின் அழுத்தங்களை தளர்த்தும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவைப் பிரதிபலிக்கும் வகையில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது நடைமுறை விலைகளில் 2019இன் 13.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.5 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. தனியார் சேமிப்புக்கள் அதிகரித்த போதிலும் அரசாங்கத்தின் சேமிப்பின்மை காரணமாக பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2019இன் 20.7 சதவீதத்திலிருந்து 2020இல் 18.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. 2020இல் உள்நாட்டுச் சேமிப்புக்களின் வீழ்ச்சியானது மொத்த மூலதனவாக்கத்தின் வீழ்ச்சியை விஞ்சியதைப் பிரதிபலிக்கும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2019இன் -6.1 சதவீதத்தில் இருந்து 2020இல் -6.4 சதவீதமாக விரிவடைந்தது. இருப்பினும், தேறிய முதலாந்தர வருமானம் மற்றும் உலகின்

வரைபடம் 1.2

சேமிப்பு, முதலீடு மற்றும் சேமிப்பு-முதலீடு இடைவெளி (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.3
தொழிலின்மை வீதம்




(அ) 2020இல் நான்கு காலாண்டுகளின் சராசரி

*மூலம் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

ஏனைய பாகங்களிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் என்பவற்றின் மேம்பாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்களின் வீழ்ச்சியை 2019இன் 24.7 சதவீதத்திலிருந்து 2020இன் 23.9 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தின. உள்நாட்டு முதலீட்டில் ஏற்பட்ட கடுமையான சுருக்கமானது தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளியை 2019இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக -2.1 சதவீதத்திலிருந்து 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக - 1.4 சதவீதத்திற்கு மேம்படுத்தியது.

**தொழிலின்மை வீதம் மற்றும் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகள் அவதானிக்கப்பட்டன.** அதற்கிணங்க, தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 4.8 சதவீதத்திலிருந்து 2020இல் 5.5 சதவீதமாக அதிகரித்தது. ஆண்கள் மற்றும் பெண்களிடையேயான தொழிலின்மை வீதங்கள் 2019 இன் முறையே 3.3 சதவீதம் மற்றும் 7.4 சதவீதத்திலிருந்து 2020 இல் முறையே 4.0 சதவீதம் மற்றும் 8.4 சதவீதமாக அதிகரித்தன. அதேவேளை, கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த விதிக்கப்பட்ட நகர்வு மீதான கட்டுப்பாடுகளுடன் தொழிற்படைப் பங்கேற்பு வீதமானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 52.3 சதவீதத்திலிருந்து 2020இல் 50.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்கள் மற்றும் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதங்கள் 2019இன் முறையே 73.0 சதவீதம் மற்றும் 34.5 சதவீதத்திலிருந்து 2020இல் முறையே 71.9 சதவீதம் மற்றும் 32.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த தொழில்நிலையில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணித் துறைகள் முறையே 27.1 சதவீதம், 26.9 சதவீதம் மற்றும் 46.0 சதவீதத்திற்கு வகைகூறின.

**2020இல் முதன்மைப் பணவீக்கம் விரும்பத்தக்க வீச்சான 4 - 6 சதவீதத்திற்குள் தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளையில் மையப் பணவீக்கம் ஆண்டு முழுவதும் குறைவாகக் காணப்பட்டது.** குறிப்பிட்ட சில முக்கிய உணவுப் பண்டங்களின் அதிகரித்த விலைகள் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட வழங்கல் இடையூறுகளால் உணவுப் பணவீக்கத்தின் மேல் நோக்கிய அழுத்தங்களிற்கு மத்தியிலும் மந்தமான கேள்வி நிலைமைகள், நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள்[2] மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளிற்கான கீழ் நோக்கிய திருத்தங்கள் என்பன பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட மட்டத்தில் பேண உதவிபுரிந்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் (கொ.நு.வி.சு 2013 = 100) அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கமானது 2020இன் ஆரம்பத்தில் விரும்பத்தக்க வீச்சின் மேல் எல்லையைச் சுற்றிக் காணப்பட்டதுடன் 2020 பெப்புருவரியளவில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.2 சதவீதத்திற்கு விரைவடைந்தது. எனினும், உணவு மற்றும் உணவல்லா பணவீக்கத்தின் மிதப்படுத்தலுடன் ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமானது குறைவடைந்து 2019 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியளவில் 4.2 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. உணவுப் பண்டங்களிற்கு ஒப்பீட்டளவில் அதிக நிறையிடலைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (தே.நு.வி.சு. 2013 = 100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கத்தின் போக்கைப் பெருமளவில் பின்பற்றியது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2020 பெப்புருவரியில் காணப்பட்ட உச்சமட்டமொன்றான 8.1 சதவீதத்திலிருந்து படிப்படியாகக் குறைவடைந்து 2019 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 4.6 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கத்தின் சரிவு மற்றும் 2020இன்

2 கூட்டுறவு மற்றும் வீட்டுத் துறைகளை உள்ளடக்கி மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கை அளவீட்டின் அடிப்படையிலானது.

வரைபடம் 1.4
முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)




*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

ஒத்த காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உயர் பணவீக்கத் தளத்தின் புள்ளிவிபர விளைவு என்பவற்றால் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2021இன் முதல் இரண்டு மாதங்களில் பணவீக்க இலக்கிடலின் தாழ்ந்த மட்டத்திலும் குறைவாகக் காணப்பட்டது. அதற்குப் பின்னர் இலக்கிடல் எல்லைக்குள் திரும்பி, 2021 மாச்சு மாதத்தில் 4.1 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கத்தின் நகர்வுகளைப் பின்பற்றி, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2021 மாச்சு மாதத்தில் 5.1 சதவீதத்தை அடைந்தது. அதேவேளை, தளம்பலடையும் உணவு, வலு மற்றும் போக்குவரத்துத் துணை வகைகளை முதன்மைப் பணவீக்கத்திலிருந்து விலக்கி, பருவகால விலைத் தளம்பல்களையும் நிருவாகரீதியில் நிர்ணயிக்கப்பட்ட முக்கிய விலைகளின் தாக்கங்களையும் நீக்குவதன் மூலம் அடிப்படை பணவீக்க போக்குகளை பிரதிபலிக்கும் வகையில் கணிப்பிடப்படும் மையப் பணவீக்கமானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அடிப்படையின்படி 2020 முழுவதும் தொடர்ந்தும் மந்தமாகவே காணப்பட்டது. அதற்கிணங்க, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2019இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 4.8 சதவீதம் மற்றும் 5.2 சதவீதம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில், 2020 இறுதியில் முறையே 3.5 சதவீதம் மற்றும் 4.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2021 மாச்சு இறுதியில் 3.1 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்ட அதேவேளை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2021 மாச்சில் 4.3 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் போது முன்னெப்பொழுதுமில்லாத வகையில் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில், அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் வழிமுறைகளால் ஆதரவளிக்கப்பட்டு இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது தாக்குபிடிக்கும் தன்மையைக் காட்டியது.** 2020இன் இரண்டாம் காலாண்டில் கணிசமாக குறைவடைந்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளானது எதிர்பார்க்கப்பட்டதை விட விரைவாக மீட்சியடைந்து ஆண்டின் இறுதியில் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய நிலையை அடைந்தது. முக்கியமாக, இவ் ஆண்டுப்பகுதியில் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகளின் தாக்கம் மற்றும் குறைந்த பன்னாட்டு பெற்றோலிய விலைகளைப் பிரதிபலித்து 2020இல் வணிகப்பொருள் இறக்குமதிகள் கணிசமாக குறைவடைந்தன. இதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் வர்த்தகப் பற்றாக்குறையானது ஐ.அ.டொலர் 1,989 மில்லியனினால் ஐ.அ.டொலர் 6,008 மில்லியனுக்கு குறைந்தது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 இல் பணிகள் கணக்கின் மிகையானது கணிசமானளவில் குறைந்து முக்கியமாக சுற்றுலாவின் வருவாய்கள் மீது உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. எனினும், 2020 ஆம் ஆண்டின்போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரப் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான பணிகள் தடையின்றி செயற்பட்டதன் மூலம் கணனிப் பணிகள் துறையானது ஆரோக்கியமான வளர்ச்சியைத் தொடர்ந்து பதிவு செய்தது. ஒட்டுமொத்தமாக, பணிகள் கணக்கின் திரண்ட மிகை 2019இன் ஐ.அ.டொலர் 2,849 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 819 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. முதலாந்தர வருமானக் கணக்குகளின் பற்றாக்குறை 2019இன் ஐ.அ.டொலர் 2,462 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 2,101 மில்லியனுக்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் பங்குலாபக் கொடுப்பனவுகள் மற்றும் மீள் முதலீடு செய்யப்பட்ட வருவாய்களின் குறைப்பு, வெளிநாட்டு கடன்களின் மீதான வட்டி செலவினங்கள் மற்றும் அரச பிணையங்களின் வெளிநாட்டு முதலீடுகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளின் குறைப்பு போன்றவை முக்கிய காரணங்களாகும். உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்தில் ஒரு பின்னடைவைப் பதிவு செய்த தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் உறுதியான மீட்சியடைந்து ஆரோக்கியமான வளர்ச்சியை பதிவு செய்து 2019இல் ஐ.அ.டொலர் 5,766 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இல் ஐ.அ.டொலர் 6,207 மில்லியனுக்கு இரண்டாந்தர வருமான கணக்கு மிகையைப் பலப்படுத்தின. இவ்வாறான அபிவிருத்திகளுடன் வெளிநாட்டு

வரைபடம் 1.5
சென்மதி நிலுவை




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இன் ஐ.அ.டொலர் 1,843 மில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதமாக), 2020இல் ஐ.அ.டொலர் 1,083 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 1.3 சதவீதமாக) குறுக்கமடைந்தது. நிதியியல் கணக்கின் உட்பாய்ச்சல் 2020இல் தொடர்ந்தும் மிதமாக காணப்பட்டது. ஆண்டுகாலத்தில் நிதியியல் கணக்கின் முக்கிய உட்பாய்ச்சல்கள் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய நிதியிடல் வசதி, சார்க் நாடுகளுக்கான நாணய பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாட்டின் கட்டமைப்பின் கீழ் யூலை 2020 இல் இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 400 மில்லியன் போன்றவற்றினை உள்ளடக்கியிருந்தன. நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளுக்கான வெளிநாட்டு கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீதான உட்பாய்ச்சல்கள் 2019இன் ஐ.அ.டொலர் 1,189 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 670 மில்லியனாகக் காணப்பட்டன.

**வெளிநாட்டு நிதியிடலை திரட்டுவதில் சவால்கள் இருந்தபோதும், இலங்கையானது அதன் அப்பழுக்கற்ற படுகடன் பணிக்கொடுப்பனவினைத் தொடர்ந்தது.** 2020 ஒத்தோபரில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை இலங்கை வெற்றிகரமாக செலுத்தியது. பன்னாட்டு தரமிடல் முகவர்களின் முக்கிய கரிசனைகளில் ஒன்றான நாட்டினுடைய வெளிநின்ற வெளிநாட்டு படுகடன், 2019இன் ஐ.அ.டொலர் 54.8 பில்லியனிலிருந்து 2020ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 49.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலையில் கணிசமான வீழ்ச்சி, 2020 ஒத்தோபரில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி, வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வதிவுள்ளோர் உடமைகளின் அதிகரிப்பு, மற்றும் ஆண்டுக்காலத்தில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களின் வதிவற்றோர் உடமைகளின் வீழ்ச்சி போன்றன காரணமாகும்.

**உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்திலும் மீண்டும் ஆண்டின் இறுதியை நோக்கியும் இடைக்கிடையான தளம்பல்கள் இருந்தபோதும் நாணயமாற்று வீதமானது 2020 ஆண்டு காலப்பகுதியில் ஒப்பீட்டளவில் நிலையாக காணப்பட்டது.** 2020ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து நாணயமாற்று வீதத் தளம்பல்கள் மீண்டும் தோன்றுவதற்கு நாட்டிற்கான தரமிடலின் குறைப்பு மற்றும் குறைந்த வெளிநாட்டு செலாவணி திரவத்தன்மை போன்ற காரணங்களினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் ஊக சந்தை நடத்தைகள் மூலம் உந்தப்பட்டன. உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் தொடர்ந்தும் தள ஆண்டின் (2017 = 100) மட்டத்திற்குக் கீழே விளங்கி, வெளிநாட்டுப் போட்டித்தன்மையைச்

வரைபடம் 1.6

செலாவணி வீதமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

சுட்டிக்காட்டியது. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களின் மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019ஆம் ஆண்டின் இறுதியில் பதியப்பட்ட ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இன் இறுதியில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. ஒட்டுமொத்தமாக, 2020 காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச்சந்தையிலிருந்து இலங்கை மத்திய வங்கியானது வெளிநாட்டு செலாவணியை ஈர்த்துக்கொள்ள முடிந்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றல்களின் ஒரு பங்கினை வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்பதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதனால் ஆதரவளிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை ஈர்த்துக்கொண்டிருக்கிறது.

## இறைத் துறை அபிவிருத்திகள்

**ஆண்டின் ஆரம்பத்தில், மந்தமான பொருளாதாரத்தைத் தூண்டும் இலக்குடன் இறைக்கொள்கையை வழிநடத்தும் உறுதியான தீர்மானமொன்றினை அரசாங்கம் மேற்கொண்டிருந்த போதிலும், உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக இறைத்துறையின் பெறுபேறு தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.** பல சவால்களுக்கு மத்தியில், பொருளாதார நடவடிக்கையின் துரிதமான மீட்சியை உறுதிப்படுத்துவதற்கும், உச்ச வளர்ச்சிப் பாதையில் பொருளாதாரத்தை மீளத்திருப்புவதற்கும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிப்புற்றிருந்த வியாபாரங்களுக்கும், தனிநபர்களுக்கும் ஆதரவு வழங்குவதை அரசாங்கம் தொடர்ந்தது. பாராளுமன்ற அனுமதிக்காக ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவது 2020ஆம் ஆண்டின் நவம்பர் வரை தாமதமடைந்ததன் காரணமாக 2020ஆம் ஆண்டில், கணக்கு வாக்கெடுப்பு மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரத்துடன்

1

வரைபடம் 1.7
இறைத்துறை செயலாற்றத்தின் திரட்டு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலம்:* நிதி அமைச்சு

இறைத் தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பொருளாதார நடவடிக்கையின் சுருக்கத்தின் காரணமாகவும் 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வரித்திருத்தங்களினூடாக அமுலாக்கப்பட்ட இறைத் தூண்டல் நடவடிக்கைகளின் காரணமாகவும் பலயீனமடைந்த அரசிறை பாய்ச்சலினால் 2020ஆம் ஆண்டில் அரசிறை மிதமடைந்தது. அரசிறையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இல் காணப்பட்ட 12.6 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதத்திற்கு குறைவடைந்து, அரசிறைத் திரட்டலில் துரிதமான குறைவினை வெளிப்படுத்தியிருந்தது. செலவினங்களின் நோக்கில், ரூ.422.6 பில்லியன் நிலுவைத் தொகை கொடுப்பனவினால் ஏற்படும் செலவினங்களை 2020ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆண்டிற்கு மாற்றியதனூடாக நிதி அமைச்சு இறைப்புள்ளிவிபரங்களில் திருத்தங்களை மேற்கொண்டது. அதன்படி, மொத்த செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இல் காணப்பட்ட 22.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் 20.3 சதவீதத்தினை பதிவு செய்திருந்தது. எவ்வாறாயினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2019இல் காணப்பட்ட 16.1 சதவீதத்திலிருந்து 2020இல் 17.0 சதவீதத்திற்கு உயர்வடைந்தமைக்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், மானியங்கள், சன்மானங்கள் மற்றும் வட்டிச்செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே பிரதான காரணமாகும். மீண்டெழும் செலவினத்தின் எழுச்சியின் தாக்கத்தினை ஈடுசெய்து மூலதனச் செலவினமானது மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக 2019இல் காணப்பட்ட 6.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் 3.3 சதவீதமாக குறிப்பிடத்தக்களவில் சுருங்கியிருந்தது.

**உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்கள் 2020ஆம் ஆண்டில் முக்கியமான இறைநிலுவைகள் குறிப்பிடத்தக்களவில் மோசமடைவதற்கு காரணமாகின.** திரண்ட வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இல் காணப்பட்ட 9.6 சதவீதத்திலிருந்து 2020ஆம் ஆண்டில் 11.1 சதவீதமாக அதிகரித்திருந்தது. அரசின் குறைச்சேமிப்பினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இல் காணப்பட்ட 3.6 சதவீதத்திலிருந்து 2020இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளையில், திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையிலிருந்து வட்டிக்கொடுப்பனவுகளை நீக்குகின்ற, இறைக்கொள்கையில் தன்னிச்சையான பகுதியை பிரதிபலிக்கின்ற ஆரம்ப நிலுவை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019இல் காணப்பட்ட 3.6 சதவீதப் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் 4.6 சதவீதம் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவு செய்திருந்தது. மத்திய அரசாங்கத்தின் படுகடன் நிலுவை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2019 ஆண்டிறுதியில் காணப்பட்ட 86.8 சதவீதத்துடன் (ரூ.13,031.5 பில்லியன்) ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் 101.0 சதவீதமாக (ரூ.15,117.2 பில்லியன்) அதிகரித்திருந்தது. இது இவ்வாண்டு காலப்பகுதியில், வெளிநின்ற படுகடன் இருப்புக்களின் அதிகரிப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுருக்கத்தின் இணைந்த தாக்கத்தினை பிரதிபலித்தது. 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கமானது உள்நாட்டு மூலவளங்களினூடாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு நிதியளித்தமையினால் மொத்த படுகடனில் வெளிநாட்டு படுகடனின் ஒப்பீட்டளவிலான பங்கானது 2019இன் இறுதியில் காணப்பட்ட 47.6 சதவீதத்திலிருந்து 2020இல் 40.0 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. வெளிநாட்டு நிதியிடலை விடவும் உள்நாட்டு நிதியிடலில் அரசாங்கத்தின் விருப்பத்தேர்வினையும், மோசமான உலகளாவிய சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியிடல்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவையும் இது பிரதிபலிக்கிறது. தரமிடல் முகவராண்மைகளின் பாதகமான ஊகங்களுக்கு மாறாக, 2020ஆம் ஆண்டின் ஒத்தோபரில் மீளச்செலுத்தப்பட்ட

வரைபடம் 1.8
மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள் :* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொடுப்பனவான ஐ.அ.டொலர் 1 பில்லியன் உள்ளடங்கலாக அனைத்து படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் 2020ஆம் ஆண்டில் அரசாங்கம் செலுத்தியிருந்தது.

## நாணயத் துறை அபிவிருத்திகள்

**கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க நிலைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளிலிருந்து பொருளாதாரத்தின் மீட்சியை ஆதரிக்கும் நோக்கில், 2020 காலப்பகுதியில் மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்ந்தது.** முக்கிய கொள்கை வட்டி வீதங்கள், அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன ஐந்து சந்தர்ப்பங்களில் மொத்தமாக 250 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு அவற்றின் மிகக் குறைந்த மட்டங்களான முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதங்களுக்கு 2020 காலப்பகுதியில் குறைக்கப்பட்டன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது ஏற்புடைய நியதி ஒதுக்கு விகிதம் இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தமாக 3 சதவீதப் புள்ளிகளால் 2.00 சதவீதத்திற்கு 2020 காலப்பகுதியில் குறைக்கப்பட்டது. இதன் மூலம் காசுப்பாய்ச்சல் இடையூறுகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் அவசர நிதியிடல் தேவைப்பாடுகள் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற உயர்வான நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை அதிகரிக்கப்பட்டது. அதேவேளை, நிதியியல் துறைக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய செலவில் அவசர நிதியிடல் கிடைப்பனவினை சமிக்ஞை செய்வதற்காக மத்திய வங்கி 2020 காலப்பகுதியில் வங்கி வீதத்தினை மொத்தமாக 650 அடிப்படைப் புள்ளிகளால் 8.50 சதவீதமாகக் குறைத்த அதேவேளை, துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் 300 அடிப்படைப் புள்ளிகள் கொண்டதொரு எல்லையுடன் தன்னியக்கமாகவே தீர்மானிக்கப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. மேலும், கொடுகடன் அட்டைகள் மற்றும் அடகுபிடித்தல் உள்ளிட்ட குறிப்பிட்ட நிதியியல் சாதனங்களின் மீது விதிக்கப்படும் அதிகப்படியான வட்டி வீதங்களைக் குறைப்பதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அளவீடுகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியதன் மூலம் நாணயக் கொள்கைப் பரிமாற்றல் செயன்முறையை விரைவுபடுத்தப்படுவதுடன் சிறியளவிலான கடன்பாட்டாளர்களுக்கு உதவியளிக்கப்படுகின்றது. அரச மற்றும் தனியார் துறைகளில் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஈடு பிணையளிக்கப்பட்ட வீடமைப்புக்கடன்களுக்கு ஆண்டிற்கு 7.00 சதவீதம் உயர்ந்தபட்ச வட்டி வீதம் விதிக்கப்பட்டது. இத்தகைய கொள்கை, தொழிற்பாட்டு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் புதிய கடன்வழங்கல் வீதங்கள் சராசரியாக ஒற்றை இலக்க மட்டங்களுக்கு குறைந்ததுடன் ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் வரலாற்றிலேயே மிகக் குறைந்தளவிற்குக் வீழ்ச்சியடைந்தன. சந்தை வைப்பு வீதங்களும் கணிசமானளவு குறைந்து சில வைப்புச் சாதனங்கள் குறைந்த மட்டப் பணவீக்கத்திலும் கூட எதிர்மறையான உண்மை வருவாய்களை ஈட்டுவதற்கு வழிவகுத்தன. அதேநேரம், மத்திய வங்கி சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் சலுகைக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இது உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு 4.00 சதவீத சலுகை வீதத்தில் தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை இயலச்செய்தது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் அரசின் காசுப்பாய்ச்சல் இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, முக்கியமாக முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களை வாங்குவதன் மூலம் மத்திய வங்கி அரசுக்கு நிதியியல் ஆதரவினை வழங்கியது. இது சந்தைத் திரவத்தன்மை மிகையை அதிகரிப்பதற்குப் பங்களித்த அதேவேளை, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு மத்தியில்

வரைபடம் 1.9
துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.10
தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.11
விரிந்த பண வளர்ச்சி மற்றும் பங்களிப்பு




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

2020 காலப்பகுதியில் அரச பிணையங்களின் விளைவுகளில் ஒரு குறிப்பிடத்தக்களவு குறைவினை வசதிப்படுத்தியது. மேம்பாடடையும் சந்தை மனோபாவங்கள் மற்றும் கடன்வழங்கல் வீதங்களின் குறைப்புடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடனில் படிப்படியான மீட்சி 2020இன் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்டது. தனியார் துறைக்கான கொடுகடன் 2020 காலப்பகுதியில் ரூ.374.1 பில்லியனால் அதிகரித்து, 2020 இறுதியளவில் 6.5 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2021 ஏப்பிறலில் முன்னுரிமைத் துறைகளில் நுண்பாக, சிறிய மற்றம் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதன் மீது வங்கிகளுக்கான இலக்குகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் அரச துறையின் கொடுகடன் கணிசமானளவு அதிகரித்து, முதன்மையாக அரசிற்கான தேறிய கொடுகடனின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. இது விரிந்த பணநிரம்பலில் ஒரு அதிகரித்த விரிவாக்கத்தைத் தோற்றுவித்தது. மத்திய வங்கி நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கையை நடத்தியது. இது, ஒருபுறத்தில் பணவீக்க எதிர்பார்ப்புக்களை உறுதிநிலைப்படுத்துவதனை அனுமதித்ததுடன் மறுபுறத்தில் நிலவுகின்ற எதிர்மறையான வெளியீட்டு இடைவெளி மற்றும் அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளின் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களைக் கருத்தில் கொண்டு பொருளாதாரத்தின் மீளெழுச்சிக்கும் ஆதரவளிக்கின்றது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையின் வங்கித்தொழில் முறைமையின் உறுதிப்பாடானது பாதுகாக்கப்பட்டது.** உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகள் காரணமாக சவாலான பொருளாதாரச் சூழலிலிருந்து இடர்நேர்வுகள் தோன்றியபோதும் வங்கித்தொழில் துறையானது மிதமான வளர்ச்சியை வெளிப்படுத்தியது. உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக கொடுகடன் தரம் மோசமடைந்தமை மற்றும் வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சலின் மிதமான தன்மையானது வங்கித்தொழில் துறை தொழிற்பாடுகள் மீதான முக்கிய பேரண்ட முன்மதியுடைய கரிசனைகளாகத் தொடர்ந்துமிருந்தன. அதேவேளை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் மந்தமான செயலாற்றமானது சொத்துக்களின் தளம், கொடுகடன் மற்றும் வைப்புக்கள், இலாபத்தன்மையின் வீழ்ச்சியினூடாகவும் மற்றும் ஆண்டுகாலப்பகுதியில் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பினூடாகவும் பிரதிபலிக்கப்பட்டமைக்கு உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான தடைகள் மற்றும் பொதுமக்கள் நம்பிக்கையின் சிதைவு போன்றவை முக்கிய காரணங்களாகும். வங்கித்தொழில் துறை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறைகளின் மீதான மேற்குறிப்பிட்ட விளைவுகளின் பாதகமான தாக்கத்தை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்துடன் இலங்கை மத்திய வங்கியானது பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மையை அறிமுகப்படுத்திய அதேவேளை உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக வழமைக்கு மாறான கொள்கை வழிமுறைகளையும் அறிமுகப்படுத்தியது. நிதியியல் முறைமையிலுள்ள காப்புறுதி மற்றும் ஓய்வுகால நிதியங்கள் போன்ற ஏனைய நிறுவன துறைகளானது, கலப்புச் செயலாற்றத்தைப் பதிவுசெய்தது. குறிப்பாக, நிதியியல் முறைமைக்கு உதவும் தேவையைக் கருத்தில் கொண்டும் அதனூடாக உலகளாவிய நோய்த்தொற்றின் மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதையும் கருத்தில் கொண்டு பணச்சந்தையில் திரவத்தன்மையின் கிடைப்பனவை இலங்கை மத்திய வங்கியானது உறுதிப்படுத்தியது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக மந்தமடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் நாணய மாற்று வீதத்தில் அழுத்தங்களை உருவாக்கியதுடன் இது முக்கியமான வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் மீதான கட்டுப்பாடுகளினூடாக முகாமை செய்யப்பட்டது. 2020இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலிருந்து வெளிநாட்டு முதலீட்டின் தேறிய வெளிப்பாய்ச்சல்களுக்கு மாறாக உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்ட குறைப்பிலிருந்து மீட்சியடைந்து பங்கு முதலீட்டில் உள்நாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த நாட்டத்தினால் ஆதரவளிக்கப்பட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2020 யூலைமாத மத்தியிலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைப் பதிவுசெய்தது.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**பன்னாட்டு நாணய நிதியத்தின்படி உலகப் பொருளாதாரம் பல தசாப்தங்களில் 2020இல் மிக மோசமான மந்தநிலையைப் பதிவுசெய்தது.** ஏப்பிறல் 2021இல் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டில் குறிப்பிட்டவாறு, உலகப் பொருளாதாரமானது 2019இன் 2.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில், முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் 4.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது என மதிப்பீடு செய்யப்பட்டவேளையில் தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் தொடர்பில் ஓர் 2.2 சதவீத சுருக்கம் மதிப்பீடுசெய்யப்பட்டது. இதேவேளையில், கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரம்பல் தொடங்கிய சீனப் பொருளாதாரம் 2020இல் 2.3 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது. நலன், இறை, நாணய மற்றும் சமூகம் உள்ளடங்கலான பல்வேறு விடயங்களில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு கொள்கை ஆதரவானது 2020இன் இரண்டாமரைப்பகுதியில் பெரும்பாலான பொருளாதாரங்களில் ஓர் மேல்நோக்கிய திரும்பலை வசதிப்படுத்தியது.

**நிச்சயமற்றத்தன்மைகளுக்கு மத்தியில், கொவிட்-19 தடுப்பூசி செயற்றிட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுடன் தேசிய மற்றும் பல்புடை மட்டங்களில் காணப்பட்ட விரிவான கொள்கை ஆதரவு என்பவற்றினால் உலகப் பொருளாதார நடவடிக்கைகளின் விரைவான மீட்சி தொடர்பான நம்பிக்கை அதிகரித்துள்ளது.** எதிர்வரும் சில ஆண்டுகளுக்கு உலகளாவிய வளர்ச்சிக்கான எறிவுகள் பன்னாட்டு நாணய நிதியத்தினால் மேல்நோக்கி திருத்தப்பட்டுள்ளன. இவை 2021இல் 6.0 சதவீதமாகவும் 2022இல் 4.4 சதவீதமாகவும் காணப்பட்டு உலகளாவிய நோய்ப்பரம்பலிலிருந்தான எதிர்பார்த்ததைவிட வலுவான மீட்சியைப் பிரதிபலித்தன. இருப்பினும், இடையூறுகளின் பரிமாணம், கொள்கைகளின் அளவு மற்றும் செயற்றிறன், உலகளாவிய நோய்ப் பரம்பலுக்கு முன்னரான இறை மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் தடுப்பூசி விநியோகத்தின் உள்ளடக்கம் என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகளின் காரணமாக உலகப் பொருளாதார மீட்சி பிராந்தியங்களுக்குள்ளேயும் அவற்றிற்கு இடையேயும் வேறுபடுமென எதிர்பார்க்கப்படுகிறது. தடுப்பூசிகளின் அதிக கிடைப்பனவு மற்றும் நீடித்த காலத்துக்கு தளர்வான பேரண்டப்பொருளாதார கொள்கைகளை பேணுவதற்கான பாரிய கொள்கை இடைவெளி என்பவற்றினால் பெரும்பாலான தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களை விட முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் விரைவாக மீட்சிபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கேற்ப, முன்னேற்றமடைந்த

அட்டவணை 1.4

**உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| விடயம் | 2019 (ஆ) | 2020 (இ) | 2021 (எறிவு) | 2022 (எறிவு) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **2.8** | **-3.3** | **6.0** | **4.4** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.6 | -4.7 | 5.1 | 3.6 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.2 | -3.5 | 6.4 | 3.5 |
| ஐரோப்பிய பிராந்தியம் | 1.3 | -6.6 | 4.4 | 3.8 |
| ஐக்கிய இராச்சியம் | 1.4 | -9.9 | 5.3 | 5.1 |
| யப்பான் | 0.3 | -4.8 | 3.3 | 2.5 |
| தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 3.6 | -2.2 | 6.7 | 5.0 |
| தோற்றம்பெற்று வரும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 5.3 | -1.0 | 8.6 | 6.0 |
| சீனா | 5.8 | 2.3 | 8.4 | 5.6 |
| இந்தியா | 4.0 | -8.0 | 12.5 | 6.9 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **0.9** | **-8.5** | **8.4** | **6.5** |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.4 | 0.7 | 1.6 | 1.7 |
| தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 5.1 | 5.1 | 4.9 | 4.4 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | -10.2 | -32.7 | 41.7 | -6.3 |
| எரிபொருள் அல்லாதவை | 0.8 | 6.7 | 16.1 | -1.9 |
| **ஐ.அ.டொ வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **2.3** | **0.7** | **0.3** | **0.4** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம் :* உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (ஏப்பிறல் 2021), ப.நா.நிதியம்

பொருளாதாரங்கள் 2021 மற்றும் 2022இல் முறையே 5.1 சதவீதம் மற்றும் 3.6 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகிறது. பாரிய இறை ஆதரவு மற்றும் தொடர்ச்சியான நாணய தளர்த்தலினால் ஆதரவளிக்கப்பட்டு ஐக்கிய அமெரிக்கா 2020இன் 3.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுமிடத்து 2021இல் 6.4 சதவீதத்தினாலும் 2022இல் 3.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகிறது. ஐரோப்பிய பிராந்தியத்தில் வளர்ச்சியானது 2020இல் 6.6 சுருக்கத்திலிருந்து 2021 இல் 4.4 சதவீதத்துக்கும் 2022 இல் 3.8 சதவீதத்துக்கும் அதிகரிக்குமென எறிவுசெய்யப்படுகிறது. ஐக்கிய இராச்சியத்தில், பொருளாதார நடவடிக்கைகள் 2021இல் 5.3 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் 2021இல் 6.7 சதவீத வலுவான வளர்ச்சியை பதிவுசெய்யுமென எறிவுசெய்யப்படுகிறது. இருப்பினும், பிராந்தியங்களுக்கிடையில் நோய்ப்பரம்பலின் தீவிரத்தன்மையின் வேறுபாடுகள், பொருளாதாரங்கள் மற்றும் நலத்துறை முறைமையின் தனித்துவமான பண்புகள், பண்ட எற்றுமதிகள் இல்லாவிடில் சுற்றுலா மீதான தங்கியிருத்தல் போன்ற குறிப்பிட்ட அதிர்வுகளின் வெளிப்பாடு மற்றும் நோய்ப்பரம்பலுக்கு உறுதியாக பதிலிறுத்துவதற்கு கிடைக்கப்பெறும் கொள்கை இடைவெளி போன்றவற்றில்

காணப்படும் பிராந்திய வேறுபாடுகளுக்கு பொருளாதாரங்களில் எதிர்பார்க்கப்படும் மீட்சி உட்படுத்தப்படுகிறது. 2020 இல் 1.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்த தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் ஆசியாவானது சீனா மற்றும் இந்தியாவின் எதிர்பார்க்கப்படும் உயர்ந்த வளர்ச்சியினால் முன்னெடுக்கப்பட்டு 2021இல் 8.6 சதவீதத்தினால் வளருமென எதிர்பார்க்கப்படுகிறது. சீனப் பொருளாதாரம் 2021இல் 8.4 சதவீதத்தினால் வளருமென எதிர்பார்க்கப்படும் அதே வேளையில் 2021இற்கான இந்தியாவின் வளர்ச்சி எறிவு 12.5 சதவீதமாகும். இதேவேளை, கேள்வி-நிரம்பல் ஒத்திசைவின்மைகளினால் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் 2021இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் எறிவுகள் தொடர்பான இடர்நேர்வுகள் மேல்நோக்கிக் காணப்படுகின்றன. திரண்ட கேள்வியின் படிப்படியான மீளெழுச்சி மற்றும் மிதமான கூலி வளர்ச்சி என்பவற்றைப் பிரதிபலித்து அண்மைக்காலத்தில் உலகளாவிய பணவீக்கம் மிதமாகயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலான முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில், மேம்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்புகளினால் ஆதரவளிக்கப்பட்டு பணவீக்க எதிர்பார்ப்புக்கள் நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்டுள்ளது போல் தோன்றுகிறது.

**நடுத்தரகாலத்தில் மேல்நோக்கிய சார்பு கொண்டிருந்தபோதிலும் நோய்ப்பரம்பல் தொடர்பிலான நிச்சயமற்றத்தன்மைகளினால் உலகளாவிய வளர்ச்சி எறிவுகள் கணிசமான இடர்நேர்வுகளை கொண்டுள்ளன.** விரைவுபடுத்தப்பட்ட தடுப்பூசி உற்பத்தி மற்றும் விநியோகம், குறிப்பிடத்தக்களவினாலான வலுவான இறை ஆதரவு மற்றும் வலுவாக ஒருங்கிணைக்கப்பட்ட இறை மற்றும் ஏனைய பொருளாதார கொள்கைகளுடன் வலுவான பன்னாட்டு கூட்டுறவு என்பவை முக்கிய மேல்நோக்கிய இடர்நேர்வுகளுக்குள் உள்ளடங்கும். நோய் பரம்பல் மீளெழுவதின் சாத்தியம், இறுக்கமான நிதியியல் நிலைமைகள், நிரம்பல் உள்ளாற்றலுக்கான கணிசமான மற்றும் விடாப்பிடியான சேதம், தீவிரமடையும் சமூகக் குழப்பம், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் புவிசார் அரசியல், வர்த்தக மற்றும் தொழில்நுட்ப இடர்நேர்வுகள் போன்றவை முக்கிய கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்குள் உள்ளடங்கும்.

## 1.4 நடுத்தரகால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு

**இலங்கைப் பொருளாதாரமானது வளர்ச்சியை நோக்கிய கொள்கை ஆதரவுகளால் ஊக்கமளிக்கப்பட்டு 2021இல் வலுவாக மீட்சியடையுமெனவும் நடுத்தர காலத்தில் உயர் வளர்ச்சி வேகத்தை தக்கவைத்துக் கொள்ளுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.** பொருளாதார வளர்ச்சியை சார்பாகக் கொண்ட அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சிநிரல்களின் தாக்கம், மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு, மற்றும் குறைந்த அடித்தளத்தின் தாக்கம் என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு 2021இல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தடுப்பூசியின் உந்துதல்கள் அதேபோன்று அநேகமான பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு திரும்புதல் என்பன 2021இல் பொருளாதாரம் உயர் வளர்ச்சி வீதத்தை அடைந்து கொள்வதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகப் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியிலிருந்தான கசிவுத்தாக்கங்கள் வெளிநாட்டுக் கேள்வி, தொழிலாளர் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்கள், சொத்துப்பட்டியல் முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பவற்றின் மீது நேர்க்கணியத் தாக்கத்தை செலுத்தக்கூடும். உற்பத்திப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதனை நோக்கிய அரசாங்கத்தின் முயற்சிகள் உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகள், வேளாண்மை மற்றும் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் ஏனைய வளர்ச்சியடைந்துவரும் கைத்தொழில்கள் மற்றும் பணிகள் என்பவற்றிற்கும் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கும் உதவும். குவித்தலை தவிர்த்தல் மற்றும் வழமைக்கு மாறான ஏனைய நடத்தைகளைத் தடுத்தல் போன்றவற்றிற்கான தேவையான பாதுகாப்புக்களுடன் முக்கிய வேளாண்மை உற்பத்திகளில் தன்னிறைவை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாரியளவான பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி வசதிகளின் மீதான நீண்டகால முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கும். ஏற்றுமதியை நோக்கிய தயாரிப்புத் துறைகளுக்கான ஆதரவுகளானது அர்ப்பணிப்புடன் கூடிய கைத்தொழில் வலயங்களை தாபிப்பதன் ஊடாக பலப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டிற்காக கொழும்பு துறைமுக நகரை திறப்பதானது நாட்டின் பணிகள் துறையை பலப்படுத்தும். மேலும், அரச மற்றும் தனியார் ஆர்வலர்களினது பங்குபற்றுதல்களுடன் ஏற்றுமதியைப் பலப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட பணிக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்ட ஏற்றுமதித் துறைகளை ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கணிசமான வரி நிவாரணங்கள் மற்றும் மானியங்கள் என்பவற்றின் வடிவில் வழங்கப்பட்ட இறைத் தூண்டல்கள் குறுங்காலத்தில் நிறுவனங்களின் இலாபத்தன்மையை முன்னேற்றல் மற்றும் முதலீட்டு இயலளவை மேம்படுத்தல் என்பவற்றினூடாக உருவாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வட்டி வீதங்களின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியானது கடன் பெறுகைகளின் செலவினத்தை குறைப்பதற்கு இட்டுச்சென்றுள்ளதுடன் முன்னோக்கிய காலப்பகுதியில் தனியார் துறையின் செயற்றிறனான

அட்டவணை 1.5

**நடுத்தரகால பேரண்டப்பொருளாதாரக் கட்டமைப்பு (அ)**

| குறிகாட்டி | அலகு | 2019 (ஆ) | 2020 (இ) | எறிவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 2.3 (இ) | -3.6 | 6.0 | 5.2 | 5.8 | 6.5 | 7.0 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 15.0 (இ) | 15.0 | 16.6 | 18.4 | 20.7 | 23.2 | 26.1 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 3,852 (இ)(உ) | 3,682 | 3,873 | 4,092 | 4,420 | 4,784 | 5,178 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 26.8 (இ)(ஊ) | 25.2 | 27.5 | 28.0 | 28.5 | 29.0 | 29.5 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 20.7 (இ)(ஊ) | 18.9 | 23.1 | 24.6 | 26.2 | 27.4 | 28.5 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 24.7 (இ)(ஊ) | 23.9 | 27.3 | 28.2 | 29.0 | 29.8 | 30.5 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -9.5 | -7.4 | -6.2 | -5.5 | -4.6 | -3.7 | -3.5 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.பில் | 11.9 | 10.0 | 12.5 | 14.0 | 15.5 | 17.0 | 18.9 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.பில் | 19.9 | 16.1 | 17.8 | 19.0 | 20.0 | 21.0 | 23.0 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -2.2 | -1.3 | -0.2 | 0.2 | 0.5 | 0.8 | 1.0 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 4.6 | 4.2 | 3.2 | 3.7 | 4.3 | 4.7 | 5.0 |
| **இறைத் துறை (ஈ)(எ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 12.6 (ஏ)(ஐ) | 9.2 | 11.8 | 13.0 | 13.5 | 14.3 | 15.1 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 22.2 (ஏ)(ஐ) | 20.3 | 21.2 | 20.4 | 19.1 | 19.0 | 19.2 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -3.6 (ஏ)(ஐ) | -7.9 | -3.1 | -1.3 | 0.0 | 1.2 | 2.3 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | -3.6 (ஏ)(ஐ) | -4.6 | -4.2 | -2.3 | -0.6 | 0.2 | 0.9 |
| திரண்ட இறை நிலுவை | மொ.உ.உ. இன் % | -9.6 (ஏ)(ஐ) | -11.1 | -9.4 | -7.5 | -5.6 | -4.7 | -4.0 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 86.8 (ஏ) | 101.0 | 98.0 | 95.0 | 91.0 | 86.0 | 80.0 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஒ) | % | 7.0 | 23.4 | 21.0 | 12.5 | 12.5 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஒ) | % | 4.2 | 6.5 | 12.2 | 11.6 | 11.7 | 12.0 | 12.0 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஓ) | % | 4.3 | 4.6 | 4.3 | 5.8 | 6.0 | 5.5 | 5.0 |

(அ) அச்சக பதிப்பிற்கு போகும்வரையில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 தள ஆண்டு)
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முறையே 27.4%, 21.3% மற்றும் 25.3% ஆக திருத்தியமைத்துள்ளது.
(எ) இறைத்துறை எறிவுகள் நிதி அமைச்சிலிருந்தான உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஏ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2021 மார்ச்சு 16இல் வெளியிடப்பட்ட 2019 இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.
(ஐ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள் குறிப்பிடப்பட்டிருந்தன.
(ஒ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஓ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பங்குபற்றுதலுடன் உயர் வளர்ச்சிக்கான அடித்தளத்தை இட்டுச்செல்வதற்கு உதவக்கூடும். உற்பத்திச் சாத்திய வளையியினை விரிவாக்குவதனை நோக்காகக் கொண்ட விரைவான வழிமுறைகள், இறுக்கமான வியாபாரம் செய்யும் சூழல்கள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தில் காணப்படும் அமைப்பியல் ரீதியான தடங்கல்களுடன் தொடர்புடைய பிரச்சனைகளைத் தீர்த்தல் மற்றும் கொள்கைகளின் நிலையான தன்மை மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணல், ஏற்றுமதி பண்டங்கள், பணிகள் மற்றும் நிதியியல் பாய்ச்சல்கள் என்பவற்றில் எதிர்பார்க்கப்படும் மீட்சியினூடாக வெளிநாட்டுத் துறையில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களால் ஆதரவளிக்கப்பட்டு உயர் வளர்ச்சி உத்வேகமானது நடுத்தர காலத்தில் அடைந்துகொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குறுங்காலத்தில் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களை சிறப்பாக முகாமை செய்வதானது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்ற அதேவேளை படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பலப்படுத்துவதற்கான கொள்கைகளை அமுல்படுத்துவதானது நடுத்தர காலத்தில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை முன்னேற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய கேள்வியில் எதிர்பார்க்கப்படும் மீட்சி மற்றும் வர்த்தகப்படுத்தக்கூடிய துறையை முன்னேற்றுவதற்கான கொள்கைத் தூண்டல்கள் என்பவற்றுடன் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முன்னோக்கிய காலப்பகுதியில் பலப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உயர்ந்தளவான பெற்றோலிய விலைகள்

மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி என்பன ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினத்தை ஓரளவிற்கு அதிகரித்தாலும் வெளிநாட்டுத் துறையில் ஏற்படும் குறுங்கால அழுத்தங்களை முகாமை செய்வதற்கு இறக்குமதிகள் மீதான செலவினங்கள் 2021ஆம் ஆண்டில் கவனமாக முகாமை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நுகர்வு மற்றும் இடைநிலைப் பொருட்களின் உள்நாட்டு நிரம்பலில் ஏற்படும் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றமானது இத்தகைய இறக்குமதிகளின் மீதான கேள்வியைத் தணிக்கக்கூடிய போதிலும் உள்நாட்டு கேள்வி மற்றும் ஏற்றுமதிகள் என்பவற்றில் எதிர்பார்க்கப்படும் விரிவாக்கத்துடன் நடுத்தர காலத்தில் இறக்குமதிகள் மீதான செலவினமானது அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றமானது நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறையின் சுருக்கத்திற்கு இட்டுச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகளில் எதிர்பார்க்கப்படும் தளர்த்தல்கள் மற்றும் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கென நாடுகளின் எல்லைகள் மீளத் திறக்கப்படுகின்றமை என்பவற்றினூடாக சுற்றுலாக் கைத்தொழிலின் மீட்சியினால் உந்தப்பட்டு பணிகள் கணக்கின் மிகையானது நடுத்தர காலத்தில் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், போக்குவரத்துப் பணிகள் நடவடிக்கைகளின் மீட்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துணைத் துறையில் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சி என்பன நடுத்தர காலத்தில் பணிகளிலான வர்த்தகத்திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகப் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் மீட்சி, திறன் வாய்ந்த ஊழியர்களின் வெளிநாட்டு வேலை வாய்ப்பை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்பட்டு வருகின்ற வழிமுறைகள் மற்றும் புலம்பெயர் ஊழியர்களுக்காக தற்போது நடைமுறையிலுள்ள ஊக்குவிப்புக் கட்டமைப்பு என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சி உத்வேகமானது தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. பண்டங்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுடன் அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான செலவினங்களை உன்னிப்பாக தொடர்ச்சியாக முகாமை செய்தல் மற்றும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உலகளாவிய சுற்றுலாப் பயணிகள் பாய்ச்சல்கள் மீட்சியடைதல் போன்ற நிபந்தனைகளின் பேரில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது சிறிதளவானதொரு பற்றாக்குறையைப் பதிவுசெய்து 2021இல் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வலுப்படுத்தப்பட்ட நிறுவன ரீதியான ஆதரவுகளுடன் இணைந்து பண்டங்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகளால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையானது முன்னேற்றமடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மின்வலு உருவாக்கத்திற்கு புதுப்பிக்கதக்க வலு மீதான திட்டமிடப்பட்ட அதிகரித்த தங்கியிருப்பு மற்றும் பொதுப் போக்குவரத்து முறைமையின் முன்னேற்றம் என்பனவும் எதிர்காலத்தில் மொத்த வலு இறக்குமதியின் முகாமைத்துவத்திற்குப் பங்களிப்பு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னோக்கிய காலப்பகுதியில் நோய்த்தொற்றிலிருந்தான தாக்கமானது மறைந்து விடுவதனால் முதலீட்டாளர் மனோபாவத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றமானது வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான சொத்துப்பட்டியல் முதலீடுகள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் என்பவற்றிற்கான நிதியியல் பாய்ச்சல்களைக் கவருவதற்கு உதவும். வெளிநாட்டு முதலீடுகளின் முக்கிய உட்பாய்ச்சல்கள் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் கைத்தொழில் வலய செயற்றிட்டங்கள் போன்றவற்றில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்கு மீதியில் ஏற்படும் முன்னேற்றம் மற்றும் மேம்படுத்தப்பட்ட படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்கள் என்பன நடுத்தர காலத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைப் பலப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மீதான அழுத்தங்களை இலகுபடுத்தும். அதிகளவான வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் குறுங்கால தேவைப்பாடானது இருபுடை மற்றும் பல்புடை நிதியிடல் மூலங்களின் ஆதரவுகளுடன் பூரணப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை வெளிநாட்டுப் படுகடன் தோற்றப்பாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் மற்றும் படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னோக்கிய காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனின் நிலைத்துநிற்கும் தன்மையை உறுதிப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**இறைத் துறையானது அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சிநிரலுக்கிணங்க பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியினால் துணைபுரியப்பட்டு நடுத்தர காலத்தில் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** 2019இன் இறுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வியாபாரத்திற்குச் சாதகமான வரி முறைமையானது நடுத்தர காலத்திலும் தொடருமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதனூடாக வியாபாரங்கள் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக விரிவாக்கமடைவதன் காரணத்தினால் அரசிறையில் படிப்படியான அதிகரிப்பொன்றிற்கு வசதியளிக்கும். அரசிறையின் எதிர்பார்க்கப்படும் மீட்சியானது வரி வலையமைப்பைப் பலப்படுத்துவதற்கான அரசிறை நிர்வாகச் சீர்திருத்தங்களாலும் வசதிப்படுத்தப்படும். முன்னோக்கிய காலப்பகுதியில் மீண்டெழும் செலவினத்தின் சிக்கனப்படுத்தல்கள் மற்றும் மூலதன செலவினத்தின் முன்னேற்றமடைந்த வினைத்திறன் என்பவற்றால் வசதிப்படுத்தப்பட்டு அரச

செலவினமானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மிதமாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் குறைந்த செயலாற்றத்திலிருந்து தோன்றுகின்ற இறைச் சுமையானது உற்பத்தித்திறனின் முன்னேற்றம் மற்றும் மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ வினைத்திறன் என்பவற்றுடன் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து மீட்சியடைவதற்காக பொருளாதார நடவடிக்கைகளுக்கான இறை ஆதரவுகளின் தேவைப்பாடானது குறுங்காலத்தில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை சார்பளவில் உயர்வான மட்டத்திற்கு இட்டுச்செல்லக் கூடியிருப்பினும் அரசிறை மற்றும் செலவினம் ஆகியவற்றின் மீதான எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் நடுத்தர காலத்தில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை மொ.உ.உற்பத்தியில் 4.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, வெளிநாட்டுப் பொறுப்புக்களுக்கு இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்விற்கு இணங்கிச் செல்லும் வகையில் வெளிநாட்டு மூலங்களினூடாக பற்றாக்குறைக்கான நிதியிடல் மீதான தங்கியிருத்தலானது குறைத்துக் கொள்ளப்படும். அரச - தனியார் பங்குடமையை ஊக்குவிக்கின்ற அதேவேளை, வெளிநாட்டு நிதியினால் மேற்கொள்ளப்படும் அரச முதலீட்டுச் செயற்றிட்டங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன் இது அரசாங்கத்தின் படுகடன் சுமைகளைக் குறைவடையச் செய்யும். அதன் விளைவாக, அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடனானது தற்போது காணப்படுகின்ற உயர்வான மட்டங்களிலிருந்து 2025 காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு படிப்படியாகக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பற்றாக்குறை நிதியிடல் தந்திரோபாயத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு இணங்கிச்செல்லும் வகையில் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயத்தின் வடிவிலான படுகடன் தீர்ப்பனவுகளும் நடுத்தர காலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நீடித்து நிலைத்துநிற்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சிப் பாதைக்கான தடங்கல்களைத் தவிர்ப்பதற்கும் நடுத்தர காலத்தில் இறைத் துறையின் செயலாற்றத்தை முன்னேற்றுவதற்கான அர்ப்பணிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**மொத்தக் கேள்வி நிலைமைகள் இயல்புக்குத் திரும்பியதுடன் ஏதேனும் மிகையான கொள்கை தூண்டுதல்களை திரும்பப் பெறுவதற்கான காத்திரமான கொள்கைகளுடன் நடுத்தர காலத்தில் பணவீக்கமானது இலக்கிடப்பட்ட மட்டத்திற்குள் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** பொருளாதார நடவடிக்கைகளின் மந்தமான தன்மையைப் பிரதிபலித்து 2021இன் அநேகமான காலப்பகுதியில் பணவீக்கமானது குறைந்த ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்வதனை இலக்காகக் கொண்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை மற்றும் இறைத்தூண்டல் வழிமுறைகளின் தாக்கமானது மொத்தக் கேள்வியைக் கட்டியெழுப்பி பணவீக்கம் மீதான கேள்வியினால் தூண்டப்பட்ட அழுத்தங்களைப் படிப்படியாகத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய எரிபொருள் விலைகளின் மீட்சி மற்றும் உலகளாவிய உணவு விலைகளின் அதிகரிப்பு என்பன உலகளாவிய ரீதியில் நேரடி மற்றும் இரண்டாம் சுற்றுப் பணவீக்க அழுத்தங்களின் மீதான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். அதேநேரம், மேம்பட்ட உற்பத்தியினூடாக பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்பதற்காக இலக்கிடப்பட்ட அரசாங்கத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கள் மற்றும் கொள்கைகளிலிருந்தான நன்மைகள், வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் போன்றவற்றிலிருந்து நன்மையடைந்து நன்கு கட்டுப்படுத்தப்பட்ட நிரம்பலால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், வானிலை நிலைமைகளுடன் தொடர்புடைய சாத்தியமான தடைகள் உணவு விலைகளில் தற்காலிக தளம்பல்களுக்கு இட்டுச்செல்லக் கூடுவதுடன் இப்பிரச்சனையானது நிரம்பல் சங்கிலி முகாமைத்துவத்தைப் பலப்படுத்துவதனூடாக தீர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். பொருளாதார நடவடிக்கைகள் இயல்புக்கு திரும்புவதனால் அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்ட இறைத்திரட்சிப் பாதையை பின்பற்றுதல் அதேபோன்று முன்னோக்கிய அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பொருத்தமான நாணயக் கொள்கைச் சீராக்கங்கள் என்பன பணவீக்கத்தை உறுதியாகப் பேணுவதற்கும் நடுத்தர காலத்தில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்குள் பணவீக்க எதிர்பார்க்கைகளை 4-6 சதவீதத்திற்குள் உறுதி நிலைப்படுத்துவதற்கும் உதவும்.

**எதிர்பார்க்கப்படும் குறைந்த பணவீக்கச் சூழலானது குறைந்த வட்டி வீத கட்டமைப்பினைப் பேணுவதற்கு உதவக்கூடுவதுடன் சேமிப்பாளர்களுக்கு நியாயமான உண்மை வருவாயை வழங்குகின்ற அதேவேளை தனியார் துறைக்கு நியாயமான செலவில் கொடுகடன் பாய்ச்சல்களை வசதியளிப்பதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்.** நடைமுறையில் உள்ள வரலாற்று ரீதியான குறைந்த சந்தை வட்டி வீதங்கள், இறை மற்றும் நாணயத் தூண்டுதல்களால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக கவனம் செலுத்தப்படும் முயற்சிகள் என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியானது விரைவுபடுத்தப்படுமென

1

எறிவுசெய்யப்பட்டுள்ளது. வங்கித் தொழில் முறைமையிலிருந்து பொதுத்துறைக்கான கொடுகடனின் அதிகரிப்புடன் தனியார் துறையினருக்கான எதிர்பார்க்கப்பட்ட கடன் விரிவாக்கமானது 2021இல் விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சியை உயர்த்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொருளாதார வளர்ச்சியானது விரைவுபடுத்தப்படுவதனால் கொள்கை தூண்டுதல்களின் படிப்படியான மீள்திரும்பல்களின் உதவியுடன் நடுத்தர காலத்தில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர கால பொருளாதார வளர்ச்சியானது உற்பத்தித்திறனின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பியல் ரீதியான தடங்கல்கள் மற்றும் தடைகளை நிவர்த்தி செய்வதன் ஊடாக உந்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் இறை மற்றும் நாணய விரிவாக்கத்தின் அத்தகைய வழமைப்படுத்தலானது எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப் பாதையைத் தடைசெய்யமாட்டாது. மத்திய வங்கி தொடர்ந்து நாணய மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன் வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் இறைப் பெறுபேறுகளின் விலகல்களுக்கு பதிலிறுத்துகின்ற அதேவேளை மிகையான நாணய விரிவாக்கத்தின் மூலம் உருவாகக்கூடிய மொத்தகேள்வியின் தேவையற்ற அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்காக காத்திரமான கொள்கைத் தலையீடுகளை மேற்கொள்ளும். அதேவேளை, குறிப்பாக உள்நாட்டு வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்கள் என்பவற்றிற்கு உயர்ந்த சாத்தியப்பாட்டை காட்டுகின்ற பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கான கொடுகடனை வழங்குவதற்கான படிமுறைகளை தொடர்ச்சியாக மத்திய வங்கி மேற்கொள்ளும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை பெரும்பாலும் கொண்டிருக்கும் அத்தகைய பிரிவுகளிற்கான நியாயமான செலவுகளில் உள்ள கொடுகடனின் விரிவாக்கமானது, இலங்கைக்குள் முயற்சியாண்மை கலாசாரமொன்றின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதுடன் அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நிலைத்து நிற்கும் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். நடைமுறையில் உள்ள குறைந்த வட்டி வீத கட்டமைப்பானது புதிய மற்றும் தற்போதுள்ள வியாபார முயற்சிகளுக்கு மிகப்பெரிய வாய்ப்புக்களை அளிக்கும் அதே வேளையில், வட்டியை அடிப்படையாகக் கொண்ட வைப்புகளின் வருமானத்தை நம்பியுள்ள பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு இது குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்துகின்றது. உயர் வருமானத்தை தரக்கூடிய பாதுகாப்பான மற்றும் மாற்று நிதியியல் சாதனங்களை அறிமுகப்படுத்துவதில் காட்டப்படும் அதிகரித்த கவனமானது குறைந்த வட்டி வீதங்களால் மோசமாகப் பாதிக்கப்படும் சேமிப்பாளர்களுக்கும் பயனளிக்கும். இப்பின்னணியில், ஒட்டுமொத்த நிதியியல் துறையும் கடன்பெறுநர்கள் மற்றும் சேமிப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு புத்தாக்கமுடைய சாதனங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக வினைத்திறனான நிதியியல் இடையீட்டில் காத்திரமானதொரு பங்கினை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.5 பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்

**நீண்டகால பேரண்டப் பொருளாதார சமநிலையின்மைகளைத் தீர்ப்பதனையும் சமத்துவமிக்க பகிரப்பட்ட மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கின் அடிப்படையிலமைந்த அரசாங்கத்தின் நவீன பொருளாதார க்கொள்கைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதனால் உந்தப்பட்டு நடுத்தர காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் மேம்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.** நாணய மற்றும் நிதியியல் கொள்கை வழிமுறைகளினூடாக மாத்திரம் பொருளாதார மீளெழுச்சியை உறுதிப்படுத்துவதற்கும் வளர்ச்சி உத்வேகத்தினை மீட்டெடுப்பதற்கும் இயலாதிருக்கின்ற வேளையில் நாட்டின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பரந்தளவிலான பொருளாதார மறுசீரமைப்புகள் அத்தியாவசியமாகின்றன. பல தசாப்தங்களாக, வளர்ச்சிக்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்குமான எண்ணற்ற அமைப்பியல் சார்ந்த தடைகளை இலங்கையின் பொருளாதாரம் சமாளித்து வருகின்றது. மறுசீரமைப்புகளின் அவசியத்தன்மை தொடர்பில் கொள்கை வகுப்பாளர்களுக்கும் பகுப்பாய்வாளர்களுக்கும் மத்தியில் பரந்தளவான அங்கீகாரம் காணப்படுகின்ற போதும், அவசியமான மறுசீரமைப்புகள் மீண்டும் மீண்டும் பிற்போடப்பட்டு வருகின்றன. இது நாட்டின் இறை மற்றும் வெளிநாட்டுத் துறைகளிலிருந்தான விடாப்பிடியான இரட்டைப் பற்றாக்குறைச் சுமையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. ஒருபுறம், வர்த்தகப்படுத்தத்தக்க துறையின் உற்பத்தித் தளத்தில் அதிக மேம்பாட்டின்மை, உற்பத்திகளையும் சந்தைகளையும் பன்முகப்படுத்தாமை, உலகளாவிய மற்றும் பிராந்திய பெறுமதிச்சங்கிலிகளுடன் ஒருங்கிணைக்காமை மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வாய்ப்புக்களைப் பூரணமாகப் பயன்படுத்தாமை போன்றவற்றினால் பல ஆண்டுகளாக ஏற்றுமதி வருவாய்கள் தேக்கமடைந்துள்ளன. மறுபுறம், கைத்தொழில் ஏற்றுமதிகள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மீது தங்கியிருக்கின்றமையினாலும், இத்தகைய உற்பத்திகளுக்கான நெகிழ்வற்ற கேள்வி, வளர்ந்து வரும் நடுத்தர வகுப்பிலிருந்தான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான அதிகரித்துவரும் கேள்வி மற்றும் வலு உருவாக்க மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்காகப் பெற்றோலியத்துக்கான அதிகரித்துவரும் கேள்வி போன்றவற்றினால் இறக்குமதிச் செலவினம் தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளது. தொழிலாளர் பணவனுப்பல் பாய்ச்சல்கள் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு காப்பு வழங்கியுள்ள வேளையில், சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுக்கிடையிலான

இடைவெளியினைக் குறைப்பதில் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீது அதிகளவில் தங்கியிருப்பிற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்களின் தாழ்ந்த மட்டம் வழிகோலியது. அரசிறைப் பக்கத்தில் உயர்ந்த மற்றும் விடாப்பிடியான செலவினம் மற்றும் வரித் தளத்தில் ஏதேனும் கணிசமான விரிவாக்கமின்மை மற்றும் நலிவடைந்த வரி நிர்வாகம் காரணமாக தொடர்ச்சியான தாழ்ந்த அரசிறைச் சேகரிப்புடன் பொருளாதாரம் போராடி வருகின்றது. இதன், விளைவான அரசிறை பற்றாக்குறையின் விரிவாக்கமானது படுகடனின் விரைந்த ஒன்றுதிரட்டலை நிலைகுலையக்கூடிய மட்டத்திற்கு இட்டுச்சென்றுள்ளது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று இவ்வாறான விடாப்பிடியான பொருளாதார கரிசனைகளை மோசமாக்கியுள்ளது. இருப்பினும், பொருளாதாரத்தின் கவனத்தினை மீளுருவாக்கவும் இவ்வாறான நீண்ட கால அமைப்பியல் சார்ந்த பலயீனங்களைத் தீர்ப்பதற்குமான வாய்ப்பினையும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித்திறனுக்கு உந்துதலளிக்கும் பொருளாதாரமொன்றினை நிறுவுவதற்குமான வாய்ப்பினை உலகளாவிய நோய்த்தொற்று வழங்கியுள்ளது. இச்சூழலில், ஏற்றுமதியை நோக்கிய மற்றும் வளர்ச்சியடைந்துவரும் உள்நாட்டுக் கேள்வியினைக் காத்திரமாகப் பூர்த்திசெய்யும் இயலுமையுள்ள வலுவான உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரமொன்றினைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் கொள்கை வரவேற்கத்தக்கதொரு நிலைமாற்றமாகும். மத்திய வங்கி குறைந்த வட்டி வீதச் சூழலினைப் பேணுகின்றமையும் பொருளாதாரத்தின் உற்பத்திதிறனின் உள்ளார்ந்த வாய்ப்புக்களை விரிவாக்குவதனை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் வளர்ச்சிக்கு ஆதரவான கொள்கைகளிருந்தான நன்மைகளை உள்நாட்டுத் தொழில்முயற்சிகள் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்தும். மேம்பட்ட உள்நாட்டு உற்பத்தி குடியிருப்பாளர்களின் வருமானங்களை அதிகரிப்பதற்குத் துணை புரிவதனால் எதிர்வரும் காலப்பகுதியில் வரித் தளத்தில் மற்றும் அரசிறைச் சேகரிப்புக்களின் விரிவாக்கமொன்றுக்கு வழிவகுப்பதன் மூலம் நடுத்தர காலத்தில் திட்டமிடப்பட்ட அரசிறை திரட்சிப்படுத்தலுக்கும் ஆதரவளிக்கும். தொடர்புபட்ட துறைகளிலுள்ள அரச மற்றும் தனியார் துறை ஆர்வலர்களின் தீவிரமான பங்கேற்புடன், பொருளாதாரத்தின் உற்பத்தி இயலுமையை மேம்படுத்துவதற்கான மற்றும் படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சல்களை ஏற்றுமதி வாய்ப்புக்களுள்ள துறைகளுக்கு வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி முக்கியதொரு முன்னெடுப்பாகும். இவ்வாறாக ஆழமாக வேரூன்றிய அமைப்பியல் சார்ந்த பிரச்சனைகளுக்குத் தேசிய மட்டத்திலான அங்கீகாரமும் அவற்றினைத் தீர்க்கும் பொருட்டு இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளும் பாராட்டத்தக்கனவாகும். இவ்வாறான பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கும் பொருத்தமானதும் ஒத்திசைவானதுமான கொள்கைகளை காலந்தவறாமல் நடைமுறைப்படுத்துவது நீடித்துநிலைத்திருக்குமொரு முறையில் எதிர்பார்க்கப்பட்ட உயர் வளர்ச்சிப் பாதையில் பொருளாதாரத்தின் துரித முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும்.

**உற்பத்தித்திறனின் மந்தமான முன்னேற்றம் இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய சவாலொன்றாகத் தொடர்ந்துமிருக்கிறது.** நீடித்து நிலைத்திருக்கும் உயர் வளர்ச்சியினை அடையும் பொருட்டு உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலுள்ள தடைகளை அகற்றுவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட முயற்சிகளை நாடு வேண்டிநிற்கின்றது. மரபார்ந்த வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனின் மேம்பாடுகள் சமத்துவமான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதில் முன்னுரிமையொன்றாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. கணிசமானளவில் குறைந்தளவான உற்பத்தித்திறன் மட்டம் வேளாண்மையாளர்கள் மற்றும் வேளாண்மைத் துறையில் உள்ள ஏனைய தொழிலாளர்களது வருமானத்தில் பாதகமான விளைவுகளைக் கொண்டுள்ளன. வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டுக்காக சிறந்த வேளாண்மை நடைமுறைகள் மற்றும் புவியியல் தகவல் முறைமைகள் போன்ற திறன்மிக்க வேளாண்மைத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றும் நவீன தொழிநுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மையினை ஊக்குவித்தல், அளவுத்திட்டச் சிக்கனம் மற்றும் நிரம்பல் சங்கிலிகளுடன் வேளாண்மையாளர்களை வினைத்திறனாகத் தொடர்புபடுத்தல் போன்றன வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தக்கூடிய முக்கிய காரணிகளுள் அடங்குகின்றன. மேலும், மண்ணை வளப்படுத்தல் மற்றும் பயிர் நோயினைக் கண்டறிவதற்கான நனோதொழில்நுட்பத்தின் பயன்பாடு, மண்ணில்லாப் பயிர்ச்செய்கை முறையினை ஊக்குவித்தல், கலப்பின மற்றும் அதிக விளைச்சலைத் தரும் பயிர்களைத் தெரிவுசெய்தல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்புக்காக மேம்படுத்தப்பட்ட அறுவடைக்குப் பின்னரான நுட்பங்கள் போன்றனவும் வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குத் துணைபுரியும். கைத்தொழில் துறையில் உற்பத்தித்திறனின் மேம்பாடு அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் மந்தமானதாகவே காணப்படுகின்றது. உயர் வலு மற்றும் தொழிலாளர் செறிவு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை நிறுவுவதல் மற்றும் அபிவிருத்தி செய்வதிலுள்ள தடைகள், வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவர்வதிலுள்ள தடங்கல்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் போதிய முதலீடின்மை போன்றன கைத்தொழில் துறையில் உற்பத்தித்திறன் மேம்பாட்டினைத் தடுக்கின்ற முக்கிய காரணிகளாகும். தொழிற்படையின் தொழில்நுட்பத் திறன்களை

மேம்படுத்தல், தொலைவான அமைவிடங்களில் கைத்தொழில் வலயங்களை நிறுவுதல், ஒருங்கிணைந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தல் மற்றும் புத்துருவாக்க இயலுமைகளை உயர்த்தல் போன்றன கைத்தொழில் துறையில் உயர் வினைத்திறன் மட்டங்கள் மற்றும் மேம்பட்ட உற்பத்தித்திறனிலிருந்தான நன்மைகளை அடைவதற்கு வழிவகுக்கும் முக்கிய காரணிகளாகின்றன. பணிகள் துறையில் செய்முறை மற்றும் உற்பத்திப் புத்துருவாக்கம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதானது உற்பத்தித்திறன் மேம்பாடுகளுக்குத் தொடர்ந்தும் இன்றியமையாதனவாகும். நவீன தொழில்நுட்பத்தை மற்றும் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுவது கிடைக்கக்கூடிய வளங்களைப் போதியளவு பயன்படுத்தாமையை விளைவாக்கும் உற்பத்தித்திறனுடன் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்கத் துணைபுரியும். மேலும், குறிப்பாக நான்காவது கைத்தொழில் புரட்சியின் பின்னணியில் புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றல், தரவுகள் மற்றும் இயந்திர வழியூடான கற்றல், செயற்கை சிந்தனை வலையமைப்பு மற்றும் இணையமூடான சாதனங்களின் வலையமைப்பு போன்ற ஆற்றல்மிக்க தொழில்நுட்பங்களின் பயன்பாடு பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளதும் உற்பத்தித்திறனை நிச்சயமாக மேம்படுத்தும். அறிவுசார் தொழிற்படையானது உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு இலங்கை கையாளக்கூடிய ஒரு முக்கியமான தூண்டுகோலாகும். அறிவுசார் தொழிலாளர்கள் கிடைக்கக்கூடிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு கைத்தொழில்களின் இயலுமைகளை உயர்த்துதல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்ற அனுமதிக்கும் வேளையில் பொருளாதாரத்தின் புத்துருவாக்க இயலுமையை மேம்படுத்துவதுடன் தொழில்களின் தரத்தினையும் அதிகரிக்கின்றனர். ஆதலால், தொழிற்பயிற்சி மற்றும் தொழிலாளர் மீள்திறனுடன் தொடர்புடைய கைத்தொழிலினை மேம்படுத்துவதற்குக் கொள்கை மறுசீரமைப்புகள் அத்தியாவசியமாகின்றன. கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்கான கல்வியின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துவதற்குமான மறுசீரமைப்புகளையும் இது உள்ளடக்குவதனால் இனிவரும் காலப்பகுதியில் அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும். அதேநேரம், அரச நிறுவனங்களில் மரபுசார்ந்த தொழில் உருவாக்கம் மற்றும் முதுநிலையினடிப்படையிலமைந்த பதவியுயர்வுக் கொள்கைகளைப் புறத்தொதுக்கித் தொழிலாளர் திறன்விருத்தி மற்றும் தொழில்நுட்ப விரிவாக்கத்திற்கு அதிகரித்த கவனம் செலுத்தப்படுகின்ற உபாயமொன்றிற்கான தேவையுள்ளது.

**ஏற்றுமதித் துறையை மீண்டெழச் செய்வதற்கும் மரபுசார் சிக்கல்களை தீர்ப்பதற்கும் நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வேளையில் முன்னுரிமையளிக்கப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு இன்றியமையாததாகும்.** 2020 ஆம் ஆண்டின் உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திற்குள்ளாகிய செயலாற்றத்திற்கு முன்னர் 2019 இல் வரலாற்றில் அதிகூடிய ஏற்றுமதி வருவாய்களை இலங்கை பதிவு செய்தபோதிலும், உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திற்கு மத்தியில் ஏற்றுமதித் துறையை வழிநடத்தி புதிய உலகளாவிய சூழலில் போட்டித்தன்மையை பேணுகின்ற அதேவேளையில், ஒத்த நாடுகளை எட்டிப்பிடிப்பது இலங்கை முகங்கொடுக்கும் முக்கிய சவால்களாக தொடர்கின்றன. அதன்படி, தெரிவு செய்யப்பட்ட துறைகளின், அதாவது நாட்டின் வெற்றிகரமான கைத்தொழில்கள், ஏற்றுமதி மேம்படுத்தல்களுக்கு குறுங்காலத்தில், முன்னுரிமையளிக்கப்படுவது ஒட்டுமொத்த ஏற்றுமதி செயலாற்றத்தினையும் வழிநடத்துகின்ற வேளையில், உள்நாட்டு உற்பத்திகளுக்கும் ஆதரவளிக்கும். ஒட்டுமொத்த ஏற்றுமதித் துறையை விட ஒருமித்த துணைத் துறைகளில் கவனம் செலுத்துவது விரைவான பெறுபேறுகளை விளைவிக்கக்கூடும். வெளிநாட்டுத்துறைக்கு ஆதரவளிப்பதற்கு ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்குமான அழுத்தம் மிக்கதும் உடனடியானதுமான தேவைப்பாட்டை நோக்கும் போது இத்தகைய பெறுபேறுகள் இன்றியமையாதவையாகும். அதன்படி, தேசிய ஏற்றுமதி உபாயம், பொருளாதார மறுமலர்ச்சி, மற்றும் வறுமை ஒழிப்பிற்கான சனாதிபதிச் செயலணியினால் அத்தகைய துறைகள் இனங்காணப்பட்டமை ஒரு ஆரம்பப்புள்ளியாக இருக்கக்கூடும். அத்தகைய வெற்றிக் கைத்தொழில்களானவை மருந்தாக்கல், இறப்பர் உற்பத்திகள், தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள், இலத்திரனியல் மற்றும் மின்சாதனங்கள், கப்பல் மற்றும் படகுக் கட்டுமானம், உணவு மற்றும் குடிபானங்கள், அழகுசாதனப்பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், இயந்திரம் மற்றும் பொறியியல் சாதனங்கள், மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மேலதிகமாக, தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரத் துறைகளை ஊக்குவிப்பதற்கும், குறைந்தளவு உள்நாட்டுப் பெறுமதி சேர்ப்புக்களுடனான விரும்பத்தகாத துறைகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கும் இறக்குமதித் தீர்வை முறைமைகள் மற்றும் கம்பனி வரி போன்ற ஏனைய வரிகளிலான பொருத்தமான திருத்தங்கள் பயன்படுத்தலாம். மேலும், நாடு மாத்திரமன்றி இலக்கிடப்பட்ட ஏற்றுமதி உற்பத்திகளுக்கும் வியாபார நாமமிடுவதற்கான கூட்டிணைக்கப்பட்ட முயற்சிகள் இன்றியமையாதவை. நடுத்தர காலத்தில், உற்பத்திகள் மற்றும் சந்தைகள் ஆகிய இரண்டு நியதிகளிலும் ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவதற்கு கொள்கைகளை அபிவிருத்திச்செய்தல் முக்கியமாகும். இலங்கையின் ஏற்றுமதித்தளத்தை உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில்நுட்பம் செறிந்த ஏற்றுமதிகளை நோக்கி தரமுயர்த்துவதற்கு புதிய ஏற்றுமதி வாய்ப்புக்களை ஆராய்தல் முக்கியமாகும். ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி

முதலீட்டு பாய்ச்சல்களின் பற்றாக்குறையும் ஏற்றுமதித்துறையின் வளர்ச்சிக்கு தடையாகவுள்ளது. உறுதியான பொருளாதாரக் கொள்கைகள், நிலையான பேரண்டப் பொருளாதார நிலைப்பாடுகள், போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதம், தாழ்ந்த மற்றும் நிலையான வட்டி வீதங்கள், வியாபாரம் செய்யும் நிலைப்பாடுகளிலான முன்னேற்றங்கள், அணிசேரா வெளிநாட்டுக் கொள்கைகள் ஆகியன ஏற்றுமதித் துறையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஊக்குவிப்பதற்கு அவசியமாகவிருந்து ஏற்றுமதி சார்ந்த வெற்றிகரமான தொழில்களுக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல்களை ஈர்ப்பதற்கும், ஏற்றுமதித்துறை எதிர்க்கொள்ளும் பல்வேறு மரபுசார் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் வழிவகுக்கும்.

**முழுமையாகப் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வாய்ப்புக்களை உற்பத்தித்திறன்மிக்கதொரு வகையில் பூரணமாகப் பயன்படுத்துவனூடாகப் பணிகள் ஏற்றுமதிகளை அதிகரிப்பதானது இலங்கையின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பெறுபேற்றினை மேம்படுத்துமொரு பிரதான உபாயமாகத் தொடர்ந்துமிருக்கிறது.** உள்நாட்டு மற்றும் உலகளாவிய இடையூறுகளினால் சுற்றுலாத் துறையின் வருவாய்களில் ஏற்படும் பாதிப்படையக்கூடிய தன்மை உயர்ந்தளவிலான உள்ளார்ந்த வாய்ப்புக்களைக் கொண்ட ஏனைய பணிகள் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தும் வேளையில் சுற்றுலாத் துறையின் முழுமையான உள்ளார்ந்த வாய்ப்பினைத் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கான தேவைப்பாட்டினைக் கோடிட்டுக்காட்டுகின்றது. தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல், போக்குவரத்துப் பணிகள், நிதியியல் பணிகள் மற்றும் ஏனைய தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் என்பன நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் செலாவணி வருவாய்களை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை சுற்றுலாத் துறைக்கு அப்பால் கவனம் செலுத்த வேண்டிய பிரதான பணிகள் ஏற்றுமதித் துறைகளாகக் காணப்படுகின்றன. தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பின் மேம்பாட்டுடன் இணைந்து தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கான கிடைப்பனவுடன் வர்த்தகக் கவர்ச்சித் தன்மை, தற்போதுள்ள உலகளாவிய இலத்திரனியல் மயமாக்கத்திலிருந்தான நன்மைகளைப் பெற்று உலகளாவிய கைத்தொழிலாக மாறுவதற்குரிய கண்டறியப்படாத பாரியளவான உள்ளார்ந்த ஆற்றலினைத் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளும் துறை தன்னகத்தே கொண்டுள்ளது. உலகளாவிய நோய்தொற்றுக் காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல்/ தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத் துறைகள் என்பவை உலகளாவில் சிறப்பாகச் செயலாற்றியுள்ளன. எவ்வாறாயினும், ஒத்த இயலுமைகளுடன் கூடிய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் இத்துறையின் வருவாய்கள், இதுவரை குறிப்பிடத்தக்களவு குறைவாகவே உள்ளது. இலங்கையை இலத்திரனியல் தேசமாக ஊக்குவிப்பதிலும் வர்த்தக நாமமிடுவதிலுமுள்ள குறைபாடே இதற்குப் பிரதான காரணியாகும். அவ்வாறான விம்பத்தைக் கட்டியெழுப்புவது வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதுடன் இலங்கையில் பிராந்திய தலைமையகங்களை நிறுவுவதற்கு உலகளாவிய தகவல் தொழில்நுட்ப ஜாம்பவான்களைக் கவர்வதிலும் துணைபுரியலாமென்பதால் இது, நாட்டிற்கு வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களைக் கணிசமானளவு அதிகரிக்கும். பாதகமான வியாபாரம் செய்யும் தரவரிசையெனும் பொதுவான பிரச்சனை வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் இத்துறையிலுள்ள ஏனைய புதிய தொடக்க முதலீடுகளையும் பாதிக்கின்றது. மேலும், உள்முக வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களுக்கான பன்னாட்டுக் கொடுப்பனவு நுழைவாயில்கள் கிடைக்காமை இத்துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளைப் பாதிக்கின்றது. நாட்டிற்கு வெளிநாட்டு செலாவணியைக் கொணர்வதற்கு மேலதிகமாக, உயர் வருவாய்களுக்கான சாத்தியப்பாடுகளுடன் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட தொழில் நிலைமைகளுடன் நாட்டில் குறிப்பாக இளைஞர்களுக்கும் பெண்களுக்குமான தொழில் வாய்ப்புக்களை இத்துறை வழங்கும். நாட்டில் திறமைவாய்ந்த இளைஞர் தொழிற்படையொன்று காணப்பட்டாலும் கூட, தேவையான கேள்வியினை நிறைவுசெய்வதற்கு இது போதாதுள்ளது. அதிக ஊதியம் பெறும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் இலத்திரனியல் நாடோடிகளுக்கும் தொழிற்பாட்டு மையமொன்றாக பிராந்தியத்திலுள்ள ஏனைய புகழ்மிக்க மையங்களுக்குப் போட்டியாக இலங்கையை முனைப்புடன் ஊக்குவிக்கலாம். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் உபாயம்சார் அமைவிடமானது ஆசியாவில் கடல்வழி போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டு வசதிகளுக்கான மையமொன்றாகத் தோற்றம் பெறுவதற்கான பாரிய வாய்ப்பொன்றினை நாட்டிற்கு வழங்குகின்றது. கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கு மேலதிகமாக மேற்குக் கொள்கலன் முனையத்தின் துரித அபிவிருத்தியுடன் கொள்கலன், மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் சரக்குக் கையாளல் அளவுகள் மேம்பட்டு அதன் மூலம் துறைமுகப் பணிகளிலிருந்தான வருவாய்களை அதிகரிக்கும். நிதியியல் பணிகளின் ஏற்றுமதியினை மேம்படுத்துவதும் இலங்கைக்குச் சாத்தியமானதொரு தெரிவாகும். நிதியியல் மையமொன்றாகத் துறைமுக நகரின் அபிவிருத்தியானது நிதியியல் பணிகளின் ஏற்றுமதிகளை மேம்படுத்தி அதன் மூலம் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவாக்கப்பட்ட புதிய இயல்பு வாழ்க்கை முறையில் சுற்றுலாத் துறை செயற்படுவதைப் பேணுவதற்கு பன்னாட்டு மற்றும் உள்நாட்டு**

1

**சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற புதுமையான உபாயங்கள் தேவைப்படுகின்றன.** 10 மாதங்கள் மூடப்பட்டதன் பின்னர், "உயிரினக் குமிழ்கள்" என்ற புதிய கருதுகோளினைப் பயன்படுத்தி, 2021 சனவரியில் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையின் எல்லைகள் திறக்கப்பட்டன. இவ்வெண்ணக்கரு, சுற்றுலாப் பயணிகளிற்கான தனிமைப்படுத்தல் தேவைப்பாடுகளை நீக்கும் அதேவேளை, கடுமையான சமூக இடைவெளியின் மூலமாக பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டு சமுகங்களினதும் நலம் மற்றும் பாதுகாப்பு போன்றவை உறுதிசெய்யப்படுகின்றன. உலகளாவிய நோய்த்தொற்று நிலவுகின்ற நேரத்தில், மேலும் பல நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வருகை தருமாறு அழைக்கின்ற அதேவேளை அதிக அங்கீகாரம் பெற்ற தங்குமிட வசதி வழங்குநர்கள் மற்றும் சுற்றுலாத் தளங்களை உள்ளடக்கியதாக உயிரினக் குமிழ்கள் விரிவாக்கப்படலாம். மேலும், சுற்றுலாப் பயணத்திற்கு எல்லைகளைத் திறந்துள்ள மற்றொரு நாடான மாலைத்தீவு போன்ற நாடுகளுடன் பிராந்திய உயிரினக் குமிழ்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தலாம் அல்லது பிற நாடுகளுடன் பயண வழித்தடத்தினை உருவாக்கலாம். மேலும், கொவிட்-19 நோய்த்தொற்றுக்கு எதிராக தடுப்பூசியேற்றியுள்ளவர்களை சோதனை மற்றும் தனிமைப்படுத்தல் தேவைப்பாடுகளின்றி பயணம் செய்வதற்கு அனுமதிக்கும் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட வேண்டும். இதற்கிடையில், பெரும்பாலும் உயிரினக் குமிழிகளின் கீழ் முறைசார்ந்த துறையே செயற்படக்கூடியதாகவிருப்பதனால் சுற்றுலாத் துறைக்கு, குறிப்பாக முறைசாரா துறைக்கு உதவுவதற்காக இலங்கையில் உள்நாட்டு சுற்றுலாப் பயணங்களை விருத்தி செய்வதற்கு மேலும் இடமுள்ளது. மேலும், வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களைக் குறைக்கும் முகமாக இலங்கையர்கள் ஓய்வுக்காக வெளிநாட்டிற்கு பயணம் செய்வதைத் தடுப்பதற்கு உள்நாட்டு சுற்றுலாப்பயண ஊக்குவிப்பானது வழிவகுக்கும். இது தொடர்பாக, வார இறுதி நாட்களுக்காக திட்டமிடப்பட்ட சுற்றுலாப் பொதிகள், வெவ்வேறு வயதினருக்கான விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுலாப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள், அலுவல்சார் ஓய்விடங்கள் மற்றும் வெவ்வேறு வருமானக் குழுக்களுக்கான சுற்றுலாப்பயணங்கள் போன்ற வழிமுறைகளினூடாக மேலும் உள்நாட்டு சுற்றுலாப் பயணங்களை விருத்திச் செய்வதற்கு தனியார் துறையுடன் இணைந்து சுற்றுலாப்பயணங்களுடன் தொடர்புடைய அமைப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், உள்நாட்டுக் கவருமிடங்கள் மற்றும் உள்நாட்டினருக்கான சுற்றுலா ஏற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பற்றி பயன்பாட்டாளர்களுக்கு சிநேகபூர்வமான மற்றும் உள்ளூர்மயமாக்கப்பட்ட இலங்கை தகவல் இணைய முகப்புக்களை உருவாக்க வேண்டிய அவசியமும் உள்ளது. நகர மையங்களிலிருந்து சுற்றுலாத் தளங்களுக்கான போக்குவரத்து வசதி வழங்கப்பட முடியும். மேலதிகமாக, கடந்த காலத்தில் சுற்றுலாப் பயணிகளை விலகியிருக்கச் செய்வதற்கும் இலங்கையைப் பற்றிய எதிர்மறையான கருத்துக்களைப் பதிவுசெய்வதற்கும் ஏதுவாயிருந்த தனிநபர் பாதுகாப்புச் சிக்கல்கள், சுற்றுலாத் தளங்களில் போதியளவு வசதியின்மை, தனிப்பட்ட சுற்றுலா கவருமிடங்களுக்கு விலை கூடிய பயணச்சீட்டுக்களை வாங்க வேண்டியிருத்தல், இரைச்சல் மாசு மற்றும் சனநெரிசல் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காகஇந்த உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தினை நாடு பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக இத்துறை நடுத்தர காலத்தில் மேலும் விரிவுப்படுத்த வேண்டுமென்றால், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ரீதியில் எதிர்பாராத சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு துறையிலுள்ள முறைசாராத் தன்மையைக் குறைத்தல் மற்றும் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு காப்புறுதித் திட்டங்கள், சமூகப் பாதுகாப்புப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தல் என்பன கட்டாயமாகும். மேலதிகமாக, ஒழுங்குமுறைப்படுத்தப்படாத விடுதி வழங்குநர்கள் மற்றும் சுற்றுலாப் பணிகளை கட்டணமொன்றிற்கு சந்தைப்படுத்துவதற்கான தளத்தை வழங்கும் இணையத்தளம் உட்பட ஏனைய பணி வழங்குநர்களிடமிருந்து உரிய வரிகளை வசூலிப்பதற்கான பொறிமுறைகள், உருவாக்கப்பட்டு கடுமையாக செயல்படுத்தப்படல் வேண்டும். புதிய இயல்பு வாழ்க்கைமுறைச் சூழ்நிலையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய இத்தகைய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற வேளையில் நாட்டின் முக்கிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய் உழைக்கும் மூலமாக நிலைநிறுத்துவதற்கு இந்தத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கட்டியெழுப்புவதிலான உடனடிக் கவனம் துணைபுரியும்.

**முதலீட்டாளர் நட்புச்சூழலை துரிதமாக வழங்குவதன் மூலம் உபாய முதலீடுகளை ஈர்ப்பதற்கான நாட்டின் திறன் மீதான நிபந்தனைக்குட்பட்டு தென்னாசியாவில் இவ்வகையில் முதலாவதாக உள்ள கொழும்புத் துறைமுக நகரமானது நாட்டிற்கு பல்வேறு சமூகப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த சட்டம், வரி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அத்துடன் பிணக்குகளுக்கு தீர்வு காணும் பொறிமுறைகளின் ஊடாக முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாண்மையாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், கம்பனிகள், நிதியியல் நிறுவனங்கள் என்பவற்றை ஈர்ப்பதற்காக டுபாய், சிங்கப்பூர், மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளிலுள்ள ஏனைய பிரபல்யமான முதலீட்டு மையங்களுடன் போட்டிபோடக் கூடிய நவீன வியாபாரச் சூழலுடன் கொழும்பு துறைமுக நகரமானது அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. உலகில் பல்வேறு நிதியியல் பணி மையங்கள் இருக்கின்ற

போதிலும், தென்னாசியா மற்றும் கிழக்காசியாவிலுள்ள முக்கிய நகரங்களுக்கு அண்மித்ததாகவுள்ள நன்மைகளை கொழும்புத் துறைமுக நகரமானது கொண்டுள்ளது. கொழும்புத் துறைமுக நகரத்திற்காக எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு முதலீட்டு பாய்ச்சல்களானது நடுத்தர காலத்தில் நாட்டின் சென்மதி நிலுவையின் நிதியிடலுக்கு மிக முக்கியமாக அமையும். மேலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசிறைக்கு பங்களிப்பு செய்யும் அதேவேளை, தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு இத்திட்டமானது ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிகமாக, தென்னாசியாவிலுள்ள ஏனைய நாடுகளின் நகரங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பானது சாதகமான வாழ்வாதார நிலைமைகளுக்கும் மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிற்படைக் குழாமிற்கும் பிரபல்யமாக இருப்பதனால், கொழும்புத் துறைமுக நகரமானது உயர்ந்த தரம் வாய்ந்த தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதுடன் நாட்டினால் முகங்கொடுக்கப்படுகின்ற மூளை வெளியேற்றப் பிரச்சனையை குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம், கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவின் நிறுவுதலுடன் திட்டமிட்டபடி வெளிநாட்டு நேரடி முதலீட்டினை வசதிப்படுத்துவதற்காக கொள்கையின் நிலையான தன்மையைப் பேணுவதற்கும், வியாபாரம் செய்யும் நிலைப்பாடுகளை மேம்படுத்துவதற்கும், ஒப்புதலை துரிதப்படுத்துவதற்கும் செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்குமான கடுமையான தேவையுள்ளது. இது, உலகின் ஏனைய நிதியியல் மையங்களுடன் வெற்றிகரமாக போட்டியிடுவதற்காக இலங்கையை இயலுமைப்படுத்தும்.

**கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதில் நாட்டின் தொடர்ச்சியான தோல்வியானது நீண்ட கால நோக்குடன் நிலையான கொள்கைக் கட்டமைப்பொன்றினைப் பேணுகின்ற வேளையில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய அமைப்பியல், நிறுவனசார் மற்றும் கொள்கைசார் தடைகளைக் கோடிட்டுக்காட்டுகின்றது.** ஏனைய மூலதனப் பாய்ச்சல்கள் போலன்றி, தொழில்நுட்ப மாற்றல்கள், வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களுக்கு உந்துதலளித்தல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ அறிவாற்றலினூடாக மனித மூலதன அபிவிருத்தி போன்ற பல விரும்பத்தக்க சிறப்பியல்புகளை வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடக்குகின்றன. மேலும், பிராந்திய மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் ஒருங்கிணைத்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப புத்துருவாக்கத்திற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வசதியளிக்கும் வேளையில், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் புதிய சந்தைகளுக்கான அணுகலை இயலுமைப்படுத்துகிறது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளானது பொதுவாக பொருளாதாரத்துக்கான நீண்டகால நிதி மூலமாகக் காணப்படுவதுடன் சொத்துப்பட்டியல் முதலீடுகள் மற்றும் படுகடன் உட்பாய்ச்சல்கள் போன்ற ஏனைய நிதியியல் பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் தாழ்ந்த மாறுபடக்கூடிய தன்மையை வெளிப்படுத்துகின்றன. கடந்த தசாப்தங்களில் போதியளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்த பல நாடுகள் வெளிநாட்டுக் கடன்பாடுகளை நிர்வகிக்கக்கூடிய மட்டங்களில் பேண முடிந்துள்ளமையினால் தாக்குபிடிக்கக்கூடிய மட்டங்களில் நாட்டின் வெளிநாட்டுப் படுகடனைப் பேணுகின்றன. பிரதானமாக, வர்த்தகம் செய்யக்கூடிய துறைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றுக்காக உயர்ந்தளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வது, வெளிநாட்டுப் படுகடனின் தாங்கக்கூடிய தன்மையை மேம்படுத்தி இலங்கைக்கான எதிர்காலப் பாதையாக அமையக்கூடும். கொழும்பு துறைமுக நகரத்தினை அபிவிருத்தி செய்தல், உபாய அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களைப் பண்ட வர்த்தக மையங்களாக ஊக்குவித்தல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர்களுக்காக நவீன முதலீட்டு வலயமொன்றினை நிறுவுதல் என்பன எதிர்வரும் காலப்பகுதியில் நாட்டிற்குக் கணிசமானளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கவருமென எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழலில், இந்த அடையாளம் காணப்பட்ட செயற்திட்டங்களுக்கு எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டிய வேளையில், இவ்வாறான வலயங்களுக்கு அப்பால் முதலீடுகளை கவர்வதற்கு சாத்தியமிக்க முதலீட்டாளர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்கு முன்னுரிமையளிக்கப்படவும் வேண்டும். நடுத்தர காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஆரோக்கியமானதொரு உத்வேகத்தினை நீடித்துநிலைத்திருக்கச் செய்வதற்கு கடந்த பல தசாப்தங்களாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பெறுகைக்குத் தடையாக அமையும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தேசிய ரீதியான முன்னுரிமையாக அமைப்பியல் மற்றும் கொள்கை சீராக்கங்களை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும். இவை பல்வேறு அறிக்கைகளிலும் அவைகளில் மீண்டும் மீண்டும் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளன. வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண்ணின் தரவரிசைப்படுத்தலை மேம்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதும் இலங்கையின் தரவரிசை இன்னமும் தாழ்ந்ததாகவேயுள்ளது. வியாபாரங்களையும் முதலீடுகளையும் கவர்வதற்கு இதுவே பிரதான தடையாகவுள்ளது. ஆகவே, வியாபாரம் செய்யும் சூழலை மேம்படுத்துவதனை துரிதப்படுத்துவதற்கும் முதலீட்டு ஒப்புதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளில் அத்தியாவசியமற்ற அதிகார ரீதியான தாமதங்களை நீக்குவதற்கும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்படுகின்றன. ஒத்திசைவான முதலீட்டுக் கொள்கையொன்றினை நிறுவுதல், வினைத்திறனைக் கோரும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதேபோன்று சந்தைகளைக் கோரும் முதலீடுகளை மேம்படுத்தல், பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக

வடிவமைக்கப்பட்ட முதலீட்டுச் சட்டவாக்கத்தினை நிறுவுதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பினை விருத்தி செய்தல், மேம்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு செயற்பாடுகள், காத்திரமான பொருளாதார வலயங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, முதலீட்டாளர் குறைகளைத் தீர்ப்பதற்கான காத்திரமான பொறிமுறையொன்றினை நிறுவுதல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்களது வினைத்திறனின் முறையான மதிப்பீடு உள்ளடங்கலாக எதிர்காலத்தில் உயர்ந்தளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளினைக் கவரும் பொருட்டு இலங்கை மேம்படுத்த வேண்டிய பல விடயப்பரப்புக்கள் காணப்படுகின்றன. முதலீட்டாளர்கள் முதலீட்டின் சாத்தியமான விடயப்பரப்புக்கள் மற்றும் அவ்வாறான முதலீடுகளுக்கு ஏற்புடைத்தாகும் சட்டக் கட்டமைப்புக்கள் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கான வெளிப்படையான பொறிமுறையொன்றும் காணப்பட வேண்டும்.

**பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்கும் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி இடையூறுகளைத் தடுக்கும் முகமாகவும் வெளிநாட்டுப் படுகடனின் உயர் வளர்ச்சியைத் தொடர்ந்து மறுதலையாக்குவதற்கு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் இறை நிலுவை ஆகியவற்றை மேம்படுத்துவது அவசியமாகும்.** நாட்டின் இறை மற்றும் வெளிநாட்டுத் துறையிலுள்ள சமமின்மைகளிலிருந்து உருவாகின்ற அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறை என்ற இரட்டைப் பற்றாக்குறைகளை இலங்கை பல தசாப்தங்களாக அனுபவித்து வருகின்றது. விடாப்பிடியான அரச செலவினங்களாலும் அரசிறையின் ஒப்பீட்டளவில் குறைந்தளவான வளர்ச்சியினாலும் உயர் வரவுசெலவுப் பற்றாக்குறைகள் உந்தப்பட்டுள்ளன. பாரிய வர்த்தகப் பற்றாக்குறைகளினால் வெளிநாட்டு நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. வணிக இறக்குமதிகளின் பெறுமதி வணிக ஏற்றுமதிகளின் பெறுமதியை விட ஏறத்தாழ இரட்டிப்பாகப் பதிவுசெய்ததுடன் இது அண்மைக் காலங்களில் மோசமடைந்துள்ளது. இலங்கை போன்ற ஒரு சிறிய தோற்றம்பெற்று வரும் சந்தைப் பொருளாதாரத்திற்கு ஒரு நியாயமான வர்த்தகப் பற்றாக்குறையைப் பேணுவது வழக்கமாகக் கருதப்பட்டாலும், படிப்படியாக மோசமடைந்துவரும் வர்த்தகப் பற்றாக்குறை எந்தவொரு பொருளாதாரத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும். நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை சேமிப்புகள் மற்றும் முதலீட்டு இடைவெளிகளில் பிரதிபலிக்கப்படுவதுடன், இது மூலதன நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்காக வெளிநாட்டு மூலதனத்தை நாடுவதற்கு நாட்டை தேவைப்படுத்தியுள்ளது. உண்மையான சிக்கல் இரட்டைப் பற்றாக்குறை அல்ல என்பதுடன் நாடு எவ்வாறு இத்தகைய பற்றாக்குறைகளுக்கு நிதியிடுகின்றதென்பதாகும். எடுத்துக்காட்டாக, இரட்டைப் பற்றாக்குறைகளைக் கொண்ட பல பொருளாதாரங்கள் இத்தகைய பற்றாக்குறையை படுகடன் அல்லாத வழிமுறைகள் மூலம் நிதியளிக்கின்றன. ஆயினும், இலங்கையில் இத்தகைய பற்றாக்குறைகள் பெரும்பாலும் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மூலம் நிதியிடப்பட்டு ஒரு நச்சு வட்டத்திற்கு வழிவகுக்கின்றன. கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினால் 2020இல் இலங்கையின் வெளிநாட்டுத்துறையின் பாதிப்படைக்கூடிய தன்மை மேலும் அதிகரித்துள்ளதுடன், இது பன்னாட்டு மூலதனச் சந்தைக்கான அணுகலை மட்டுப்படுத்தும் அதேவேளையில் சுற்றுலாத்துறையிலிருந்து பெறப்படும் வருமானம் உட்பட மிகவும் தேவையான வெளிநாட்டுப் பாய்ச்சல்களை குறைத்துள்ளது. அரசாங்கத்தினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளபடி, இலங்கையானது இத்தகைய நச்சு வட்டத்தினைத் தகர்ப்பதற்கு உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் அதிகப்படியான படுகடன் அல்லாத பாய்ச்சல்களைக் கவர்தல் போன்றன தொடர்ந்ததும் இன்றியமையாதவையாகவுள்ளது. இதனைத் தீர்ப்பதற்காக இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ள போதிலும், குறுகிய காலத்தில் இறக்குமதிச் செலவினத்தை மற்றும் ஏனைய வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சல்களை கட்டுப்படுத்துவதற்கான வரையறைகளை தொடர்தல் போன்ற பல மேலதிக வழிமுறைகளும் தேவைப்படுகின்றன. ஏற்றுமதி சார்ந்த தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு முன்னுரிமை அளித்து வியாபாரம் செய்யும் சூழலை மேம்படுத்துவதற்கான முயற்சிக்கு வசதியளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கிடையில், அரசாங்கத்தால் குறைச்சேகரிப்பு குறைக்கப்படுகின்ற அதேவேளையில், குறைந்த வட்டி வீதச் சூழலின் பின்னணியில் புதிய நிதியியல் சாதனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுச் சேமிப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் அவசியமாகின்றன.

**அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய இறைச் சவால்கள், தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற குறைந்த அரசிறை, விடாப்பிடியான மீண்டெழும் செலவினம், அதிகரித்து வரும் மொத்த நிதியிடலின் தேவைப்பாடுகள் மற்றும் அதன் விளைவான உயர்ந்தளவிலான படுகடன் மட்டம், அத்துடன் அரசிற்குச் சொந்தமான வியாபாரத்தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கான தேவை ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.** பல்வேறு வரி விலக்குகள்/விடுமுறைகள், வரி ஏய்ப்பு மற்றும் பலயீனமான வரி நிர்வாகம் போன்றவற்றினால் வரி அரசிறைத் திரட்டலானது தசாப்த காலங்களாகத் தடைபட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் அண்மைக்கால பின்னடைவு இருந்தபோதிலும், அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்படும் குறிப்பிட்ட சில வரிச் சீர்திருத்தங்கள் இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ள இறைத்

ஊக்குவிப்பு வழிமுறைகளின் காரணமாக வரி அரசிறைத் திரட்டலில் ஏற்படும் பாதகமான அண்மைக்கால தாக்கமானது, எதிர்வரும் காலகட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் மீளெழுச்சியினால் ஈடுசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் எதிர்பார்த்தபடி, எளிமையான, வினைத்திறன்மிக்க மற்றும் சமத்துவமான வரி முறைமைக்குள் வரி இணங்கியொழுகுதலை மேம்படுத்துவதற்கு இடர்நேர்வு அடிப்படையிலான அரசிறை நிர்வாகத்திற்கான இயலளவை விருத்தி செய்கின்ற அதேவேளை, வரித் தளத்தை விருத்தி செய்தல், வரி முறைமையிலுள்ள ஆவணப்படுத்தல் தேவைப்பாடுகளை எளிதாக்குதல் போன்றவற்றின் மூலமாக அரசிறையை மேம்படுத்துவது கட்டாயமாகும். அதேவேளை, வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள், மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்ற தன்னிச்சையான இறைச் செலவினங்களின் அதிகரித்து வரும் பங்கானது இறைத் தொழிற்பாடுகளில் தொடர்ந்து அழுத்தத்தை கொடுப்பதுடன் இது அரசாங்கத்தின் செலவினத்தைச் சிக்கனப்படுத்தும் திட்டங்களுக்கு சவாலாக அமைகின்றது. குறைந்த தாழ்ந்த அரசிறைச்சேகரிப்பு மற்றும் இறுக்கமடையும் நிதியியல் நிலைப்பாடுகளின் சூழலில் ஒப்பீட்டளவில் பாரிய அரச செலவினங்கள், உயர் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகளுக்கு வழிவகுத்து குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் அரசாங்கத்தின் பாரிய படுகடன் பணிக் கொடுப்பனவுகளுடன் இணைந்து, அதிகரித்துவரும் கடன்பாட்டு தேவைகளுடன் எதிர்வரும் காலத்தில் கணிசமான அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கு அரச செலவினங்களின் காத்திரமான முகாமைத்துவத்தை தேவைப்படுத்துகின்றன. எதிர்வரும் காலங்களில் விரிவாக்கமல்லாத மூலங்களினூடாக பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கான தேவையை இது சுட்டிக்காட்டுகின்றது. ஒப்பீட்டளவில் உயர் இறைப் பற்றாக்குறை மற்றும் அரச படுகடன் ஆகியவற்றைக் குறைப்பதன் மூலம் இறைத் திரட்சிப்படுத்தலுக்கான கடந்தகால முயற்சிகள் எதிர்பார்ப்புகளை விடக் குறைந்த பெறுபேறுகளை கொண்டிருந்தன. இந்தப் பின்னணியில், இறைத்திரட்சியை உறுதிப்படுத்துவதற்கும், எதிர்வரும் காலகட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீளெழுச்சிக்கு வசதியளிப்பதனைத் தொடர்வதற்குமிடையே அரசாங்கம் ஒரு நியாயமான சமநிலையைப் பேண வேண்டும்.

**குடித்தொகையின் பின்தங்கிய பிரிவுகள் மீது கொவிட்-19 நோய்ப்பரம்பல் ஓர் விகிதாசாரமற்ற தாக்கத்தைக்கொண்டு வருமானம் தொடர்பானவை மட்டுமின்றி குறுங்காலத்தில் சமூகப்பொருளாதார நலனையும் நீண்ட காலத்தில் உற்பத்திறனையும் பாதிக்கும் ஏனைய விடயங்கள் தொடர்பான சமமின்மைகளை மோசமாக்கியுள்ளது என்பதனை எதிர்வரும் காலத்தில் மேற்கொள்கிற கொள்கைத் திருத்தங்கள் கருத்திற்கொள்ளவேண்டும்.** உலகத்திலும் இலங்கையிலும் அவதானிக்கப்பட்டவாறு கொவிட்-19 ஒரே மாதிரியான தாக்கத்தை அனைவரின் மீதும் கொண்டிருக்கவில்லை. வீட்டிலிருந்து வேலைசெய்யும் வாய்ப்புக்கள் மற்றும் சம்பளத்துடனான விடுமுறை என்பன கிடைக்காத தொழில்வாய்ப்புத் தன்மைகளைக்கொண்ட தாழ்ந்த வருமான குடியிருப்புக்களில் உள்ள குறைந்த கூலி தொழிலாளர்களே அதிகளவு பாதிப்படையக்கூடிய பிரிவுகளாகக் காணப்பட்டனர். வறுமையில் ஓர் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் கடந்த பல தசாப்தங்களாக வருமான சமமின்மைகளின் அடிப்படையில் இலங்கை பெருமளவிலான மாற்றத்தைக் காணவில்லை. குடியிருப்பாளர் அளவீட்டின் 1953இலான சுற்று மற்றும் 2016இலான சுற்றுக்களுக்கிடையே மிகவும் வறுமையான 20 சதவீதத்தோரினால் பெறப்படும் குடியிருப்பின் வருமானத்தின் பங்கில் பெருமளவிலான மாற்றமில்லை. குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவின அளவீட்டின் 1980/81 முதல் 2016இற்கிடையிலான சுற்றுக்களைக் கருத்திற்கொள்ளும் போது, கினிக் குணகம் 0.43 - 0.48 வீச்சிற்குள் தேங்கிக் காணப்படுகிறது. கடினமான நிலைமைகளுக்கு மத்தியில் ஓரளவிற்கு பெறுநர்களின் வாழ்க்கைத்தரத்தினைப் பேணுவதற்கு பல நிவாரண வழிமுறைகள் அரசினால் வழங்கப்பட்டபோதிலும், உலகளாவிய நோய்த்தொற்றுக் காலத்தின் போது ஜீவனோபாயம் மற்றும் தொழிலிருந்தான வருமானங்களின் இழப்புக்களை கருத்திற்கொள்ளும்போது, வருமான சமமின்மைகள் மேலும் மோசமடைந்திருப்பதற்கான சாத்தியமுள்ளது. கணிசமான இறைச் செலவினம் வறுமை ஒழிப்பு முனைப்புக்கள் தொடர்பில் காணப்படுவதனால் அண்மைக்காலத்தில் இலக்கிடல் மற்றும் இதனால் அரசின் இந்த முயற்சிகளின் செயற்றிறன் தொடர்பான பல கரிசனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நலன் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான தகவல்களை திரட்டுவதற்கான சமூகப் பதிவேடு தகவல் முறைமை தற்போது அபிவிருத்தி செய்யப்படுவது தற்போது காணப்படுகிற விலகல் மற்றும் சேரலின் தெளிவற்ற தன்மையைத் தீர்ப்பதுடன் இந்த நன்மைகளின் வழங்கல் செய்முறையைச் சீராக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கல்விக்கான அணுகுவழி தொடர்பிலான சமமின்மைகளையும் கொவிட்-19 நோய்த்தொற்று எடுத்துக்காட்டியது. டிஜிட்டல் தளங்களுக்கு கல்வி நடவடிக்கைகள் விரைவாக மாற்றமடைந்தமை பாராட்டத்தக்கதாக அமைந்தாலும், இவ்வகையிலான வழிமுறைகளின் செயற்றிறன் தொடர்பில் குறிப்பாக, தாழ்ந்த வருமான குடும்பங்களிலுள்ள மற்றும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பிள்ளைகள் தொடர்பில் கரிசனைகள் எழுப்பப்பட்டுள்ளன. இலங்கையில் கையடக்கத்தொலைபேசியின் நுழைவு அதிகமாகக் காணப்பட்டபோதிலும், 2020இன் முதலரைப் பகுதிக்கான கணணி அறிவு அளவீட்டின்படி கணணி அறிவு 32.0 சதவீதமாகக் காணப்படுவதுடன் குடியிருப்புக்களில் 22.2 சதவீதமானோர் மட்டுமே ஓர் மேசைக்கணணி இல்லாவிடில்

1

ஓர் மடிக்கணணியைக் கொண்டிருந்தனர். இது இணையத்தள வழியான கல்விக்கான அணுகலில் சிக்கல்கள் உள்ளன என்பதனை எடுத்துக்காட்டுகிறது. பொருளாதாரம் படிப்படியாக வழமைக்கு திரும்பினாலும், வருமானம் மற்றும் கல்வி தொடர்பான இவ்வகையான சமமின்மைகள் நடுத்தரம் முதல் நீண்ட காலத்தில் வாய்ப்புக்கள் மற்றும் சமூக முன்னேற்றம் தொடர்பான எதிர்கால சமமின்மைகளை உருவாக்கும் சாத்தியமுள்ளது. ஆகவே, இவ்வகையிலான சமமின்மைகளின் தொடர்ச்சியான விளைவுகள் சந்ததியினர் மீது பாதிப்புக்களைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் இது பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூகப் பொருளாதார நலனையும் எதிர்கணியமாக பாதிக்கும் முடிவில்லாத சமமின்மையை விளைவிக்கலாம். நோய்ப்பரம்பலின் காலகட்டம் நிச்சயமற்றதாக இருக்கும் அதேவேளையில், எதிர்பாராத மற்றும் கணணிமயப்படுத்தல் போன்ற அறிந்த சம்பவங்களிலிருந்து எழும் அமைப்பியல் சார்ந்த மாற்றங்கள் தற்போதுள்ள சமமின்மைகளை எதிர்காலத்தில் மோசமடையச் செய்யலாம். சகலருக்கான நலன் மற்றும் கல்வி போன்ற அவசியமான தொழிற்சந்தையில் வருமான சமமின்மைகளை குறைக்கக்கூடிய கொள்கைகள் இருந்தபோதிலும், பொருளாதாரத்தின் மாறுந்தன்மையை கருத்திற்கொண்டு இந்தப் பணிகளின் தரம், அளவு மற்றும் பொருத்தத்தினை கணிப்பீடு செய்யவேண்டிய தேவையுள்ளது. சமமின்மை வட்டத்திலிருந்து விடுபடுவதில் இந்தப் பணிகளின் வெற்றிகரமான பங்களிப்பிற்கு இது அத்தியாவசியமாகும். தொழிற்சந்தையில் வருமான சமமின்மைகளை குறைக்கக்கூடிய கொள்கைகளின் நடைமுறைப்படுத்தல் மீது அரசு தொடர்ந்து கவனஞ்செலுத்தும் அதேவேளையில், சமூகங்களின் உள்ளடக்கத்தன்மை, சமத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கான புதுமையான பொறிமுறைகள் இறைச் சுமையை அதிகரிக்காது அறிமுகம் செய்யப்படவேண்டும். தொழிற்படையின் கணிசமான பங்கினர் முறைசாராத் துறையில் ஈடுபட்டுள்ளதனால் இவர்கள் எந்தவொரு ஓய்வூதிய அல்லது இளைப்பாற்று நலன் திட்டத்திற்கும் அப்பாலுள்ளனர். தொழிற்படையின் இந்த பகுதியினரின் பாதிப்படையக்கூடிய தன்மையைக் கருத்திற்கொள்ளும் போது, ஓர் பாதுகாப்பு பொறிமுறையாகவும் குறிப்பாக விரைவாக வயதடையும் குடித்தொகையினரின் பின்னணியில் நாடுமுழுவதற்கான பங்களிக்கக்கூடிய ஓய்வூதிய செயற்றிட்டத்தின் அறிமுகம் அவசியமாகும். முறைசாராத் தொழிலாளர்களுக்கான ஓர் ஓய்வூதியத் திட்டமின்மையும் போதுமற்றதான காப்புறுதி உள்ளடக்கமும் எதிர்காலத்தில் இவை அரச பாதுகாப்பு வலைப் பொறிமுறையின் மீதான தங்கியிருப்பினை ஏற்படுத்தலாம். மேலும், அரசினால் முன்னெடுக்கப்பட்ட நலன்புரி முன்னெடுப்புக்களில் பொதுமக்களின் பங்களிப்பினை அனுமதிப்பதன் மூலம் அத்தியாவசியமான பண்டங்கள் மற்றும் பணி வழங்கலின் செயலெல்லை மற்றும் அதன் தரத்தினை மேம்படுத்த உதவலாம்.

**உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களைத் தளர்த்துவதற்கும் இலங்கையில் உணவில் தன்னிறைவினை அதிகரிப்பது அத்தியாவசியமாகின்ற வேளையில், அதிகரித்த வேளாண்மை உற்பத்தியினூடாகப் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.** இறைச்சி மற்றும் முட்டை போன்ற குறிப்பிட்ட உணவு வகைகளில் பொதுவாக இலங்கை தன்னிறைவினை அடைந்திருந்தாலும் தானியங்கள், பருப்பு வகைகள், பால் மற்றும் பால் உற்பத்திகள், சீனி, மாச்சத்துப் பயிர்கள் மற்றும் குறிப்பிட்ட சில பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற முக்கிய உணவு வகைகளுக்கு இறக்குமதியில் தங்கியுள்ளது. மேலும், வறட்சியான காலங்களில் நாட்டின் பிரதான உணவான அரிசியை இறக்குமதி செய்வதற்கு இலங்கை கட்டாயப்படுத்தப்படுகின்றது. இதன்படி, உணவு மற்றும் குடிபான இறக்குமதிகள் நாட்டின் ஒட்டுமொத்த இறக்குமதிகளில் 8 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மோசமடைந்த வெளிநாட்டுத் துறைச் சமநிலையின்மைகளுக்கு மத்தியிலும் நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறையினைக் குறுக்கமடையச் செய்ய உள்நாட்டு உணவு உற்பத்தியினை அதிகரிப்பது அவசியமாயுள்ளது. மேலும், அண்மைக் காலங்களில் வேளாண்மைத் துறையின் மெதுவான வளர்ச்சி ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் தளர்வுறச் செய்துள்ளமையின் விளைவாக வேளாண்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குடியிருப்பாளர்களுக்குத் தாழ்ந்த வருமானங்களைத் தோற்றுவித்துள்ளது. அதேநேரம், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தோன்றிய உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் ஏற்பட்ட ஏற்பாட்டியல் மற்றும் நிரம்பல் பக்க இடையூறுகள் உணவுக் கிடைப்பனவு மற்றும் உணவுத் தெரிவுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள வேளையில், சந்தையில் உணவு விலைகளையும் உயர்த்தியுள்ளன. இதன் விளைவாக, குறிப்பாக வறிய மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் குடியிருப்பு மட்ட உணவுப் பாதுகாப்பில் அச்சுறுத்தலேற்பட்டுள்ளது. எனவே, குறிப்பாக உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவு உற்பத்திகளின் மூலம் நாட்டில் உணவில் தன்னிறைவினை அதிகரிப்பதற்கான புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் காணப்படுகிறது. உணவில் தன்னிறைவை அதிகரிப்பதற்கான உந்தலுடன் நெல் உற்பத்திக்கான இலவச வளமாக்கி மற்றும் ஏனைய பல முக்கிய பயிர்களுக்கான வளமாக்கி உதவித்தொகைகளையும் வழங்க அரசாங்கம் அர்ப்பணித்துள்ள வேளையில், குறிப்பிட்ட வேளாண்மை உற்பத்தி வகைகளின் இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதனூடாக உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கின்றது. இவை உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் விவசாயிகளின் வருமான அளவினை அதிகரிப்பதற்குமான வரவேற்கத்தக்க முன்னெடுப்புகளாகும். இருப்பினும், முன்னோக்கிச் செல்கையில், வேளாண்மையாளர்கள்

### சிறப்புக்குறிப்பு 1
### கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலையில் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு

**உணவுப் பாதுகாப்பு**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் தீவிரமடைந்த அனேகமான பொருளாதார மற்றும் சமூக கரிசனைகளுக்கு மத்தியில் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சனைகளும் கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர் மற்றும் பொது மக்களின் பெருமளவான கவனத்தினைப் பெற்றிருக்கின்றன. சகல மக்களும் எப்பொழுதும் வினைத்திறனான மற்றும் சுகாதார வாழ்க்கை முறையொன்றினைத் தழுவி வாழ்வதற்கு அவர்களது உணவு சார் விருப்புக்களையும் ஆரோக்கியமான உணவுத் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்வதற்கான போதிய, பாதுகாப்பான மற்றும் போசாக்கான உணவுக்கான பௌதிக, சமூக மற்றும் பொருளாதார ரிதியாக அணுக் கூடிய நிலையே உணவுப் பாதுகாப்பென உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு வரைவிலக்கணப்படுத்துகிறது. இவ்வரைவிலக்கணமானது கிடைப்பனவு, அணுகு வழி, பயன்பாடு மற்றும் உறுதிப்பாடு ஆகிய நான்கு பிரதான உணவுப் பாதுகாப்புப் பரிமாணங்களையும் உள்ளடக்கியுள்ளது. ஆதலால், உணவுப் பாதுகாப்பு எண்ணக்கருவானது அடிப்படை உணவு உற்பத்தி மற்றும் போதிய உணவு நிரம்பல் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் என்பனவற்றை விட விரிவானதொன்றாகும். உணவு உற்பத்தி, விநியோகம் மற்றும் களஞ்சியப்படுத்தல், இடம் சார் உணவுக் கிடைப்பனவு, ஊட்டச்சத்தின் போதுமாந்தன்மை, பொருளாதார மற்றும் சமூக அணுக வழி, விருப்புக்கள் மற்றும் தனிநபர்களின் உணவுப் பயன்பாட்டினை மேம்படுத்தும் உணவு சாராத அம்சங்களான சுத்தமான நீர், சுத்தம் மற்றும் ஏனைய நலப்பணிகள் போன்ற உணவுப் பாதுகாப்பின் பாரிய பரிமாணங்களுடன் தொடர்பான பல காரணிகளை இது உள்ளடக்குகிறது. அத்துடன், உலகளாவிய தொற்றுநோய், யுத்தம் அல்லது ஏதேனும் பருவகாலச் சுழற்சி அல்லது ஏனைய எதிர்பாரா நிகழ்வுகள் போன்ற சடுதியான அதிர்ச்சிமிக்க சூழ்நிலைகளிலும் கூட போதிய உணவுக் கிடைப்பனவின் சீரான தன்மை உணவுப் பாதுக்காப்புக் கோட்பாட்டில் உள்ளடக்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பின்மையானது குறுகிய ஓட்டத்தில் பசியை விளைவித்தாலும் தொடர்ச்சியான உணவுப் பாதுகாப்பின்மையானது குறைந்த நிறை, வளர்ச்சி குன்றல், உடல் உருக்கும் மற்றும் நுண்ணூட்டச்சத்துப் பற்றாக்குறைகள் போன்ற போசாக்கின்மைப் பிரச்சனைகளை ஏற்படுத்துவதுடன் கடுமையான சூழ்நிலைகளில் மரணத்தைக் கூட விளைவிக்கிறது. உணவுப் பாதுகாப்பின்மையால் அவசியமாக்கப்படக்கூடிய ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள், உதாரணத்திற்குக் காபோவைதரேற்று நிறைந்த உணவு முறைகள் என்பன அதிகமான உடல் பருமன் மற்றும் நீரிழிவு போன்ற நோய்களுக்கும் உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களுக்கும் வழிவகுக்கும். பொதுவாக, குழந்தைகள் நாட்பட்ட உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுவதனால் கல்வியில் குறைந்தளவிலான பெறுபேறுகளை விளைவாக்குவதுடன் அது அவர்களது பருவ வயதில் பொருளாதார வாய்ப்புக்களையும் மட்டுப்படுத்தும். எனவே, நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைவாக இலங்கையில் பசி மற்றும் வறுமையினைக் குறைப்பதற்கும் அதன் மூலம் மக்களின் பொதுவான நலனையும் தொழிற்படையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் தொடர்ச்சியான நலன் மற்றும் ஊட்டச்சத்துப் பிரச்சனைகளைக் குறைக்கவும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகும். கடந்த சில தசாப்தங்களில் மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை நோக்கி கணிசமான முன்னேற்றத்தினை இலங்கை கொண்டிருந்தாலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கமானது தேசிய மற்றும் குடியிருப்பு மட்டங்களில் உணவுப் பாதுகாப்பின்மையை அதிகரித்துள்ளது.

**உணவுப் பாதுகாப்பு நிலையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம்**

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தரவுகளின்படி, உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னர் உலக சனத்தொகையில் 8.9 சதவீதமான அதாவது அண்ணளவாக 690 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்டவர்களாக மதிப்பிடப்பட்டுள்ளனர். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது உலகில் ஒட்டுமொத்த ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள சனத்தொகையினரில் 83 மில்லியன் தொடக்கம் 132 மில்லியன் தொகையான மக்களைச் சேர்க்குமென உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் ஆரம்ப மதிப்பீடு குறிக்கின்றது. உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முந்தைய தரவுகளின் அடிப்படையில், உணவின் கிடைப்பனவு, நியாயமான விலை மற்றும் தரம் மற்றும் உணவின் பாதுகாப்பு என்ற பரிமாணங்களைக் கருத்திற் கொண்டு 2019 இன் உலகளாவிய உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் 113 நாடுகளில் இலங்கை 66 ஆவது இடத்தைப் பிடித்திருந்தது. அதேவேளை, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு இலங்கையில் நீண்டகாலப் பிரச்சனையாக இருந்து வருகிறது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குடிவிபரவியல் மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பு - 2016 இன் அடிப்படையில் 5 வயது அல்லது அதற்குக் குறைவான குழந்தைகளிடையே வளர்ச்சி குன்றல், உடல் உருக்கம் மற்றும் குறைந்த நிறை முறையே 17.3 சதவீதம், 15.1 சதவீதம் மற்றும் 20.5 சதவீதமாகக் காணப்பட்டது. உலகளாவிய ரீதியாகவும் உள்நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட முடக்கல் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகள் போன்ற முன்னெப்பொழுதுமில்லாத தடுப்பு நடவடிக்கைகளினால் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தடையற்ற உணவு உற்பத்தி மற்றும் விநியோகத்தினை உறுதிப்படுத்த வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைந்து வழங்கல் சங்கிலிகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களில் தாக்கம் செலுத்தியமையினால் அது உணவுப் பாதுகாப்பிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயின் போது ஏற்பட்ட அனுபவங்கள் இதுபோன்ற முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார அதிர்வுகளின்போது பொதுமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியதுடன் இவ்வாறான பிரச்சனைகள் சரியான முறையில் தீர்க்கப்படாவிடின் நாட்டில் தற்போதுள்ள உணவுப் பாதுகாப்பின்மைப் பிரச்சனைகள் மேலும் மோசமடைய வாய்ப்புள்ளதென்பதையும் வலியுறுத்துகின்றன.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் உணவுப் பாதுகாப்பின்மையினால் பாதிக்கப்பட்ட குழுக்கள்**

முன்னிருந்தே உணவுப் பாதுகாப்பின்மை இடர்நேர்வினை எதிர்கொண்டிருந்த பாதிக்கப்படக்கூடிய மக்கள் குழுக்களில் உணவுப் பாதுகாப்பு தொடர்பான இடர்நேர்வானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின்போது விகிதாசாரமற்ற முறையில் அடிப்படைக்கு மேலதிகமாக அதிகரித்துள்ளது. குறைந்த அல்லது சீரற்ற வருமானத்தினைக் கொண்ட தனிநபர்கள், குறைந்தளவிலான அவசரகால உணவு மற்றும் சேமிப்பு இருப்புக்களைக் கொண்டவர்கள், ஊட்டச்சத்துக் குறைபாட்டுப் பிரச்சனைகள் மற்றும் நாட்பட்ட நோய்கள் போன்ற குன்றிய உடல் நிலையினைக் கொண்டவர்கள், பல்வேறு வகையான வழங்கல்கள் மற்றும் சந்தைகளைக் குறைந்தளவில் அணுகக்கூடிய தொலைவான பகுதிகளில் வசிப்பவர்கள், உணவுத் தேவைகளுக்காக முழுமையாகச் சந்தைகளில் தங்கியிருக்கும் நகர்ப்புற மக்களில் சில குழுக்கள், குறைந்தளவான அல்லது போக்குவரத்து வசதிகள் இல்லாத மக்கள் மற்றும் முதியவர்கள், வீடற்றவர்கள் அல்லது இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் பாதிப்படையக்கூடிய குழந்தைகளைப் போன்ற ஏனைய பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் என்பனவே உலகளாவிய நோய்த்தொற்றின் போது மிகவும் பாதிக்கப்பட்ட குழுக்களாகும். அதேவேளை சுற்றுலா, உணவு மற்றும் குடிபானங்கள், பராமரிப்பு மற்றும் போக்குவரத்து போன்ற மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளில் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட தொழிலாளர் பணி நீக்கங்களினாலும் பணிபுரியும் நேரத்தினைக் குறைப்பதன் மூலமும் முழு அல்லது பகுதி நேர வேலைவாய்ப்பு குறைவடைந்துள்ளது. இதனால் இத்துறைகளில் ஈடுபட்டுள்ள தனிநபர்களின் பொருளாதார ரீதியான பாதிப்படையக்கூடிய தன்மை அதிகரித்துள்ளது.

**உணவு முறைமைகளில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம்**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகள் கேள்வி மற்றும் நிரம்பல் பக்கங்களினூடாக உணவு முறைமைகளுக்குக் ஊடுகடத்தப்படுகின்றன. இலங்கையில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தடைசெய்யப்படாவிட்டாலும், நகர்வு மீதான கட்டுப்பாடுகள் காரணமாக உழைப்புச் செறிந்த பயிர்ச்செய்கைக்கும் ஏனைய உணவு நிரம்பல் சங்கிலி நடவடிக்கைகளுக்கும் மனிதவலுப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதற்கேற்ப, முடக்க காலத்தில் பதனிடல், பொதியிடல்இ களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் உள்ளடங்கிய இடைநிலை உணவு தயாரிப்பு செயன்முறைகள் என்பவையும் குறிப்பாக 2020 மார்ச் முதல் ஏப்பிரல் இறுதி வரையிலான காலப்பகுதியில் விதிக்கப்பட்ட நாடளாவிய ரீதியிலான நகர்வு மீதான கட்டுப்பாடுகளிலினால் எழுந்த தொழிலாளர் பற்றாக்குறைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, உணவு விநியோக முறைமைகளுக்கு இடையூறு ஏற்படுவதாலும், சந்தைகளை மூடுவதாலும் அழுகும் உற்பத்திப் பொருட்களின் அறுவடைக்குப் பின்னரான இழப்புகள் முடக்கப்பட்ட காலத்தில் அதிகரித்தன. இத்தகைய நிரம்பல் பக்கத் தடங்கல்கள் உணவு விலையை அதிகரித்தமையினால் குறைவான கொள்வனவுத் திறன் கொண்ட பாதிக்கப்படக்கூடிய குழுக்களை நேர்மறையாகப் பாதித்தது.

இது பல்வேறு நடவடிக்கைகளினூடாக இந்நிலைமையைத் தணிப்பதற்கு அரசாங்கத்தை உடனடியாக தலையிடச் செய்தது. இருப்பினும்கூட, வரைபடம் சி.கு. 1.1இல் குறித்துக்காட்டுள்ளபடி, இலங்கையில் உணவு விலைப் பணவீக்கம் 2020 முழுவதும் உயர்ந்த மட்டத்தில் இருந்தமையானது குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடியிருப்புக்களுக்கு நியாயமான விலையில் உணவு கிடைக்காமல் செய்ததுடன் அவர்களின் உணவுப் பாதுகாப்பில் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாகப் பன்னாட்டு உணவு வர்த்தகத்தில் ஏற்பட்ட இடையூறு பல நாடுகளின் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் ஒரு முக்கிய கரிசனையாகக் காணப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து நிலையான உள்நாட்டு நிரம்பலை உறுதி செய்வதற்காகப் பல நாடுகள் உணவு ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தின. உலகளாவிய நோய்த்தொற்றின்போது அத்தகைய கட்டுப்பாடுகள் ஒரு நாட்டின் உணவு நுகர்வு முறையில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் முக்கியத்துவத்தின் அளவின் அடிப்படையில் தேறிய அடிப்படையில் உணவு இறக்குமதி மேற்கொள்ளும் நாடுகளின் உணவுப் பாதுகாப்பை சவாலுக்குட்படுத்தின.

கேள்விப் பக்கத்தில், இலங்கையின் பொருளாதாரத்தில் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகத் தனிநபர்களின் வாழ்வாதாரங்களை இழப்பது குறிப்பாக, ஏழைகளிடையே ஆரோக்கியமான உணவுக்கான தனிநபர்களின் அணுகு வழியை மட்டுப்படுத்தியிருக்கலாம். உலகளாவிய நோய்த்தொற்றுடன் அச்சத்தினால் உணவினை வாங்குதல் மற்றும் பதுக்கல் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவு அதிகரித்து மக்களில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான அணுகு வழியைக் கட்டுப்படுத்தியது. மேலும், நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நோய்ப் பரவலின் வழிகள் தொடர்பான மக்களின் அபிப்பிராயமும் உணவுக்கான கேள்வியில் ஒரு முக்கிய வகிபாகத்தினை வகித்து, முக்கிய புரதச் சத்து மூலங்களான மாமிச உற்பத்திகள் மற்றும் மீனிற்கான கேள்வி 2020இல் குறிப்பாகத் நோய்த்தொற்றின் இரண்டாவது அலையில் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் சி.கு 1.1
உலகளாவிய நோய்த்தொற்றின் போது உலகளாவிய மற்றும் உள்நாட்டு உணவுப் பணவீக்கம்




*மூலங்கள்:* உலக வேளாண்மை அமைப்பு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகப் பின்பற்றப்பட்ட கொள்கைகள்**

இலங்கை அரசாங்கம், பொருளாதாரத்தின் பல ஆர்வலர்களின் ஆதரவோடு, உலகளாவிய நோய்த்தொற்றுத் தொடர்பான உடனடி நிரம்பல் மற்றும் கேள்விப் பக்கப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதற்கேற்ப, முடக்கல் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள், பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள துறைகளில் பணிபுரிபவர்களுக்குப் பண மற்றும் மானிய அடிப்படையிலான பணிகளை வழங்குவதற்காக அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்தியது. மேலும், அரசாங்கம் முடக்கல் காலத்தில் உணவுகளை வீட்டிற்குக் கொண்டுசேர்த்து குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களை இலக்காகக் கொண்ட அதன் ஊட்டச்சத்து ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தது. அதற்கிடையில், 2020 யூலை-ஓகத்து காலகட்டத்தில் முன்பள்ளிக் குழந்தைகளின் வீடுகளுக்கு உணவுப் பங்கீட்டினை வழங்குவதன் மூலம் பாடசாலைகள் மூடப்பட்டதால் பாடசாலை உணவுத் திட்டத்திற்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைக்கவும் உலக உணவுத் திட்டம் முயன்றது. இருப்பினும், நீண்டகாலமாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை பாடசாலை உணவுத் திட்டத்தின் தொடர்ச்சிக்கு ஒரு சவாலாக இருந்தது. நிரம்பல் பக்கக் கண்ணோட்டத்தில், உணவு நிரம்பல் சங்கிலியில் உள்ள அனைத்து ஆர்வலர்களுக்குமான அவசர நிதித் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கு சலுகைக் கடன்கள், பிற்போடப்பட்ட கடன் கொடுப்பனவு மற்றும் தடங்கலற்ற வியாபாரக் கடன்களுக்கான ஏற்பாடுகள் போன்ற இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளுடன் உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திற்கு ஈடுகொடுப்பதற்கு ஆதரவளிப்பது இன்றியமையாததாயிருந்தது. இந்த இலக்கிற்கு அமைவாக, இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டைக் கணிசமானளவு தளர்த்திச் சந்தையில் வட்டி வீதங்களை வரலாற்றிலேயே குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவந்தது. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரிப்பதற்காக இறை மற்றும் நாணயக் கொள்கை ஆகிய இரண்டு தூண்களதும் ஒருங்கிணைந்த முயற்சியாக வட்டி மானியத் திட்டங்கள், மீள்நிதியிடல் வசதிகள் அதேபோன்று உத்தரவாதக் கொடுகடன் திட்டங்கள் உள்ளடங்கலாகப் பல்வேறு சலுகையான நிதியிடல் வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், இடைத்தரகர்கள் பெருமளவு சந்தை வலுவினைக் கொண்டிருக்கும் வேளையில் உலகளாவிய நோய்த்தொற்றின்போது உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் திரவத்தன்மைக்கான தடைகளை ஒழிப்பது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போதாமலிருக்கலாம். இத்தகையதொரு சூழ்நிலையில், உணவு முறைமையின் சிறந்த தொழிற்பாட்டை உறுதி செய்வதற்கும் அதிக உணவு விலைப் பணவீக்கத்தைத் தவிர்ப்பதற்கும் அரசாங்கக் கொள்வனவு மற்றும் பொதுப் பகிர்ந்தளிப்புக்கள் அதேபோன்று சந்தைகளின் வலுவான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அவசியமாகின்றன. மேலும், உள்நாட்டு வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரலானது சிறு குடும்ப வேளாண்மை மற்றும் நகர்ப்புற வேளாண்மை எண்ணக்கருவினை மீள் அறிமுகப்படுத்தி ஊக்குவித்தது. இந்த எண்ணக்கருவானது உலகளாவிய நோய்த்தொற்றின்போது மக்களின் அடிப்படை உணவுத் தேவைப்பாடுகளை ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பூர்த்தி செய்வதில் உறுதுணையாக இருந்துள்ளது. உணவு உற்பத்தியை ஆதரிப்பதற்காக அரசாங்கம் மானிய விலையில் உரம் வழங்கும் திட்டத்தினைத் தொடர்ந்ததுடன் நெற் பயிர்ச்செய்கைக்கான வளமாக்கிகளை இலவசமாக வழங்கியது. மேலும், உணவு முறைமைகளின் ஊடாக நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் உணவு நிரம்பல் சங்கிலியின் தொடர்ச்சியான தொழிற்பாட்டை உறுதி செய்வதற்கும் உணவு நிரம்பல் சங்கிலியில் பங்கேற்பாளர்களால் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்த சுகாதார அதிகாரிகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**முன்னோக்கிய பார்வை**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது முன்னொருபோதுமில்லாத ஒரு நிகழ்வாக இருப்பினும் கூட, இவ்வாறான அதிர்ச்சிகளைச் சமாளிப்பதற்கும் மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நாட்டின் உணவு முறைமைகள் மற்றும் குடியிருப்பாளர்களின் தாக்கு பிடிக்கும் தன்மையை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது. எனவே, நாட்டின் உணவுப் பாதுகாப்புப் பிரச்சனைகள் சாத்தியமான எதிர்கால அதிர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான குறுங்காலம் முதல் நீண்டகால உபாயங்களைக் கொண்ட ஒரு முழுமையான கொள்கை அணுகுமுறையுடன் தீர்க்கப்பட வேண்டும். வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறன் மட்டத்தினை மேம்படுத்தும் அதே வேளையில், தீவிரமான நிகழ்வுகளின் போதும் கூட உணவு அணுககு வழியை ஆதரிக்கும் வகையில் குறிப்பாக டிஜிட்டல் தளங்கள் மற்றும் வறுமையான நபர்களை இலக்கிடும் வீட்டு விநியோக முறைகள் போன்ற நவீன தொழில்நுட்ப முறைமைகளினூடாக சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக முறைமைகளை மேம்படுத்துவதிலும் கொள்கை ரீதியாக கவனம் செலுத்தல் வேண்டும். மேலும், உலகளாவிய நோய்த்தொற்றின்போது தனியார் துறையினால் நுகர்வோர் சுரண்டல்கள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்குத் தேசிய அதிகாரிகளுக்கு மேலதிகமாக உள்ளூராட்சி அதிகார சபைகளிடமிருந்து நிறுவன ரீதியான ஆதரவுடன் உணவு உற்பத்தித் தரவுத் தளங்கள் மற்றும் பொதுத்துறைப் பகிர்ந்தளிப்பு முறைமைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். மேலும், உணவுக் கேள்வி மற்றும் நிரம்பல் பட்டியலில் பல முக்கிய உணவுப் பொருட்கள் தொடர்பில் இலங்கை இறக்குமதியில் தங்கியுள்ளமையால் உணவுப் பாதுகாப்புக்கு ஏற்படும் இடர்நேர்வுகளைத் தவிர்ப்பதற்குப் பிராந்திய அதேபோன்று நாடுகளுக்கிடையிலான உணவு வர்த்தகத்தை எளிதாக்குவது அத்தியாவசியமாகும். நாட்டின் உணவுப் பாதுகாப்பினை நோக்கிய சாதகமான கொள்கைகளினை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் குறுங்கால சவால்களை முகாமைத்துவஞ்செய்யும் அதே வேளையில் நீண்ட காலத்தில் இதை எய்துவதனை உறுதிசெய்வதற்கு இந்த உணவுப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியினை மேம்படுத்துவது ஓர் அவசியமான நிலைமையாகும். மேலும், நடுத்தரம் முதல் நீண்ட காலத்திற்கு

1

அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைப்பதற்கும் உணவுப் பற்றாக்குறையைத் தடுப்பதற்கும் உணவுப் பணவீக்கத்தை மிதமான மட்டத்தில் பேணுவதற்கும் குளிர் களஞ்சியப்படுத்தல், மேம்படுத்தப்பட்ட பொதியிடல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் உள்ளிட்ட பண்டசாலை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துவது முக்கியமானதாகும். இதேவேளையில் யானைகள், குரங்குகள், மயில்கள் மற்றும் காட்டுப் பன்றிகள் போன்ற காட்டு விலங்குகள் கணிசமான பயிர்ச் சேதங்களை உருவாக்கி இதனால் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை அச்சுறுத்துகின்றன. இது ஒரு சமத்துவமான மற்றும் நிலைநீடித்திருக்கக்கூடிய முறையில் மனித-காட்டு விலங்குகளுக்கிடையிலான முரண்பாட்டினை தீர்ப்பதற்கு ஓர் முழுமையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை தேவைப்படுத்துகிறது. அதேவேளையில், பொருளாதார ரிதியாகப் பாதிக்கப்படக்கூடிய குழுவிற்கு வருமானத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை இயலுமைப்படுத்திக்கொடுப்பதானது எதிர்காலத்தில் எதிர்பாராத வகையிலான அதிர்வுகளைச் சமாளிக்க அவர்களின் தாக்குபிடிக்கும் தன்மையை அதிகரிக்கும். மேலும் தனிநபர்களின் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் ஆரோக்கியமான உணவுத் தெரிவுகளையும் ஊக்குவிப்பதற்கு குறிப்பாக, ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் பொதுமக்களை அறிவூட்டுவதனை இலக்காகக் கொண்டமைதல் வேண்டும். அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட தேசிய வேளாண்மைக் கொள்கையினை இறுதிப்படுத்தும் போது இந்த அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உசாத்துணைகள்:

1. Asian Development Bank (June 2020). Food security in Asia and the Pacific amid the COVID-19 pandemic.
2. Food and Agriculture Organisation (2020). COVID-19: Channels of transmission to food and agriculture.
3. Food and Agriculture Organisation (2020). Food security under the COVID-19 pandemic.
4. Food and Agriculture Organisation (2020). The state of food security and nutrition in the world.
5. The Economist Intelligence Unit (2019). Global Food Security Index Report.
6. United Nations (June 2020). Policy Brief: The impact of COVID-19 on food security and nutrition.

உதவித்தொகைகளில் தங்கியிருப்பதானது அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பெரும் சுமையினை தோற்றுவிப்பதனால் வேளாண்மைத் துறை உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் உணவில் தன்னிறைவினை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவது அத்தியாவசியமாகின்றது. மேலும், பாரியளவில் உதவித்தொகையளிக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பளிக்கப்பட்ட வேளாண்மைத் துறையானது பொருளாதாரத்தில் நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலத்திற்கு வினைத்திறனற்ற வள ஒதுக்கீட்டுக்கு வழிவகுப்பதுடன் குறைந்த விலை மற்றும் பரந்தளவான உணவு உற்பத்திகளுக்கான அணுகல் வழியின்மையினால் குடியிருப்பாளர்களின் உணவுப் பாதுகாப்பிலும் அச்சுறுத்தலேற்படுத்தலாம். ஆதலால், உற்பத்தியை அதிகரிப்பதற்கும் வேளாண்மைச் செயற்பாடுகளில் தொழில்நுட்பப் பயன்பாட்டினையும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் வேளாண்மைச் சமூகத்திற்கு நிறுவனசார் ஆதரவு அளிக்கப்பட வேண்டும். மேலும், வேளாண்மை உற்பத்திகளுக்கான சந்தைகளின் அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல், பண்டகசாலை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்தல் மற்றும் குறிப்பாக உணவுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதனூடாகப் பெறுமதிச் சங்கிலியில் முன்னோக்கிய இணைப்புக்களை வலுப்படுத்தல் என்பன உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியம் என்பதுடன் இதன் மூலம் உணவில் தன்னிறைவு அதிகரிக்கும். இத்தகைய கொள்கைகள் வேளாண்மையாளர்களினால் சிறந்த விலை பெற்றுக்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தி அவர்களது குடியிருப்பாளர்களின் வருமானத்தையும் மீள்முதலீட்டு இயலுமைகளையும் மேம்படுத்தும். மேலும், நிலத்தின் உற்பத்தித்திறன் மிக்க பயன்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கும் நிலக் கூறாக்கல் பிரச்சனையைத் தீர்ப்பதற்குமான நிலச் சந்தை மறுசீரமைப்புக்களையும் தேவைப்படுத்துவதன் மூலம் வேளாண்மைச் செயற்பாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொறிகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கலாம். வேளாண்மை உற்பத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடுகளுக்கு முறைசார் நிதியியல் துறையினூடான வேளாண்மையாளர்கள் கொடுகடன் அணுகலைப் பெற்றுக்கொள்வதற்கு இத்தகைய மறுசீரமைப்புகள் ஆதரவளிக்கும்.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது தொழிற்படையின் பலயீனங்கள் மற்றும் பாதிப்படையக்கூடிய தன்மைகளை எடுத்துரைப்பதுடன் உயர் வருமானப் பொருளாதாரமொன்றாக நாட்டின் நிலைமாற்றலுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மற்றும் இயலாற்றலுடைய தொழிற்படையின் உருவாக்கத்திற்கு வழியமைப்பதற்கு ஊழியச்சந்தை சீர்த்திருத்தத்திற்கான அவசரத் தேவையையும் வலியுறுத்துகின்றன.** ஆண்டுகாலப்பகுதியில், காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் தொழிற்சந்தை குறிகாட்டிகளுக்குமிடையில் குறிப்பிடத்தக்க தொடர்பின்மை நிலவியதுடன், தொழிற்படையின் அளவீடுகள் மற்றும் அளவுகளில் குறைபாடுகள் இருக்கக்கூடிய சாத்தியத்தை எடுத்துரைக்கிறது. இது உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியிலும் அவதானிக்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட காலாண்டுத் தரவுகளுக்கு மேலதிகமாக, இலங்கையில் விரைவாகக் கிடைக்கத்தக்க குறிகாட்டிகளின் பற்றாக்குறைகள் இவ்வாறான தளம்பலான காலப்பகுதியில் தொழிற்படையின் போக்குகளின் ஏதேனும் அதேநேர பகுப்பாய்வினை மேற்கொள்வதைச் சிரமமாக்குகிறது. எனினும், பொருளாதாரமானது சீரான முறையில் வழமைக்கு திரும்பினாலும் பின்பற்றப்படவேண்டிய "பௌதீக

இடைவெளி” மற்றும் கடுமையான சுகாதார ஒழுங்குவிதிகள் என்பன பொருளாதாரத்தின் மீது சில நீடித்த விளைவுகளை ஏற்படுத்தும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், தாழ்ந்த வருமானக் குடியிருப்புக்களின் தாழ்ந்த வருமான தொழிலாளர்களே அதிகம் பாதிப்படையக்கூடியவர்களாவர். அதாவது, முறைசாராத்துறை தொழிலாளர்களும் முறைசார் துறை தொழிலாளர்களுக்கு மத்தியில் குறைத்தொழில் பிரிவினரும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். 2019இன் வருடாந்த தொழிற்படை அளவீட்டின் அடிப்படையில், 57 சதவீதத்திற்கு அதிகமான தொழிலாளர்கள் முறைசாராத் துறைகளில் பணிபுரிகின்றனர். இதில் ஏறத்தாழ 61 சதவீதமானவர்கள் வேளாண்மையல்லாத் துறைகளில் பணியாற்றுகின்றனர். பணிகள் மற்றும் விற்பனைப் பணியாளர்கள், வேளாண்மைத் துறையிலுள்ள தொழிலாளர், கைவினைப்பொருள் தொழிலாளர்கள், ஆலை மற்றும் இயந்திர இயக்குநர்கள் மற்றும் ஏனைய ஆரம்பத்தொழில் போன்ற அதிகம் பாதிப்படையக்கூடிய முறைசாரா தொழில்களில் ஏறத்தாழ 88 சதவீதமானவர்கள் இருப்பதாகவும், இவை மொத்த தொழில்நிலையில் 50 சதவீதமாக இருப்பதாகவும் தொழிற்பிரிவுகளின் விரிவானதொரு பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகிறது. இத்துறைகளில் பணியாற்றும் தேர்ச்சியற்ற ஊழியர்களின் பாதிப்படையக்கூடிய தன்மை கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றுக்காலம் போன்ற குழப்பங்கள் மாத்திரமல்லாது எதிர்காலத்தில் கணனிமயப்படுத்தல் மற்றும் தன்னியக்கமாக்கல் என்பனவற்றாலும் ஏற்படலாம். இது தொடர்பில், தாழ்ந்த மட்ட கல்வித் தேர்ச்சி மற்றும் குறைந்த வருமான குடியிருப்புக்களிலுள்ளோருக்கு நிரந்தர தொழில்வாய்ப்பினை வழங்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் அத்தகைய குடியிருப்பினர் மோசமான வறுமை நச்சுவட்டத்திலிருந்து தங்களை விடுவித்துக கொள்வதற்கு வாய்ப்பொன்றினை வழங்குவதனால் சமூக நோக்கிலிருந்து பார்க்கும்போது வரவேற்கத்தக்கதாகவுள்ளது. எனினும், பொருளாதாரத்தின் படிப்படியான மாற்றம் மற்றும் தொழிற்படையில் ஒரேநேரத்தில் தலைமுறை “X” மற்றும் தலைமுறை “Y” ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும், அரச துறையிலிருந்து தனியார் துறைக்கான தொழில்நிலைகளில் ஓர் தெளிவான மாற்றம் காணப்படாதது ஆச்சரியத்திற்குரிய விடயமாகவுள்ளது. செயலாற்றத்துடன் தொடர்புபடுத்தப்படாத கூலிகள் மற்றும் ஓய்வூதிய நன்மைகளுடன் கூடிய அரச துறை தொழில்களின் நிபந்தனையற்ற பணிநிரந்தரத்தன்மை போன்றவற்றினால் உருவாக்குகின்ற “நல்ல” அரச துறை தொழில்கள் மற்றும் “மோசமான” தனியார் துறை தொழில்கள் என்பவற்றுக்கிடையிலான பிளவினை இது மீளஉறுதிப்படுத்துவதாக இருக்கலாம். மேலும், ஏதேனும் செயலாற்றல் தொடர்பான அளவுகோல் இல்லாமையானது வளர்ந்துவரும் அரச துறையின் உற்பத்தித்திறனில் எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருந்து இதனால் குறைத் தொழிலின்மை மற்றும் “மறைமுகமான தொழிலின்மை” ஏற்படலாம். அனைத்துக் கல்வி மட்டங்களிலும், தொழிற்படையின் திறனை அதிகரிப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சியொன்று தேவைப்படும் அதேவேளையில் நாட்டின் துறை ரீதியான முன்னுரிமைகளுடன் ஒத்திசைவாக்க வேண்டும். பல்வேறு கைத்தொழில்களுடனான கலந்துரையாடல்கள் அனைத்து முக்கிய துறைகளிலும் பரந்தளவில் தேர்ச்சிபெற்ற மற்றும் ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடுள்ளமையை வெளிப்படுத்துகின்றன. இது, இளைஞர்களிடையேயான உயர்ந்தளவிலான தொழிலின்மை மட்டங்களுடன் ஒப்பிட்டு ஆராயப்படல் வேண்டும். இவற்றில் பெரும்பங்கு க.பொ.த (உயர்தரம்) கல்வித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொண்டோர் உள்ளடங்குகின்றனர். கல்வித் துறையானது முக்கியமான அரச மற்றும் தனியார் கைத்தொழில் ஆர்வலர்கள் இணைந்து பொருளாதாரத்தின் தொழிலாளருக்கான தேவைகளை இனங்காண்பது மற்றும் திறன்களை மேம்படுத்தல் மற்றும் வேறு திறன்களை கற்றல் தொடர்பான முயற்சிகளில் கவனஞ்செலுத்தல் ஓர் அவசிய தேவையாகும். தொடர்ச்சியான தொழில் அடிப்படையிலான கற்றல் செயன்முறையொன்றினூடாக எதிர்காலத்திற்கும் பொருத்தமான இலத்திரனியல் திறன்களின் அபிவிருத்தியும் உள்ளடக்கப்படவேண்டும். மேலும், இலங்கையின் தொழிற்படையின் பாதிப்படையக்கூடிய தன்மையை குறைத்து அவர்களுக்கு கண்ணியமான தொழில்வாய்ப்புக்களை உறுதியளிக்கும் அதேவேளையில் பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்கு ஓர் செயற்றிறனான பங்களிப்பினை மேற்கொள்வதற்கு நீண்ட காலமாகக் காணப்படும் சிக்கல்களான தாழ்ந்த மட்டங்களிலான பெண்களின் தொழிற்படை பங்கேற்பு, பொருளாதாரத்தில் உயர்ந்த மட்டங்களிலான முறைசாராத் தொழில்நிலை மற்றும் அதிகரித்துவரும் “கிக் தொழிலாளர்களுடன்” மாறிவரும் தொழில்நிலையின் தன்மை என்பவற்றினை தீர்ப்பதற்கு சகல பங்கேற்பாளர்களின் ஆலோசனையுடனான ஓர் ஒத்திசைவான முயற்சி தேவைப்படுகிறது. முன்னர் குறிப்பிட்டதற்கிணங்க, தேசிய மட்டத்திலான ஓய்வூதியத்திட்டமொன்றின் அறிமுகம் தொழிற்சந்தையில் மேலுமொரு முக்கிய சீர்திருத்தமாகும். இது சமூக நலன் மீதான எதிர்கால இறைச் சுமையை குறைக்கின்ற வேளையில் தொழிற்படையின் நெகிழ்ச்சித்தன்மையை அதிகரிப்பதனை இயலச்செய்யும். மொத்தத்தில், தொழிற்படையின் பண்புசார் அம்சங்களை மட்டுமல்லாது தொழிற்சந்தையின் நெகிழ்ச்சித்தன்மைஇதன் மூலம் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் என்பவற்றைப் பாதிக்கும் சட்டம் சார்ந்த அம்சங்களையும் உள்ளடக்கும் பல்துறை அணுகுமுறையொன்றின் மூலம் தொழிற்சந்தைச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

**அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியை தோற்றுவிப்பதற்காக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் இன்றியமையாதவை என்ற பரவலான அங்கீகாரமுள்ளமையானது**

**இப்பிரிவினை முன்னேற்றுவதற்கு தனித்துவமான கொள்கைத் தலையீடுகளை வகுக்க வேண்டிய அவசியத்தை கோடிட்டுக் காட்டுகின்றது.** வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பிராந்தியங்களிடையேயான வேறுபாடுகளினைச் சமப்படுத்துதல் போன்றவற்றில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்திற்கான தேவைப்பாட்டின் வளர்ந்துவரும் அங்கீகாரத்துடன், நீடித்துநிலைத்திருக்கும் உற்பத்திப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான ஆதரவு பற்றாக்குறையாகவிருப்பதை ஏற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடுள்ளது. இத்துறையினால் முகங்கொடுக்கப்படும் முக்கிய தடைகளிலொன்று, நிதிக்கான அணுகுவழியாகும். ஒருபுறம் பிணைகளுக்கான பற்றாக்குறை, பலயீனமான செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் நிதியியல் திட்டமிடல், இடர்நேர்வுகள் பற்றிய மோசமான புரிந்துணர்வு மற்றும் அவற்றிற்கு கிடைக்கக்கூடிய நிதியிடல் வாய்ப்புக்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து ஆதரவைப் பெறுவது தொடர்பில் ஒட்டுமொத்த மோசமான புரிந்துணர்வு போன்ற சிக்கல்களுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் போராடுகின்றன. மறுபுறம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளான நிதியிடுவற்கான பல்வேறு அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்படும் திட்டங்கள் பரவலாக காணப்படுகின்ற போதும், இத்தகைய தொழிற்முயற்சிகளுக்கு கடன் வழங்குதல் தொடர்பாக நிதியியல் துறையானது தொடர்ந்தும் அச்சத்துடன் காணப்படுகின்றன. வழக்கமான கடன்வழங்கல்கல் நடைமுறைகளிலிருந்து வேறுபடும் செயற்றிட்ட மதிப்பீடு மற்றும் சாத்தியக்கூறு பற்றிய மதிப்பீடு அவசியமானதாகக் காணப்படும் அபிவிருத்தி நிதியிடல் நிபுணத்துவம் அல்லது அறிவின் பற்றாக்குறை இதற்குப் பகுதியளவில் வகைகூறுகின்றது. இதன்படி, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தனித்துவமான தேவைகள் மற்றும் அவற்றினால் முகங்கொடுக்கப்படும் வரையறைகளைக் கருத்திற்கொண்டு இத்துறையில் விசேடமான கவனம் செலுத்தப்பட்ட வங்கித்தொழில் சாதனங்கள் மற்றும் பணிகளை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாடு முறைசார் நிதியியல் துறைக்குள்ளது. பல்வேறு கொடுகடன் உத்தரவாத திட்டங்கள் இலங்கைக்கு சிறிதளவு வெற்றியைளித்தாலும், நன்றாக வடிவமைக்கப்பட்ட மற்றும் நன்றாக முகாமைத்துவம் செய்யப்பட்ட கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தின் நிறுவுதலானது சிலி மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் அவதானிக்கப்பட்டவாறு இந்த நிதியியல் இடைவெளியை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கக்கூடும். அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டவாறு தேசிய அபிவிருத்தி வங்கித்தொழில்துறை கூட்டுத்தாபனத்தின் தாபிப்பது சமயத்திற்கேற்றதாக இருக்கின்றது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் கொடுகடனின் கிடைப்பனவை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக, முறைசார் நிதியியல் ஊடகத்திற்கான அணுகும் வழியை மேம்படுத்த அவற்றின் வங்கியினைப் பாதிக்கும் தகுதியின் மேம்பாட்டிலும் கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. அதனூடக அவை நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் முழுவதும் இலாபத்தன்மை, உற்பத்தித்திறன் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்தக்கூடும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வங்கியினைப் பாவிக்கும் தகுதியின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான மற்றொரு வழியாக பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுடன் இணைந்து தொழில்புரியும் ஏனைய நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற தொழில்நுட்ப விழிப்பூட்டல் திட்டங்கள் விளங்குகின்றன. நிதியியல் ஒழுக்கம், நிதியியல் அறிக்கையிடல் மற்றும் நிறுவன மற்றும் வியாபார முகாமைத்துவம் மீது அவ்வாறான திட்டங்கள் கவனம் செலுத்த வேண்டும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் நிதிக்கான மேம்பட்ட அணுகுவழி மற்றும் நிதியியல் எழுத்தறிவானது அவற்றின் செயலாற்றம் மற்றும் முன்னேற்றத்தில் நேர்மறையான சுழற்சித் தாக்கத்தினை கொண்டுவரக்கூடும். இது அவற்றினைப் புதிய தொழில்நுட்பங்கள், அதிகரித்த உற்பத்தித்திறன், மேம்பட்ட தரம் போன்றவற்றைப் பின்பற்றுவதனையும் அவற்றின் இலாபத்தன்மை மற்றும் நீடித்துநிலைத்திருத்தலையும் மேம்படுத்தக்கூடும். அண்மைக்காலத்தில் தொடங்கப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் மற்றும் உள்நாட்டுப் பெறுமதிச்சங்கலிகளின் அபிவிருத்திக்கான முயற்சிகளும், அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் பங்களிப்பினை பலப்படுத்துமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**நிலவும் தாழ்ந்த பணவீக்கம், தாழ்ந்த வட்டி வீதச்சூழலில் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கையின் நிதியியல் துறையானது துரிதமாக பரிணாமடைய வேண்டியுள்ளது.** ஒருபுறம், பொருளாதார ரீதியாக பாதிப்படையக்கூடிய குழுக்களுக்கு, குறிப்பாக மூத்த பிரசைகளுக்கு, அவர்களின் வைப்புக்களுக்கு குறைந்த வருவாய்களின் காரணமாக தாழ்ந்த வட்டி வீத கட்டமைப்பு குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்தும். மறுபுறும், முதலீட்டுச் செலவினை அதிகரிக்க கடன்வழங்கல் வீதமானது தொடர்ந்தும் குறைந்த மட்டத்தில் காணப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஐந்தொகையின் உறுதித்தன்மை குறைவாக இருப்பதன் காரணமாக பாரியளவான முதலீடு மற்றும் வியாபார முயற்சிகளுக்கான வளர்ந்துவரும் கேள்விக்கு நிதியிடுவதில் நிதியியல் நிறுவனங்கள் சவால்களுக்குள்ளாகின்றன. அதேவேளை, பாரியளவான அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் நிதியிடுவதில் நிபுணத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்

இல்லாமையும் பாரியளவான முதலீட்டாளர்களின் நிதியிடல் வழிகளுக்குத் தடையாகவுள்ளது. குறிப்பாக, பாரியளவான அபிவிருத்தித் திட்டங்களில் உள்நாட்டு நிதியிடல் முதலீட்டினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் சூழ்நிலையில் இந்த குறைபாடுகளும் சவால்களும் இலங்கையின் நிதியியல் துறை அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினையும் தேவையையும் சுட்டிக்காட்டுகிறது. தாழ்ந்த வட்டி வீதங்கள் தொடர்பிலான கரிசனைகளைத் தீர்ப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள், மாற்றீடான புதிய, பாதுகாப்பான மற்றும் கவர்ச்சிகரமான சாதனங்கள் என்பவற்றை குறிப்பாக, குறைந்த வருவாய்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சேமிப்பாளர்களுக்கு அறிமுகம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். மூத்த பிரசைகளின் வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக வட்டியை தொடர்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகரித்த செலவுமிக்கதாகவீரப்பதுடன் மாற்றீடான நிதியியல் சாதனங்களின் அறிமுகத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும், ஆயுட்காப்புறுதி, ஆண்டுத் தொகைகள், நம்பிக்கைக் கூறுகள், மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள், மற்றும் பங்குரிமை போன்ற பொதுவாக நாடப்படாததும் விளம்பரப்படுத்தப்படாததுமான நிதியியல் சாதனங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வையும் நிதியியல் அறிவையும் மேம்படுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், தற்போது நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சொத்து முகாமைத்துவம் மற்றும் ஏனைய நிதியியல் ஆலோசனைப் பணிகள் போன்ற பெறுமதிசேர்க்கப்பட்ட பணிகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அதிகளவு அறிவூட்டப்பட வேண்டும். அத்தகைய மாற்றீடுகள், முதியோர் உள்ளடங்கலாக சேமிப்பாளர்கள் சமூகத்திற்கு நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் வாயிலாக சிறந்த வருவாய்களைப் பெற்றுத்தரும். எதிர்பார்க்கப்படும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி, தாழ்ந்த வட்டி வீதச் சூழல் என்பவற்றை கருத்திற்கொள்ளும் சூழ்நிலையில், நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்கல் இயலுமையை மேம்படுத்துவதற்கு நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பிற்கான சாத்தியங்கள் ஆற்றல்மிக்க வகையில் பின்பற்றப்பட வேண்டும். அத்தகைய ஒருங்கிணைப்புக்கள், உள்நாட்டு நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதுடன் பாரிய மூலதனத் தளத்தின் உருவாக்கம், பாரியளவான கொடுக்கல்வாங்கல்களில் நிதியிடுவதற்கு அதன் உள்ளார்ந்த ஆற்றலினை மேம்படுத்துதல், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் நிதியியல் பணிகளின் வீச்சினை விரிவுபடுத்தல் போன்றவற்றினூடாக துறையில் தற்பொழுது காணப்படும் பலவீனங்களைத் தீர்ப்பதன் மூலமாக பொருளாதாரத்தின் நிதியியல் துறையின் ஒட்டுமொத்த வினைத்திறனையும் இலாபத்தன்மையையும் மேம்படுத்தலாம். மிக முக்கியமாக, நிதியியல் நிறுவனங்களின் உறுதியான ஐந்தொகைகள் பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் நிதியியல் தேவைப்பாடுகளுக்கு பணியாற்றுவதற்கான இயலுமையை அதிகரிக்கும் வேளையில் தேவைப்படுகின்றதும் உற்பத்தித்திறன் வாய்ந்ததுமான துறையினருக்கு அதிகரித்த கொடுகடன் பாய்ச்சல்களையும் இயலச்செய்யும்.

**நாட்டின் வட்டி வீத கட்டமைப்பு ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் இருக்குமென எதிர்பார்க்கப்படுவதனால், பல்வேறு நேர்மையற்ற தரப்பினர்களினால் ஊக்குவிக்கப்படும் சலுகைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் பொதுமக்கள் அதிக விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமாகும்.** சேமிப்பிற்கான வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் தாழ்ந்த மட்டத்திற்குக் குறைந்து வருவதால், சேமிப்புக்கள் மீதான குறைந்த வருவாய்களினால் மோசமாக பாதிக்கப்பட்ட சில சமூகக் குழுக்கள் சிறந்த வருவாய்களைக் கொடுக்கும் என்று கூறப்படும் ஆபத்தான மாற்றீகளை நோக்கி ஈர்க்கப்படுகின்றனர். வைப்புக்களைத் திரட்டும் சட்ட விரோத நிறுவனங்களின் மீளெழுச்சியானது, பொதுவாக தாழ்ந்த வட்டி வீதச் சூழலில் வேகமடைகின்றது. இது தொடர்பான இடர்நேர்வுகள் குறித்து மத்திய வங்கி தொடர்ந்து எச்சரிக்கை விடுத்த போதிலும், மிகவும் கவர்ச்சிகரமான வருவாய்களை அளிப்பதாகக் கூறி இத்தகைய நிறுவனங்கள் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் வைப்பாளர்களை கவர்ந்திழுக்க முயற்சிக்கின்றன. மேலும், பல் மட்டச் சந்தைப்படுத்தல் அல்லது வலையமைப்பு சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களின் வடிவத்தில் இலங்கையில் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் செயல்பட முனைகின்றதுடன் இவை பரிந்துரைகளுக்கான அசாதாரண வருவாய்களை உறுதியளிக்கின்றன. இத்தகைய திட்டங்களில் முதலீடு செய்வது அதிகளவு ஆபத்தை ஏற்படுத்துவதால், தடைசெய்யப்பட்ட இத் திட்டங்கள் மற்றும் சட்டவிரோத நிறுவனங்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். தடைசெய்யப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்வதை தவிர்க்கும் அதேவேளை, பொது மக்கள் அனைத்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதுடன் மாற்று முதலீட்டு வாய்ப்புக்களில் உரிய விழிப்புக் கவனத்துடன் செயற்பட வேண்டும். பொதுமக்கள் அவர்களின் விசாரணைகளையும் கரிசனைகளையும் மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கு அனுப்புவதுடன் "உண்மையாக இருக்க முடியாதது" போன்ற சட்ட விரோதமான நிதியியல் திட்டங்களின் மோசடிகளிலிருந்து தப்பிப்பதற்கும் உதவியை நாடலாம்.

**உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகளுடன் டிஜிட்டல் கொடுப்பனவுப் பயன்பாட்டு முறைகள் துரிதப்படுத்தப்பட்ட போதிலும், வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பமானது நிதியியல் துறையின் ஆர்வலர்களின் தயார்நிலையையும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு பொது மக்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துவதையும் தேவைப்படுத்துகின்றது.** உலகளாவிய

நோய்த்தொற்றானது இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளை நோக்கி அதிகளவிலான மக்களை ஈர்ப்பதற்கான வாய்ப்புக்களை நிதியியல் துறைக்கு உருவாக்கியது. கொடுப்பனவு முறைமையினை இலத்திரனியல்மயமாக்குவது வாடிக்கையாளர், வியாபாரிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் நிதியல்லா நன்மைகளை வழங்குகின்றது. கொடுப்பனவு இலத்திரனியல் மயமாக்கல் செயன்முறையின் ஆரம்ப மூலதன முதலீடானது ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தபோதிலும், பணம் அல்லது காகித அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த வேகம் மற்றும் மேம்பட்ட வெளிப்படைத்தன்மையுடன் கொடுக்கல்வாங்கல் மற்றும் நிர்வாகச் செலவுகள் குறிப்பிடத்தக்களவில் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளிற்கு மேலாக செல்லிடத் தொலைபேசிகளின் ஊடுருவலானது குறிப்பிட்டளவில் அதிகரித்துள்ளமையினால், இலத்திரனியல் கொடுப்பனவுகளினை ஊக்குவிப்பது முறையான நிதியியல் முறைமைக்கான பொதுமக்களின் பரந்தளவிலான ஈர்ப்பின் மூலம் நாட்டில் நிதியியல் உள்ளடக்கத்தை மேம்படுத்த உதவமுடிவதுடன் இதன் மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை மேம்படுத்தவும் முடியும். உலகளவில் துரிதமான தொழில்நுட்ப வளர்ச்சியுடன், சமூக வலைத்தளங்கள், திறந்த வங்கித்தொழில் மாதிரிகள் போன்றவற்றின் வழியாக புதிய கொடுப்பனவு முறைகள் உருவாகின்றன. இது தொடர்பாக, வங்கித்தொழில் துறையில் தொடரேட்டு தொழில்நுட்பத்தினை ஏற்படுத்தல் மற்றும் நாணய முறைமையில் மெய்நிகர் நாணயங்களை அறிமுகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலானது, இது தொடர்பில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளது. செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவுச் செயலிகள், கியூஆர் குறியீட்டுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள், விற்பனை மையக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இ-வணிகம் போன்றவற்றின் அறிமுகத்துடன் இலங்கையானது இலத்திரனியல் முறைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ள போதிலும், சில்லறைக் கொடுக்கல்வாங்கல்களில் பெரும்பாலானவை பொருளாதாரத்தில் உள்ள பணம் அல்லது காகித அடிப்படையிலான முறைகள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. இப்பின்னணியில், இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளை நோக்கி மக்களை ஈர்ப்பதற்கு நிதியியல் துறையானது இலங்கையின் பரந்தளவிலான செல்லிடத் தொலைபேசி ஊடுருவலை மேலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இளைய தலைமுறையினர் புதிய கொடுக்கல்வாங்கல் முறைகளை துரிதளவில் பின்பற்றுகின்ற அதேவேளை, தன்னம்பிக்கையில்லாமை மற்றும் பாதுகாப்பு கரிசனைகள் போன்ற காரணிகளால் மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் இத்தகைய முறைமைகளை பயன்படுத்தாமல் உள்ளனர். எனவே, நிதியியல் முறைமையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், நிதியியல் உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்குமான தொழில்நுட்ப வளர்ச்சிகளின் உயர்ந்தபட்ச நன்மைகளை அடைந்துகொள்வதற்கு நாட்டில் இலத்திரனியல் கொடுப்பனவுகளின் பயன்பாட்டினை பிரபல்யமடையச் செய்வதற்கான மேலதிக வழிமுறைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

**இலங்கையில் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் கணிசமான பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்களை அதிகரித்தளவில் ஏற்படுத்துவதுடன், நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பிற்கான முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.** காலநிலை மாற்றம், வனப்பிரதேச உள்ளடக்கத்தின் குறைப்பு, நில அழிவுகள், உக்கலடையாத மற்றும் இலத்திரனியல் கழிவுகள் உள்ளடங்கலான திண்மக் கழிவு அகற்றல், வனவிலங்குகளுக்கான அச்சுறுத்தல்கள், கடலரிப்பு, வளி மாசடைதல், நீர் நிலைகள் மாசடைதல் போன்றவை கடந்த பல ஆண்டுகளாக சூழல் பிரச்சனைகள் தொடர்ந்தும் தோன்றி சூழற் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் நோக்கங்களுக்கு பெரும்பாலும் முரணாக இருக்கின்றன. எவ்வாறாயினும், சமீப காலமாக மீண்டெழும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றம் என்பன இலங்கைப் பொருளாதாரத்தின் பாதிப்படையக்கூடிய தன்மையை அதிகரிப்பதுடன் உள்நாட்டு உற்பத்தி, பொருளாதாரச் செயற்பாடு, சென்மதி நிலுவை மற்றும் வலுப்பாதுகாப்பினையும் பாதிக்கின்றன. இறப்புக்கள் மற்றும் பொருளாதார இழப்புக்கள் போன்ற தீவிரமான வானிலை நிகழ்வுகளின் நேரடி விளைவுகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளை மதிப்பிடுகின்ற உலகளாவிய காலநிலை இடர்நேர்வு சுட்டெண்ணின்படி, 2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக மூன்றாண்டுகளில் வானிலை மாற்றங்களினால் அதிகம் பாதிக்கப்பட்ட முதல் பத்து நாடுகளில் இலங்கையும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தினால் தூண்டப்பட்ட அடிக்கடி நிகழ்வதும் தீவிரமானதுமான இயற்கை அனர்த்தங்களுக்கு இலங்கையின் பாதிப்படையக்கூடிய தன்மை வேளாண்மைத் துறைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைகின்றது. எனவே, காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் வேளாண்மை உற்பத்தித்திறன், உணவுப்பாதுகாப்பு அச்சுறுத்தல், சமமின்மை அதிகரிப்பு போன்றவற்றில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்றன. அதேநேரம், வரண்ட வானிலை நிலைமைகளுள்ள காலப்பகுதியில் இலங்கையின் வலுப்பாதுகாப்பு அதிகளவில் விட்டுக்கொடுக்கப்படுவதுடன், வரண்ட வானிலை நிலைமைகளுள்ள காலப்பகுதியில் நீர்மின் உற்பத்தியை அதிக செலவுமிக்க சூழல் நேயமற்ற அனல்மின் உற்பத்தியினால் பிரதியீடு செய்ய வேண்டியிருப்பதால் நாடு குறிப்பிடத்தக்க வெளிநாட்டு அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கிறது. குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் புத்துருவாக்கத்திலிருந்து

மீள்கட்டுமானம் மற்றும் பதிலீடு என்பவற்றிற்கு வளங்களை திசைதிருப்புகின்ற அதேவேளை ஏனைய அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு நிதிக் கிடைப்பனவுகளை மட்டுப்படுத்தி காலநிலை சவால்கள் பொருளாதாரத்திற்கு இடையூறாகவும் இருக்க முடியும். ஆகவே, காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு முன்னெச்சரிக்கையுடைய முழுமையான அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்திக் கட்டமைப்பொன்று அவசியமாகும். அனர்த்தங்களின் எதிர்மறையான விளைவுகளை தீர்ப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவை பொருளாதாரத்தின் காலநிலையால் பாதிப்படையக்கூடிய தன்மையைக் குறைக்கும் நோக்கில் அனர்த்தத் தடுப்பு, தயார்நிலை, பதிலிறுப்பு மற்றும் மீட்சி வழிமுறைகள் மீதான கொள்கைச் சீர்திருத்தங்களை வலியுறுத்தி ஒரு கட்டமைப்பிற்குள் வலுப்படுத்துகின்ற அதேவேளையில் காலநிலை இடர்நேர்வுகளுக்கெதிராக முழுச் சமுகத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளது. மேலும், அபிவிருத்திச் செயற்திட்டங்களின் சுற்றுச்சூழல் தாக்கத்தின் மீதான விரிவான மதிப்பீடுகளில் விசேட கவனம், மாசுபடுத்துவோருக்கான கட்டண முறைமை, சுற்றுச்சூழல் வரிகள், பசுமை நிதியியல் கருவிகள், போன்ற சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய சந்தைக் கருவிகளை உருவாக்குவதும் ஊக்குவிப்பதும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வும் ஈடுபாடும், நிறுவன ஆதரவுடன் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமையின் அமுலாக்கம் ஆகியவை நாட்டின் அனர்த்த முகாமைத்துவ தோற்றப்பாட்டினை தரமுயர்த்துவதற்கும், பொருளாதாரத்தை நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதற்கும் இன்றியமையாதனவாகும்.

**தகவலை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களில் துல்லியமானதும் உரிய நேரத்திலானதுமான தரவுகள் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றன.** பொருளாதாரத்தின் கொள்கை வகுப்பாளர்கள், ஆர்வலர்கள் மாற்று வழிகளை மதிப்பீடு செய்வதற்கும், தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் உயர் தரத்திலான தரவுகள் இயலச் செய்வதுடன், தவறான மற்றும் காலந்தாழ்த்திய தரவுகள் பொதுமக்களின் தவறான கருத்துக்களின் உருவாக்கத்திற்கும் பொருளாதார மற்றும் சமூகச் செலவுகளை உருவாக்கும் கொள்கைத் தவறுகளுக்குப் பிழையாக வழிகாட்டி பொருளாதார முன்னேற்றத்தையும் உறுதிப்பாட்டையும் பாதிக்கும். இத்தகைய தாக்கங்களை தணிப்பதானது, துல்லியமானதும் போதுமானதுமான மாதிரிகளின் உள்ளடக்கம், தரவின் விழிப்புணர்வான செய்முறை மற்றும் தரவுகளை உடனடியாக பரப்புதல் என்பவற்றில் தங்கியுள்ளது. அதிகரித்த வெளிப்படைத்தன்மை, பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுத்தொகுப்பு மற்றும் தரவுகளைத் திரட்டல் முறைகள் போன்றவற்றை இது தேவைப்படுத்துகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமான முடக்கல் நிலைமை, நகர்வு மீதான கட்டுப்பாடுகள் மரபுரீதியற்ற முறைகளிலிருந்து தரவுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளல் என்பது தொடர்பான கருவிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு போதாமை என்பவற்றுக்கு மத்தியில் மரபு ரீதியான தரவுச்சேகரிப்பு, திரட்டல் முறைகள் சவாலுக்குட்படுத்தப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அளவிடும் தற்போதைய திரட்டல் முறைகளுடன் தொடர்புடைய முக்கியமானதொரு கரிசனையாக வீட்டிலிருந்து பணியாற்றுதல், அதேநேர இணைய வசதித்தளங்களைப் பயன்படுத்தி அலுவல்சாரா பணிகளின் வழங்கல் போன்ற புதிய பொருளாதார நடவடிக்கைகள் குறித்து தரவைப் பெற்றுக்கொள்ளல் காணப்பட்டது. துரிதமாக மாறிவரும் சூழ்நிலைகளுக்கு மாறிவரும் குறித்தவொரு துறையின் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு முன்வரையறுக்கப்பட்ட முறைகளில் தரவுகளை பெற்றுக்கொள்வதற்கான மரபு ரீதியான கட்டமைப்பு அணுகுமுறைகள் போதுமானதாக இருக்காது. எனவே, தகவல் சேகரிப்பு மற்றும் பரப்புதலுக்குப் பொறுப்பான அரச முகவராண்மைகளின் இயலளவைக் கட்டியெழுப்புவதும் இத்தகைய சவால்களுக்கு முகம் கொடுப்பதற்குத் தேவைப்படும் அறிவு, நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட ஆளணியை வலுவூட்டுவதும் இன்றியமையாதது. உலகெங்கிலுமுள்ள நாடுகள் பொருளாதார நடவடிக்கையின் குறிக்காட்டிகள் மீது விரைவாகக் கிடைக்கக்கூடிய அதேநேர இணைய அளவீடுகளைப் பயன்படுத்துகின்றன. பொருளாதார புள்ளிவிபரங்களை பரப்புவதில் தாமதம், முன்வரையறுக்கப்பட்ட காலக்கெடுவில் அதிகளவில் தற்காலிக மதிப்பீடுகளை வெளியிடல் மற்றும் தொடர்ச்சியான பாரிய திருத்தங்களினால் சந்தைக்கு தவறான சமிஞ்சைகளை விளைவித்தமை காரணமாக இது உலகளாவிய நோய்த்தொற்றுக்காலப்பகுதியின் போது முக்கியமாக மாறியது. பொருளாதார ஆர்வலர்களின் பயன்பாட்டிற்குத் தரவுகளின் பொருத்தமான மூலமிடல், முகாமைத்துவம் மற்றும் தரவுப்பகுப்பாய்வு போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்ட தரவு முகாமைத்துவ முறைகளின் அபிவிருத்திக் கொள்கை உருவாக்கங்களில் ஒரு மத்திய பிரிவாகக் கருதப்பட முடியும். செயற்கை நுண்ணறிவு மற்றும் தன்னியக்கமயமாக்கல் போன்ற தீர்மானமெடுத்தல் ஆதரவுக்கருவிகளின் பயன்பாடானது உரிய நேரத்திலான மற்றும் துல்லியமான தரவுகளில் பெருமளவில் தங்கியுள்ளது. இது, உயர் தரத்திலானதும், உரிய நேரத்திலானதுமான தரவு மற்றும் தரவுச் சேகரிப்பிற்கும், தரவு பரப்புதலுக்குமான புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு என்பவற்றின் தேவையை மீண்டும் வலியுறுத்தியதனூடாக உடனடியானதும் துல்லியமானதுமான தீர்மானம் மேற்கொள்ளலுக்கும் பொருளாதார ஆர்வலர்களின் அறிவுறுத்தப்பட்ட கருத்துக்களின் உருவாக்கத்திற்கும் வசதியளிக்கும்.

1

**முன்குறிப்பிட்ட மட்டுப்படுத்தப்பட்ட கலந்துரையாடலானது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்துகின்ற அதேவேளை உயர்ந்த நீடித்துநிலைத்துநிற்கும் மற்றும் சமத்துவமான வளர்ச்சிப் பாதையை நோக்கிய நாட்டின் முன்னேற்றத்தை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு தேவையான கொள்கை சீராக்கங்களின் அவசியத்தன்மை, அவசரத்தன்மை மற்றும் சிக்கல் தன்மை என்பவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றது.** பல கோணங்களிலிருந்து உருவாக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியில் இலங்கைப் பொருளாதாரமானது அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியிலிருந்தான விரைவான கொள்கைப் பதிலிறுப்புக்களின் ஆதரவினால் 2020இல் மீண்டுமொருமுறை அதனது தாக்குபிடிக்குந்தன்மையை காட்டியிருந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று அதேபோன்று பெரும்பாலான மக்களின் ஆதரவினால் உருவாக்கப்பட்ட வலுவான அரசாங்கமும் பொருளாதாரத்தின் நீண்ட காலமாகவுள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மையைத் தீர்ப்பதற்கான கொள்கைகளை மீளமைப்பதற்கான சந்தர்ப்பமொன்றையும் வழங்கியிருந்தன. பொருளாதாரம் 2020இல் தொழிற்பட்டதைப்போன்று குறுங்காலத்தில் கடினமான பாதையில் கவனமாக கடந்து செல்வதனால் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கு மிகவும் அவசியமான சீர்த்திருத்தங்கள் உள்ளடங்கலாக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பேரண்டப் பொருளாதார கட்டமைப்பை தனியார் துறையின் ஆதரவுடன் அமுல்படுத்துவதானது நடுத்தர காலத்தில் பொருளாதாரத் தோற்றப்பாட்டை பலப்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதனூடாக அரசாங்கத்தின் நாடுமுழுமைக்கும் அதேபோன்று அதன் மக்களின் வெவ்வேறுபட்ட பிரிவுகளிற்குமான சுபீட்சம் மற்றும் செழிப்பினை கட்டியெழுப்பும் இலக்கினை அடைந்துகொள்வதை இயலச்செய்யும்.